# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 07

ஜூலை 2019 - ஷவ்வால் - துல்கஃதா 1440




## இயக்குனர் புகழ்
## பா.ரஞ்சித் அவர்களின் உரையும்
## T.M. உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்



## எதிர் வரும் போரில்
## ஈரானா?
## அமெரிக்காவா?



## முஸ்லிம்களுக்கெதிராக இந்தியாவில் நிகழ்த்தப்பட்ட
## அநீதிகளின் தொகுப்பு

## பெரியார் இல்லமும் காயிதே மில்லத்தின் நினைவுகளும்

بسم الله الرحمن الرحيم

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

(திருக்குர்ஆன்: 9:111)


**04** பா.ரஞ்சித் அவர்களின் உரையும் T.M. உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும் (கவர் ஸ்டோரி)

**22** தொடரும் என்.ஐ.ஏ.வின் கைதுகள்.

**24** எதிர் வரும் போரில் ஈரானா? அமெரிக்காவா?

**30** எது முதலில்?

**34** சிலுவைப் போர் 2.0

**40** பெரியார் இல்லமும் காயிதே மில்லத்தின் நினைவுகளும்

**44** முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

**49** இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

**56** முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அநீதிகளின் தொகுப்பு



# வைகறை வெளிச்சம்

ஜூலை 2019 - ஷவ்வால் - துல்கஃதா 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in



## இயக்குனர் புகழ்

# பா.ரஞ்சித் அவர்களின் உரையும் T.M. உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்


> “அல்லாஹு அக்பர்!
> அல்லாஹு அக்பர்!!
> என்று உரக்க கூவுங்கள்.
> அந்த அற்புத முழக்கம்
> அந்த ஏக இறைவனின்
> காதுகளில் உரக்க ஒலிக்கும்.
> உங்களை 2000 ஆண்டுகள்
> அடிமைப்படுத்தி வைத்திருந்த
> உங்கள் எதிரிகள் காதுகளுக்கு
> அழைப்பொலியாக இருக்கட்டும்.”

மர்ஹூம் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் தலீத் மக்களின் விடுதலைக்காக அரை நூற்றாண்டுக்கு மேல் உழைத்தவர்கள். (12 ஆம் வயது முதல் 67 ஆம் வயது வரை) போராட்டங்களை மட்டுமல்ல போர்களையே சந்தித்தவர்.

தலீத் மக்களை விடுவிக்கும் பெரும் போரில் அவர் எல்லாக் கொள்கைகளையும் ஆய்ந்தவர். அவற்றின் வழியில் வாழ்ந்து பார்த்தவர். களங்களை அமைத்தவர். சிறைவாசம், ஆயுள் தண்டனை என்று தன் வாழ்நாளின் ஒவ்வொரு வினாடியையும் தலீத் மக்களின் விடுதலைக்காகத் தந்தவர்.

வீரத்திலும் விவேகத்திலும் சரித்திரம் படைத்தவர். அவருடைய சிந்தனைகள் வரலாற்றுத் தெளிவுகள் பல்கலைக் கழகங்களால், நமக்குத் தந்திட இயலாதவை. அவ்வாறு அவரது சிந்தனையிலும் முயற்சியிலும் முகிழ்ந்த நூல் தான் செந்தமிழ் நாட்டுச் சேரிகள். இந்த நூல் நான் நிறுவி நடத்தி






வந்த விடியல் வெள்ளி "வைகறை வெளிச்சம்" மாத இதழில் தொடராக வெளிவந்ததுதான்.

**அம்பேத்கரின் கவலை**

இந்த நூலில் உமர் ஃபாரூக் அவர்கள் அம்பேத்கர் தனது இறுதி நாட்களில் அடைந்த வேதனை ஒன்றை இப்படி வெளிப்படுத்தி இருப்பார்.

"என் வாழ்வின் லட்சியம் முழுமையாகாமல் போயிற்று என்பதுதான் என் முதல் கவலை."

"ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிறைய செய்வதற்கு நான் விரும்பினேன். அந்த மக்கள் சரிநிகராக அரசியல் அதிகாரங்களை பங்கிட்டுக் கொண்டு ஆளும் வர்க்கமாக ஆவதை பார்க்க விரும்பினேன். என் சொந்த மக்களே என்னை வஞ்சித்து ஏமாற்றாமல் இருந்திருந்தால் இந்த என் விருப்பம் நிறைவேறி இருக்கும்."

"என் உழைப்பின் பயன்கள் அனைத்தையும், படித்த ஒரு கூட்டத்தாரே அனுபவிக்க நேர்ந்துவிட்டது. பயனை அனுபவிக்கின்ற அவர்களோ கடைந்தெடுத்த மூடர்களாக உள்ளார்கள். அவர்களில் ஒருவர்கூட சமுதாய பணியாற்ற தயாராக இல்லை."

"படிப்படியாக பாமரராய் கிராமப்புறங்களில் பெரும் திரளாக உள்ள என் மக்களுக்காக என் கவனத்தை செலுத்த இப்போது விரும்புகிறேன். ஆனால் என் வாழ்நாட்கள் மிகவும் குறுகி விட்டன எனத் தோன்றுகிறது."

"இரண்டாவதாக ஒடுக்கப்பட்ட மக்களிடம் இருந்து யாராவது முன்வந்து என் இயக்கத்தின் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார் என எதிர்பார்த்தேன். அந்த பெரிய பொறுப்பினை தாங்கிக்கொள்ளக்கூடிய ஒருவரையும் காணமுடியவில்லை. அனைவரும் சுயநலம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அற்பத்தனமாக தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்பவர்களாகவும் இருக்கின்றார்கள்."

"மிகச் சிரமப்பட்டு என் மக்களை இப்போதுள்ள நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளேன். தடைகளும் தாழ்வுகளும் இன்னல்களும் ஆயிரம் வந்துவிட்ட போதிலும் மேலும் மேலும் அவர்கள் முன்னோக்கி செல்லட்டும். தன்மானத்துடன் வாழ முன்னேற்றப் பாதையில் அவர்களை அழைத்து செல்ல எனக்கு பின்னால் எவரும் இல்லாமல் போனால், எந்த சூழ்நிலையிலும் தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் இருந்து அவர்கள்

பின்னோக்கிப் போய் விடக்கூடாது. நான் மிக முக்கியம் என கருதும் கடைசி செய்தி இதுவே. என் மக்களுக்கு இவற்றை சொல்வீராக."

## டி.எம்.உமர் ஃபாருக் இன் உரை

நெஞ்சை உலுக்கும் இந்த இறுதி உரையை நிகழ்த்தியவர் வேறு யாருமல்ல. அண்ணல் அம்பேத்கர் தான். இது ஒரு உயிலை போன்றதாகும். கவலையும் கண்ணீருமாக நெஞ்சுருகி கொடுக்கப்பட்ட மரண வாக்குமூலம். இந்த இறுதி உரையை அவர் கொடுக்கும் போது தேம்பித் தேம்பி அழுததாகவும் இடை இடையே நிறுத்தி பெருமூச்சு விட்டதாகவும், அடிக்கடி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு யோசித்து யோசித்து திக்கி திணறி இந்த செய்தியை சொன்னதாகவும் அண்ணலின் உதவியாளர் ராட்டு குறிப்பிடுகிறார்.

இது இந்த தேசத்தில் உள்ள அனைத்து தலித்துகளும் கவலையோடு எண்ணத்தக்கதாகும். அவர் வாழ்ந்த காலத்தில் அவரோடு நில்லாமல் எதிரணியில் நின்றவர்களுக்கும் இது பொருந்தும். ஏனென்றால் அந்த எதிரணியினர் தலித்துகளுக்கு கொடுத்த அந்த மரியாதை அம்பேத்கரால் தான் கிடைத்தது. தனது தாய் தந்தையின் இறுதி ஆசையை அல்லது வேண்டுகோளை அல்லது கட்டளையை நிறைவேற்ற ஒரு மனிதனுக்கு எவ்வளவு பொறுப்பும் கடமையும் இருக்கிறதோ அதைவிட நூறு மடங்கு பொறுப்பும் கவலையும் ஒவ்வொரு நன்றியுள்ள தலித்துக்கும் இருக்க வேண்டும். அப்போதுதான் அவனை ஒரு மனசாட்சி உடைய மனிதனாக கருத முடியும்.



இப்போது அண்ணல் அம்பேத்கரின் அந்த இறுதி உரையை கூர்ந்து கவனிப்போம்.

“மிகச் சிரமப்பட்டு என் மக்களை இப்போதுள்ள நிலைக்கு நிறுத்தியுள்ளேன். தடைகளும், தாழ்வுகளும், இன்னல்களும் ஆயிரம் வந்த போதிலும் மேலும் மேலும் அவர்கள் முன்னோக்கி செல்லட்டும்.” என்கிறார்.

அவர் சொல்லும் என் மக்கள் என்பது யார்? படித்தவர்களா, பணக்காரர்களா அல்லது அரசியல்வாதிகளா இல்லை. அவர் குறிப்பிடுகின்ற என் மக்கள் பஞ்சையாய், பராரியாய் சேறு சகதிகளில் உழன்று கிடக்கிறார்களே அவர்கள் தான் என் மக்கள். அம்மக்களுக்குத் தான் தன் இறுதிக்காலம் வரை பாடுபட்டார்.

பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டின் குடிமக்களாக கூட ஏற்றுக் கொள்ளாமல் அடிமைகளாய் வைக்கப்பட்டு ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டு பாமரராய் இருந்தவர்களுக்கு வாக்குரிமை வாங்கித்தந்தார். அவர்கள் எத்தனை பேர் வாழ்கின்றார்கள் என்பதை பற்றிக்கூடக் கவலைப்படாத இந்த தேசத்தில் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்று அரசை ஆலோசிக்க வைத்தார். அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலில் பங்கு வாங்கித்தந்தார். அவர்கள் இந்த தேசத்தில் மனிதனாக வாழ்வதற்கு பாதுகாப்பு பெற்றுத் தந்தார். மொத்தத்தில் மனிதனாகவே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாத ஒரு தேசத்தில் தலித்துகளை மனிதர்களின் பட்டியலில் கொண்டு வந்து நிறுத்தினார். இத்தனை பலன்களையும் அடைந்து இன்று உச்சாணிக் கொம்பில் இருப்பவர்களை அவர் எம் மக்கள் என்று கணக்கெடுக்க முடியாது.

படிப்பறிவில்லாத பாமரராய், கிராமப்புறங்களில் பெருந்திரளாய் வறுமையுற்று கிடக்கின்ற மக்களைத்தான் அவர் என் மக்கள் என்று குறிப்பிடுகின்றார். அந்த ஒப்பற்ற மாமனிதர் இப்படி ஒரு மரண ஓலம் எழுப்பி ஏறத்தாழ 50 ஆண்டுகள் கடந்துவிட்டன. இதுவரை கிராமப்புற சேரிகளில் எள் முனையும் முன்னேற்றம் உண்டா? தான் பிறரை தொட்டு விடாமலும். தன்னைப் பிறர் தொட்டு விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டிய அவல நிலையில் என் மக்கள் வாழ்கிறார்கள். என்று கவலை உற்றாரே! அந்த நிலை இன்றைக்கு மாறி இருக்கின்றதா? எந்த ஒரு கிராமத்திலாவது மற்றவர்களோடு சேர்ந்து சாதாரண குடிமகன் உட்கார முடியுமா? எந்த ஒரு கிராமத்திலாவது ஒரு தலித் பெண் மற்ற பெண்களோடு ஒரே இடத்தில் குளிக்க முடியுமா? ஒன்றாக சேர்ந்து கோயிலுக்கு போக முடியுமா? எந்த ஒரு கிராமத்திலாவது தலித்துகளை இந்துக்களின் வீட்டில் அனுமதிக்கிறார்களா?

தீண்டப்படாத மக்கள், மிகப் பரந்த இந்து மக்களின் திரளில் சூழப்பட்டுள்ளார்கள், பகை உணர்வு கொண்டவர்களாகவும் உள்ளார்கள். தீண்டப்படாதவர்களுக்கு எதிராக எத்தகைய அட்டூழியங்களையும் செய்வதற்கு இந்துக்கள் வெட்கப்படுவதில்லை என்றார் அண்ணல் அம்பேத்கர். (தொகுதி 19)

மலத்தை திண்ண வைக்கின்றார்கள். சிறுநீரைக் குடிக்க வைக்கிறார்கள். தலித் பெண்களை பலர் முன் நிர்வாண படுத்துகின்றார்கள். பலவந்தமாக பலர்

கூடி கற்பழிக்கிறார்கள். செருப்பு அணிந்து சென்றால் செருப்பால் அடிக்கிறார். கோயிலுக்குள் போக முடிவதில்லை. குளத்தில் இறங்க முடிவதில்லை. இந்துக்கள் வசிக்கும் பகுதியில் குடியிருக்க முடியவில்லை. இவ்வளவு அவமானப்படுத்தும் ஒரு கூட்டத்தில் நின்று கொண்டு தமிழன் ஒற்றுமையை தலித்துகள் வலியுறுத்துவது எவ்வளவு கேவலம். இந்து என்று சொன்னால் எப்படி பார்ப்பானுக்கு முதலிடமோ! அதுபோல்தான் தமிழன் என்று சொன்னால் அதில் வெள்ளாளனுக்குத் தானே முதலிடம்.

### சங்கர மடம்

சங்கர மடத்திலும், சைவ மடத்திலும் தலித்துகளின் நிலை ஒன்று தானே. அவனை எதிர்த்துப் போராட வேண்டிய சமூகம் அவனுக்கு வாழ்த்தொலி எழுப்பி, கொடி பிடித்து கோஷம் எழுப்பிக் கூலி வாங்குகிற நிலைக்கு அவர் சமுதாயத்தை தள்ளியது யார்? எந்த மக்கள் உயரவேண்டும், மனிதர்களோடு மனிதர்களாக வாழவேண்டும், ஆளும் வர்க்கமாக மாற வேண்டும் என்று எண்ணினாரோ அந்த மக்களின் குடிசைகளை கொளுத்தி கொன்று, குவித்து செருப்பணியாமல், குடை பிடிக்க விடாமல், பலரோடு கூடி நிற்க விடாமல், பெண்கள் மேலாக்கு போட விடாமல் தடுத்து இன்று வரை அவர்களை தன் காலடியில் போட்டு மிதித்து வைத்துள்ள அராஜக கூட்டத்திற்கு தலைமை ஏற்று ஜாதி சங்கம் வைத்துக் கொண்டு ஆட்சி அதிகாரத்தை ஆட்டி படைப்பவன் எல்லாம் அவர் மக்களுக்கு தோழனா? ஏன் இந்த தவறான வழிகாட்டுதல்? இப்படித்தான் தங்கள் அரசியல் பிழைப்பை நடத்த வேண்டுமா? எண்ணிப் பாருங்கள். அந்த உலக உத்தமனுக்கு, அவர் கண்ட கனவுக்கு நேர் எதிர் அல்லவா?

ஒவ்வொரு கிராமத்திலும் சேரிகள் தோறும் தீண்டாமைக் கொடுமையால் செத்து மடிகிறார்கள். தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துப் போராடாத நாளே கிடையாது. பண்ணைக்கு வேலைக்கு போன தனது மனைவி பத்திரமாக வீடு வந்து சேர வேண்டும். இது கணவன் கவலை. பள்ளிக்கு சென்ற தனது மகள் பாதுகாப்பாக வந்து சேரவேண்டும். இது பெற்றோரின் கவலை. ஏராளமான சேரிகளின் நிலை இப்படித்தான் இருக்கிறது. வல்லூறுகளுக்கு மத்தியில் தான் தலித்துகள் வாழ வேண்டி இருக்கின்றது. இப்படி ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் என் மக்கள் விடுதலைப் புலிகளுடன் போராட வேண்டுமா? யார் இந்த விடுதலைப்புலிகள்? அவர்களுக்கும் மக்களுக்கும் என்ன தொடர்பு? பார்ப்பனரை வைத்து வேள்வி நடத்தும் ஒரு கும்பல் பறையர்களுக்கு நீதி வழங்குமா?

### ஈழம்

ஈழப் பறையர்களுக்கு சமத்துவம் அளிக்க அவர்கள் தயாராக இருக்கிறார்களா? குறைந்தபட்சம் அவர்கள் அரசியல் அறிக்கையில் அங்குள்ள தீண்டாமைக் கொடுமைகளுக்கும், சாதிக் கொடுமைகளும் தீர்வு சொல்லப்பட்டிருக்கிறதா? தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் அவர்களை தலைவர்களாக ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறார்களா?

கண்ணீர் விட்டு கதறி அழுத நம் தேசப்பிதாவின் கனவு இதனால் நிறைவேறுமா? மொத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கும் தலித்துகளுக்கும் என்ன தொடர்பு? விடுதலைப் புலிகளிடம் தலித்துகள் எதை எதிர்பார்த்து அவர்களுக்காக போராடுவது? மொத்தத்தில் ஒரே பதில்! அவர்கள் தமிழர்கள் என்கிறீர்கள்! இந்த தமிழ் சமுதாயம் என்றைக்காவது அம்பேத்கர் மக்களை தமிழனாக கூட அல்லது மனிதனாகவாவது ஏற்று கொண்டதுண்டா?

இலங்கைத் தீவில் வாழும் தமிழன் நிலைக்கும், தமிழர் சேரியில் வாழும் தலித்துகளுக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது. இந்துக்களின் மலத்தை அள்ளி தான் வயிறு பிழைக்க வேண்டும் என்ற நிலையில்தான் சேரி தமிழர்கள் இருக்கின்றார்கள். சீர்திருத்தவாதிகளே இந்திய சேரிகளை எண்ணிப் பாருங்கள்.

### வரலாற்றுத்துறை

“இந்திய வரலாற்றுத் துறையில் முக்கியமானவை என்று சொல்லக்கூடிய ஆவணங்கள் எதுவும் இல்லை. இந்தியாவில் மக்களிடமிருந்து வரும் தெளிவற்ற மரபுகள், புராணங்கள், கட்டுக்கதைகள் ஆகியவற்றைத் தவிர வேறு உயர்வான வரலாற்றுச் சான்றுகள் கிடையாது. முழுமையான மன்னர்களின் பட்டியல் ஒன்றை தயாரிக்க கூட இயலாத நிலையில் உள்ளோம். சில சமயத்தில் முழு அரச வம்சம் நமக்கு தெரியவில்லை. இஸ்லாமிய ஆட்சி காலம் வரையில் இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற பெரியோர் எவரைப் பற்றியும் உறுதியான காலத்தை கூற முடியாது. ஒரு பேரரசின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதி என்று கூறுவது கூட மிகக் கடினம்.”

என்கின்றார் புகழ்பெற்ற வரலாற்று எழுத்தாளர் கோசாம்பி.

ஆனால் தமிழக வரலாறு இதற்கு மாறாக இருக்கின்றது அல்லவா! கி.பி. 360 இல் இந்தியாவை ஆட்சி செய்த புஷ்யமித்திர கங்கனும் சரி, அதன் பின்னால் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் ஏக இந்தியாவை ஆண்ட இஸ்லாமியர் ஆட்சியிலும் சரி தமிழகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. சங்க காலத்திற்கு முன்பும் சரி, சங்க காலத்திற்குப்

பின்பும் சரி (கி.பி.300 முதல் கி.பி.600 வரை நீங்க) சேர, சோழ, பாண்டிய, பல்லவர்களின் ஆட்சி தான் நடந்துள்ளது. இவர்கள் ஆண்ட வருடத்தில் சிறிது வித்தியாசம் இருந்தாலும் வெள்ளையன் ஆட்சிக்கு முன்பு சேர, சோழ, பாண்டியர் எனும் கொடுங்கோலர்களின் ஆட்சி தான் நடந்துள்ளது.

ஆம்! தலித்துகளைப் பொறுத்தவரை இவர்கள் கொடுங்கோலர்கள் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டு துவக்கத்தில் சுந்தர பாண்டியன் ஆட்சி நடந்ததாகவும், அப்போது சமணமும், பௌத்தமும் மக்களிடத்தில் பரவி இருந்ததாகவும், அவர்கள் ஜாதி ஒழிப்பு சமத்துவக் கொள்கை கொண்டவர்களாக இருந்தார்கள் என்றும், கி.பி. 632 பிறகு திருஞான சம்பந்தன் என்ற பார்ப்பானும், திருநாவுக்கரசன் என்கின்ற வெள்ளாளனும் பௌத்தர்களையும், சமணர்களையும் கொன்று குவித்தார்கள் என்றும், சாதி ஒழிப்பு பிரச்சாரம் செய்த சமண பௌத்த குருமார்களை புலயன் என்றும், இழிமக்கள் என்றும் திருஞானசம்பந்தன் இழித்துரைத்தான் என்றும் சமத்துவத்தை பரப்பிய சமண பௌத்த இலக்கியங்கள் பாலி மொழியிலும் பிராகிருத மொழியிலும் இருந்ததால் தமிழ் மக்களிடத்தில் மொழி உணர்வை தூண்டி விதி, ஊழ்வினை ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் தேவாரம், திருவாசகத்தை தமிழ் மொழியில் பாடி ஆடி மக்களை ஏமாற்றி சைவம், அசைவம் என்கின்ற புதிய பாகுபாட்டை புகுத்தினார்கள் என்பதை நம் வரலாற்றில் தெரிந்து கொள்ள முடிகிறது.

**சைவம் அசைவம்**

இந்த சைவம், அசைவம் என்பது நீதி, அநீதி, தர்மம், அதர்மம் என்ற பாகுபாட்டின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த சைவ சமயம் என்ற பெயரால் புகுந்துவிட்ட வெள்ளாளர் ஆதிக்கத்தை ஒடுக்க சைவ சமய நூல்களை எல்லாம் முடக்கி சிதம்பரம் சிவன் கோவிலில் பார்ப்பனர்கள் பதுக்கி வைத்திருந்ததாக பத்தாம் நூற்றாண்டு இறுதியில் ஆட்சிக்கு வந்த ராஜராஜ சோழன் இந்த சைவ நூல்களை வெளிக்கொணர்ந்து சைவ நெறியை பரப்பி ஏராளமான சிவன் கோயில்களையும் பார்ப்பனர்களுக்கு பொன்னும் மணியும் வழங்கி அவர்களை உயர்வடையச் செய்தான் என்றும் அழகிய பெண்கள் 400 பேர்களை கோயில்களில் தேவடியாளாக நியமித்து தேவதாசி முறையை ஊக்குவித்தான் எனவும், அவன் மகன் ராஜேந்திர சோழன் தன் தகப்பனைப் போலவே கங்கைகொண்ட சோழபுரத்தில் சிவன் கோயிலை கட்டி பார்ப்பனர்களுக்கு ஏராளமான தான தர்மங்களை வழங்கி சைவத்தை பரப்பினான் என்றும், அவன் மகன் குலோத்துங்க சோழன் தன் தகப்பனார், பாட்டனார் போலவே சிவன் கோயில்கள் கட்டி சிவத்தொண்டு புரிந்து சைவத்தை வளர குடவோலை முறையின் மூலம் மக்கள் ஆட்சி செய்தான் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள்.

அந்த அயோக்கிய மன்னர்கள் காலத்தில் தலித்துகளின் நிலை என்ன? இவர்கள் காலத்து இலக்கியங்களில் தலித் மக்களின் நிலை என்ன? இவர்கள் ஆட்சிக் காலத்தில் சேரி முறை இருந்தது. இந்த மன்னர்கள் தலித்துகளை மக்கள் வரிசையில் ஏற்றுக்கொண்டார்களா? சேரி மக்கள் நிலையில் மாற்றம் கண்டார்களா? தீண்டாமை கொடுமைகள் இவர்கள் காலத்தில் குறைந்ததா? குடவோலை முறையில் தலித்துகளுக்கு இடமுண்டா? இந்த கயவர்கள் கட்டிய கோயிலில் தலித்துகள் அனுமதிக்கப்பட்டார்களா? நந்தன், திருப்பாணாழ்வார் போன்ற கோயிலுக்குள் நுழைய முற்பட்ட போராளிகள் கொல்லப்பட்டது இவர்கள் ஆட்சிக் காலத்தில் தானே?

இவர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியங்களிலும் புராணங்களிலும் புலையன் என்றும் பறையன் என்றும் இழிமகன் என்றும் எழுதப்பட்டுள்ளது. இவர்களின் ஆட்சிக்கால தொடர்ச்சி தானே இன்றைய சேரி நிலைகள்? இவர்கள் ஆட்சிக் காலத்தின் தொடர்ச்சி தானே இன்றைய சாதிமுறைகள்? திருவள்ளுவன் எங்கள் ஜாதி என்று உரிமை கொள்ளும் போதே திருவள்ளுவர் காலத்தில் ஜாதி இருந்தது உறுதியாகிறதல்லவா?

“மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்

கீழோர்க்கு மாகிய காலமும் உண்டே”

என்னும் தொல்காப்பியத்திலிருந்து தொல்காப்பியர் காலத்திலும் ஜாதி இருந்துள்ளது என்பது உறுதியாகிறதல்லவா? வரலாற்றில் தமிழன் இலக்கியத்தில் ஜாதியை ஒழித்து சமத்துவத்திற்கான ஆதாரம் ஏதாவது இருக்கிறதா? தமிழ், தமிழன், தமிழ் தேசியம் பேசுவதால் ஜாதி ஒழிந்துவிடுமா? தமிழன் என்று சொன்னாலும் தீண்டத்தகாதவன் தான். இந்து என்று சொன்னாலும் நான் தீண்டத்தகாதவன் தான். “தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!!” என்றால் ஒரு தீண்டத்தகாதவன் எப்படி தலை நிமிர்ந்து நிற்க முடியும்

இந்திய தேசத்தில் விஞ்ஞானம் வளர்ந்து இருக்கின்றது. பொருளாதாரம் வளர்ந்து இருக்கிறது. நாகரிகம் வளர்ந்திருக்கிறது. பண்பாடு வளர்ந்திருக்கிறது. இந்தியா மிகப்பெரிய வல்லரசாக வளரும் காலம் நெருங்குகிறது. ஆனால் இந்த வளர்ச்சி எல்லாம் இந்திய சேரிகளை எட்டி இருக்கிறதா? எந்த மக்களை எண்ணி அம்பேத்கர் கண்ணீர் வடித்தாரோ அந்த மக்களின் நிலை அப்படியேதான் இருக்கின்றது!

இந்திய சேரி மக்களுக்கு உபரி என்பதே கிடையாது. நிலத்தில் பணி புரிந்து அதன் மூலம் கிடைக்கும் கூலியின் மூலம் தங்கள் ஜீவனத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். நிலம் உயர்சாதிக்காரர்கள் சொந்தமானதால் உற்பத்தியில் இவர்களுக்கு எந்தவித தொடர்பும் இல்லை.

### அரசு உதவி = வெட்டியான் வேலை

அரசு உதவியால் மிகச் சிலர் அரசு ஊழியராகவும், மிகச் சிலர் நிலம் உடையவராகவும் இருக்கின்றார்கள். இவர்களிடம் உபரி ஏற்பட வாய்ப்பு இருந்த போதும் சேரி மக்களின் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த இவர்கள் முயலவில்லை. தலித்துகளின் பண்பாட்டு மாற்றம் ஏற்படாமல் இந்து மக்கள் நிர்பத்திக்கின்றார்கள்.

தலித்துகள் கிராமங்களில் செய்துவரும் வெட்டியான் வேலை இந்துக்களுக்கு பிணஞ்சுடுதல், செத்த விலங்குகளை அப்புறப்படுத்துதல் போன்ற இழிவான வேலைகளை தலித்துகள் செய்ய மறுக்கின்ற போது, அதை இந்துக்கள் சகித்துக் கொள்வதில்லை. அவர்கள் மீது கோபம் கொண்டு பன்னெடுங்காலமாக சாகுபடி செய்துவரும் நிலங்களில் இருந்து அவர்களை பலவந்தமாக ஆள்பலம் கொண்டும், காவல்துறை மூலமும், நீதிமன்றத்தின் மூலம் தடுத்து விடுகிறார்கள்.



தங்கள் ஜீவன் அதற்கான இந்த சிறிது நிலமும் போய் விடும் என்று அஞ்சி இந்த இழி தொழிலை தலித்துகள் தொடர்ந்து செய்து வர வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்றார்கள். பட்டம் என்ற கிராமத்தில் ஒன்பது தலித் குடும்பங்கள் இந்த வெட்டியான் வேலையை செய்து வந்தார்கள். தற்போது அவர்களில் பெரும்பான்மையானவர்கள் படித்து நாகரிகம் அடைந்து விட்டார்கள். இதனால் இழிவு தரும் அந்த வேலையை செய்ய மறுக்கிறார்கள்.

இதனால் கோபமடைந்த திருப்பனந்தாள் சைவ மடம், அவர்கள் இதுநாள் வரை சாகுபடி செய்து வந்த நிலத்திற்கு தடை உத்தரவு வாங்கி விட்டார்கள். இதை எதிர்த்து மேல்முறையீடு செய்தபோது, வழக்கு எண் 61/2003 நீதிமன்றம் அவர்களுக்கு 50 ஆண்டுகளுக்கு மேல் சாகுபடி உரிமை இருப்பதை அறிந்து கீழ் நீதிமன்ற தடையை நீக்கி விடுகிறது. இதை ஏற்றுக்கொள்ளாத மேற்படி சைவ மடம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் உள்ளதாகவும் நிலத்தில் பிரவேசிக்கக் கூடாது என்றும் கீழ்க்கண்டவாறு மிரட்டுகிறது.

“தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தாலுகா பட்டம் கிராமத்தில் நமக்கு சொந்தமாக உள்ள நிலங்களில் சர்வே எண் 635/1இல் 97 செண்ட் நிலம் உள்ளது. இந்த நிலம் வெட்டியானுக்கு மானியமாக அளிக்கப்பட்டது. தற்சமயம் நமது நிர்வாகத்தில் வெட்டியான் பணியை யாரும் தொடர்ந்து செய்யாததால் அந்த நிலத்தை வெட்டியான் மானியமாக அறிவிக்கப்பட்டதை ரத்து செய்து கும்பகோணம் கோர்ட்டில் கேஸ் நம்பர் 554/98 வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு நமக்கு சாதகமானதையடுத்து மீண்டும் கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதனை எதிர்த்து நாம் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.”

இவ்வாறு தலித்துகளை மடத்தின் நிர்வாகம் மிரட்டுகிறது. மேற்படி மடத்திற்கு இந்த நிலம் ஒரு பெரிய விஷயம் அல்ல. ஆனால் இப்படி எல்லாம் தலித்துகளை பணியவைத்து இழிவு தரும் வெட்டியான் தொழிலை தொடர்ந்து அவர்களை செய்ய வைக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

இதுபோல் இன்னும் பரவலாக தலித்துகளை வெட்டியான் வேலை செய்ய வற்புறுத்தி அச்சுறுத்தி மிரட்டி வருகிறது. வெட்டியான் வேலை செய்து வந்த நந்தனை கொன்று விட்டு நாயன்மார்களின் பட்டியலில் வைத்துள்ள சைவ சமயம் நந்தனின் சந்ததிகளையும் இப்படி பல நூறு ஆண்டுகளாக அடிமைப்படுத்தி வைத்துள்ளார்கள் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதுபோன்ற தீண்டாமை கொடுமைகளை எதிர்த்துப் போராடுகிற போது வன்முறைகள் ஏவிவிடப்படுகின்றன. இந்த நிர்ப்பந்தத்தை எதிர் கொள்கின்ற போது வழக்குகள்

வருகிறதே ஒழிய சேரிகளில் ஒரு பண்பாட்டு மாற்றத்தை உண்டு பண்ணமுடியவில்லை. பண்பாட்டு மாற்றத்தை விரும்பியவர்கள் முன்னேறுகிறார்கள். சேரிகளில் தங்கள் வாழ்விடத்தை அமைத்துக் கொள்ளாமல் நகர்ப்புறங்களில் அல்லது சேரிகளுக்கு வெளியில் வீடுகளை அமைத்துக் கொள்கிறார்கள். சொந்த பந்தங்கள் தேடி என்றாவது வந்து போகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரசு ஊழியர்களே. இந்த அரசு ஊழியர்களை கணக்கில் கொண்டுதான் தலித்துகளின் முன்னேற்றம் கணக்கில் கொள்ளப்படுகிறது.

இது மிகவும் தவறான ஒரு கண்ணோட்டமாகும். சேரிவாழ் மக்கள் எப்போதாவது வெளியூர் செல்ல பகட்டான மலிவான ஒரு சில ஆடைகள் வைத்துள்ளார்கள். பெரும்பாலும் போலி ஜரிகை மற்றும் கவரிங் நகைகள் வைத்துள்ளார்கள்.

இந்த தோற்றத்தை கண்டு இவர்களின் பொருளாதார நிலைமைகளை கணக்கிட முடியாது. கிராம வளர்ச்சிக்கான அரசின் திட்டங்கள் சேரிகளை சென்றடையவில்லை. கிராமங்களில் கட்டப்படும் அரசு கட்டிடங்கள் மற்றும் விஸ்தரிப்பு சேரியை சென்றடையவில்லை. ஒதுக்கப்படும் கிராம பஞ்சாயத்துகளின் கட்டிடங்கள் கூட சேரிகளில் கட்டப்படுவதில்லை. தலித்துகள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களில் கூட அங்காடிகள் சேரிகளில் அமைக்கப்படுவதில்லை. சாம்பார், ரசம், மோர் என்கின்ற உணவுவகை விசேஷ காலங்களில் மட்டும் கையாளப்படுகிறது. கழிப்பறையைப் பயன்படுத்தும் வழக்கம் இவர்களிடத்தில் ஏற்படவில்லை. சொந்தமாக கழிப்பறை கட்டிக் கொள்ளும் அளவிற்கு இவர்களிடத்தில் பொருளாதார உபரியும் இல்லை. எவ்வளவுதான் சிக்கனமாக இருப்பவர் களுக்கும் மத சடங்கு சம்பிரதாயங்களில் அவர்களின் உபரி அடிபட்டுப் போகிறது.

### விடுதலை உணர்வு

அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வு இவர்களிடத்தில் இருக்கிறது. அதை ஊர்வலங்களிலும் பொதுக்கூட்டங்களிலும் காணமுடிகிறது. "அடங்க மறு. அத்து மீறுவோம்" என்றும் முழக்கமிடுகிறார்கள். ஆனால் ஊர்வலம் முடிந்து சேரிக்குள் நுழையும்போது அந்த வேகம் தணிந்து விடுகிறது.

காரணம் சேரிக்குள் இவர்கள் சிறுபான்மை ஆகிவிடுவது தான். இவர்களை அடக்கி வைப்பதால் அண்டிப்பிழைக்க வேண்டியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சேரிக்குள் முடங்கி கிடக்கிறார்கள். அத்து மீற முடியவில்லை. விளக்கு வைக்கும் நேரம்வரை இவர்கள் உழைக்கும் உழைப்பிற்கு கிடைக்கும் ஊதியம் இவர்களின் அன்றைய தேவையை கூட பூர்த்தி செய்ய முடியவில்லை. வரும் வழியிலேயே கிடைக்கின்ற வேலி முட்களையும், விறகுகளையும் பொறுக்கிக் கொள்வதோடு வரும் வழியில் குழம்பிற்கு நண்டு, நத்தை போன்ற கிடைப்பதைக் கொண்டு வருகிறார்கள். இதன் மூலம் தான் அவர்களின் உணவு தேவை பூர்த்தியாகிறது. இதுதான் இன்றைய தலித்துகளின் நிலை.

### என்ன பதில்?

இப்போது அம்பேத்கர் வடித்த கண்ணீருக்கு தலித் முன்னோடிகள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அம்மக்கள் அறிவில்லாதவர்கள் என்று சொல்லப் போகிறார்களா? இல்லை அம்மக்கள் முன்னேற முயலவில்லை என சொல்லப் போகிறார்களா? அப்படி எல்லாம் ஒருபோதும் சொல்ல முடியாது! அவர்கள் சமத்துவம் பெற வேண்டும் என்று நினைக்கிறார்கள். பட்டாடை களையும், பவுன் நகைகளை அணிய வேண்டும் என நினைக்கின்றார்கள். அது கிடைக்காத போது போலி சரிகைகளையும், போலி நகைகளையும் அணிந்து கொள்கிறார்கள். உயர் சாதியினரைப் போல் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். மற்ற உயர்சாதி பிள்ளைகளைப் போல் தன் பிள்ளைகளும் படித்தால் உயர்வடைய முடியும் என்று நம்புகிறார்கள்.

எவரிடமாவது அடிமைப்பட்டு தன் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புகிறார்கள். ஆனாலும் இந்த கணினி மயமாக்கப்பட்ட உயர்கல்வியை அவர்களால் அடைய முடியவில்லை. சிறைக்கைதிகள் போல சேரிகளில் சிக்கிக்கொண்டு தவிக்கிறார்கள். தீண்டாமை காரணமாய் வேறு எந்த தொழிலையும் செய்ய முடியாமல், போதுமான வருமானம் இல்லாமல் கிடைத்ததை உண்டு தனது அன்றாட பசியைப் போக்கிக் கொள்கிறார்கள்.

ஒரு வேளை உணவு கிடைத்தால் போதும் என்ற மனநிலையில் இருக்கிறார்கள். இவர்களின் குழந்தைகள் போதிய சத்துணவு இல்லாமல் நோயும், நொடியுமாக காணப்படுகிறார்கள். நாகரிகமடைந்த ஓர் உயர் ஜாதிக்காரர் ஒரு நாள் கூட தங்கியிருக்க முடியாத அவலம் சேரியில் நிகழ்கிறது. 25 சதவிகிதம் உள்ள இந்த மக்களின் குடியிருப்பு குறித்த அவல நிலையைக் குறித்து எந்த அரசும் கவலைப்படுவதில்லை.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விளை நிலங்களுக்கு ஏற்ப அதில் உழைத்து உற்பத்தியைப் பெருக்கக் கூடிய அளவிற்கு தலித்துக்களை குடி அமைத்துள்ளார்கள். இவர்கள் அந்த சேரியை விட்டு வெளியேறிவிட்டால் நில உற்பத்தி பாதிக்கப்படும் என்பதோடு, இந்துக்களின் அடிமை வேலைக்கும் ஆள் இல்லாமல் போய்விடும். இதனால் சேரிகளை

விட்டு இந்துக்களின் கொடுமை தாங்காமல் ஒட்டுமொத்தமாக வெளியேற முயற்சித்த கிராமங்களை அதிகாரிகள் தடுத்து அங்கேயே குடியமர்த்திவிடுகிறார்கள்.

தலித்துகள் ஒட்டுமொத்தமாக கலாச்சார பண்பாட்டு மாற்றம் செய்து கொள்வதை அரசு விரும்பவில்லை. 1982இல் நெல்லை மீனாட்சி புரத்தில் நடந்த பண்பாட்டுப் புரட்சியை கண்டு இந்திய அரசு ஆடிப்போனதை வாசகர்கள் அறிவீர்கள்.

### பண்பாட்டுப் புரட்சி

அண்ணல் அம்பேத்கர் தம் மக்களுக்காக இரண்டு லட்சியங்களை கொண்டிருந்தார். ஒன்று தம் மக்கள் அரசியல் காப்புரிமை பெற்று அரசியல் அதிகாரம் பெற்ற சுதந்திரமான மக்களாக வாழவேண்டும். இரண்டாவது அவர்களை சேரிகளில் இருந்து வெளியேற்றி பெரும் எண்ணிக்கையிலான குடியிருப்புகளை அமைத்து அதில் அவர்கள் சுயமாக உழைத்து உயர அரசு வகை செய்ய வேண்டும்.

அப்பகுதி நிலங்களை கையகப்படுத்தி அதை அவர்களிடத்தில் ஒப்படைக்க வேண்டும். இந்த இரண்டு லட்சியங்களும் இனி எதிர்பார்க்க முடியாத ஒன்று. அக்கொள்கைகள் நிறைவேறும் என்று இனி கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது. அம்பேத்கருக்கு நன்றியுள்ள மக்களாக இருந்தால் அவர் காட்டிய பண்பாட்டுப் புரட்சியை கையில் எடுங்கள்.

கடவுள் இல்லை. மதங்கள் குற்றமுடையது என்பதுதான் சீர்திருத்தம் என்று சீர்திருத்தவாதிகள் கூறுகின்றார்கள். இப்படி பேசுகின்ற சீர்திருத்தவாதிகள் தனிமனிதராக மட்டுமே பேச முடிந்தது. குடும்ப உறவு, கூட்டு வாழ்க்கை என்று வரும் போது அவர்களும் ஏதாவது ஒரு கடவுள் கொள்கையில், மத வட்டத்தில் நுழைந்து விட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இன்று வரை இவர்களால் ஒரு தனி வட்டத்தை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை.

விவேகானந்தர், ராமலிங்க அடிகளார் போன்றவர்கள் கடவுள் பக்தராகவும் சீர்திருத்தவாதிகளாகவும் காட்டப்பட்டவர்கள். அவ்வளவு ஏன் நமது காலத்தில் வாழ்ந்த மகாகவி பாரதியார் "சொல்லடி சிவசக்தி என்னை சுடர் மிகு அறிவுடன் படைத்து விட்டாய்" என்று பாடினார். தனது அறிவுக்கும் திறமைக்கும் சிவசக்தி என்ற கடவுள்தான் காரணம் என்கின்றார்.

### சீர்திருத்தவாதி யார்?

"காக்கை சிறகினிலே நந்தலாலா நின்றன் கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா" என்று கடவுள் கண்ணனை நினைத்து உருகினார். "ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள்" என்று கடவுள் பராசக்தியின் அருளால் தான் ரஷ்யப் புரட்சி நடந்தது என்றார். இவர்களை எல்லாம் இந்த சமூகம் புரட்சியாளர்கள் என்றும், சீர்திருத்தவாதிகள் என்றும் ஏற்றுக்கொள்ளவில்லையா? தமிழகம் போற்றும் பகுத்தறிவுவாதி கனக சுப்புரத்தினம் தன் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக் கொள்ளவில்லையா? இப்படி பேதமை கற்பிக்கும் கடவுள் கொள்கையைக் கொண்டவர்கள் எல்லாம் சீர்திருத்தவாதியாக கருதப்படும் சமுதாயத்தில் ஒரு உண்மையான கடவுளை அனைவரும் ஒன்று போல் படைத்த கடவுளை நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? சீர்திருத்தமும் சமுதாய புரட்சியும் ஏன் நீங்கள் செய்யக் கூடாது? ஒரு இந்துவாக இருந்தால் தான் சீர்திருத்தவாதியாக இருக்க முடியும் என்பது தவறான கருத்தாகும். அது இந்துக்களின் சூழ்ச்சியாகும்.

### கொள்கை அடிப்படை

நீண்ட காலமாக நான் தலித் மக்களுக்கு சேவை செய்து வருகின்றேன். எண்ணற்ற துன்பங்களையும், துயரங்களையும், சிறைவாசங்களையும், அவமானங்களையும் சந்தித்திருக்கின்றேன். நான் நடத்தி வந்த இயக்கத்தின் மூலம் பெரியார், அம்பேத்கர் கருத்துக்களோடு இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளையும் கூறி வந்துள்ளேன். தலித் மக்களுக்கு சேவை செய்ய கொள்கைகள்தான் அடிப்படையானது.

### இஸ்லாம்

நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு ஓராண்டுக்கு மேல் ஆகி விட்டது. இப்போது என் பெயர் உமர் பாரூக். நான் ஒரு தீண்டத்தகாதவன் என்ற உணர்வு என்னை விட்டு போய் விட்டது. இதனால் எனது தலித் சேவை எந்தவகையிலும் பாதிக்கப்படவில்லை. இஸ்லாம் ஒரு உண்மையான சீர்திருத்த மார்க்கம். ஆகவே நீங்களும் நான் இந்து இல்லை என்று அறிவியுங்கள்.

அடுத்து உங்களை ஏற்றுக் கொள்ள இன்னொரு சமூகம் தேவைப்படுகிறது. தமிழக அளவில் இரண்டு சமூகங்கள் உங்களை வரவேற்க தயார் நிலையில் உள்ளது.

ஒன்று கிறிஸ்தவம். மற்றொன்று இஸ்லாம். கிறிஸ்தவம் உங்களை அன்புடன் அழைத்தாலும், தலித் என்ற கொடுமை அங்கே தொடர்கிறது. ஆனாலும் இந்து பள்ளன், பறையனை விட ஒரு கிறிஸ்தவ பள்ளன், பறையனுக்கு ஒரு ஆறுதல் இருக்கின்றது.

தலித் கிறிஸ்தவர்கள் கடும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிற பொழுது அந்த

குருமார்கள் வந்து ஆறுதல் அளிப்பார்கள் அவ்வளவுதான். ஆனால் இஸ்லாம் அப்படி அல்ல நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட அடுத்த வினாடியே உங்களை தொடர்ந்த இழிவு நீங்கிவிடுகிறது. நீங்கள் மனிதனாக மதிக்கப் படுவீர்கள். நீங்கள் இஸ்லாமியர் என்ற அடையாளத்துடன் இருந்தாலே அந்த சமூகம் ஆதரவு கரம் நீட்ட தொடங்கிவிடுகிறது. நெஞ்சோடு நெஞ்சாக ஆரத்தழுவிய அரவணைத்துக் கொள்கிறது. இடைவெளி இல்லாமல் இணைத்துக் கொள்கிறது.

உங்களுடைய ஒருவேளை பசியையும் அவர்கள் பொறுத்துக் கொள்வதில்லை. பள்ளிவாசல் என்பது ஒரு கருணை இல்லமாக இருக்கிறது. அல்லாஹ் உங்களை அன்போடு ஏற்றுக் கொள்கிறான். ஏக இறைவன் உங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றான். கருணைக் கடலில் மிதக்க வைக்கின்றான். ஆம்!

உங்கள்மீது சுமத்தப்பட்ட தீண்டாமை எனும் கரையை துடைத்தெடுத்து விடுகின்றான். அம்பேத்கர் வடித்த கண்ணீர் துடைக்கப்படுகிறது. அண்ணலின் லட்சியம் நிறைவேற்றப்படுகிறது. அடிமைப்பட்ட அவரின் மக்கள் அதிகாரம் பெற்றவர்களாக சமூக சம உரிமை பெற்றவர்களாக மாற்றப்படுகிறார்கள்.

அம்பேத்கரின் லட்சியம் நிறைவேற ஒவ்வொரு சிந்தனை பெற்ற மனிதனும் சேரிகளை விட்டு வெளியேறுங்கள். அதன்பின் உங்கள் உழைப்பின் உபரி உங்களின் சொந்தங்களுக்கு போய் சேரட்டும். உங்கள் உள்ளமும், உணர்வும் நீங்கள் கடமைப்பட்டவர்களின் உயர்வில் இருக்கட்டும். இஸ்லாம் இதற்கு என்றென்றும் தடையாக இருக்காது. இஸ்லாமியர் என்கின்ற அடையாளமான தாடியை, தொப்பியை எவ்வித தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளுங்கள்.

அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!! என்று உரக்க கூவுங்கள். அந்த அற்புத முழக்கம் அந்த ஓர் ஏக இறைவனின் காதுகளில் உரக்க ஒலிக்கும்.

உங்களை 2000 ஆண்டுகள் அடிமைப்படுத்தி வைத்திருந்த உங்கள் எதிரிகள் காதுகளுக்கு அழைப்பொலியாக இருக்கட்டும்.

அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!! அஸ்ஸலாமு அலைக்கும்!!! (மர்ஹூம் தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் - செந்தமிழ் நாட்டுச் சேரிகள் - பக்கம் 83-94)

### டி.எம். உமர் ஃபாரூக் இன் சீரிய சிந்தனை

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தன்னுடைய இடைவிடா உழைப்பின் இறுதியின் தனக்கு ஏற்பட்ட நிலையைக் குறிப்பிடுவதை அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக், அவர்கள் (செந்தமிழ் நாட்டுச் சேரிகள் தொடரை எழுதிக் கொண்டிருக்கும் போது டி.எம். மணி) ஊன்றி கவனித்தார். கண்ணீர் வடித்தார்.

அதனால் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பௌத்தம் பற்றி எடுத்த முடிவை ஆய்வுக்கு உள்படுத்தினார். அதற்கு 2010 இல் எழுத்து வடிவம் தந்திட்டார். அந்த நூலே அம்பத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? என்பது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போலவே பெரியாரையும் படித்தார் ஆய்வாளர் மர்ஹூம் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள். பெரியார் அவர்கள் இன இழிவு ஒழிய இஸ்லாம் ஒன்றே நன் மருந்து என்றார்கள். இதில் சாதி பேதங்கள் ஒழிய இஸ்லாத்தில் தீர்வு இருப்பதை தெள்ளிதின் கண்டார்கள். அதை உரக்க முழங்கினார்கள்.

சீலையம்பட்டியில் (தேனி மாவட்டம்) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தீண்டத்தகாத மக்களை அதாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு சாதியை அறவே ஒழித்த சீலையம் பட்டி மக்களை தன் சொந்த செலவில் சென்று பாராட்டினார் தந்தை பெரியார்.

ஆனால் தமிழகத்தில் சிலர் தந்தை பெரியாரோ, அண்ணல் அம்பேத்கர் அவர்களோ இஸ்லாத்தில் தங்களை இணைத்துக் கொள்ளவில்லை எனப் பேசிய போது இவர்கள் இருவரின் போதனைகள், வழிகாட்டுதல்கள் இவற்றைப் பின்பற்றியே நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று உரக்க முழங்கியவர்கள் மர்ஹூம் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள்.

அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தொடக்க நாட்களில் கும்பக்கோணம் பஸ் நிலையத்திற் கெதிராக நிறுத்தப்பட்டிருந்த அறிவிப்புப் பலகை ஒன்றில் பெரியார் அம்பேத்கர் வழியில் டி.எம். மணி இப்போது டி.எம். உமர் ஃபாரூக் என பொறிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்புப் பலகை மர்ஹூம் உமர் ஃபாரூக் அவர்களின் நுட்பமான அறிவையும், அதே போல் தீண்டாமை, தீண்டாமையின் பெயரால் இழைக்கப்படும் அநீதிகள் இவற்றை எத்துணை நடைமுறை யதார்த்தத்தோடு பார்த்தார்கள் என்பதைப் பிரகடனப்படுத்தும்.

### தீன் சுடர்

அதேப்போல் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் அறிவுக் கூர்மை ஆழ்ந்து ஆராய்ச்சிகளைச் செய்து முடிவுகளை எடுக்கும் ஞானம் இஸ்லாத்தைக் கொண்டு தன் மக்களை விடுதலையடையச் செய்யும் ஆர்வம், ஆகியவற்றை உணர்ந்த இஸ்லாமிய இலக்கிய கழகம் - கவிக்கோ அப்துர் ரஹ்மான்

அவர்களின் தலைமையில் இயங்கிய போது தீன் சுடர் விருதை அவர்களுக்கு வழங்கி பெருமை படுத்தியது.

### உமர் ஃபாரூக் இன் கேள்வி

எனவே தீன் சுடர் மர்ஹூம் உமர் ஃபாரூக் அவர்களை நினைவில் கொள்வதும் கொண்டாடுவது என்பது இஸ்லாத்தை ஏற்று சாதியை ஒழித்து நிரந்தர விடுதலை அடைவதுதான்.

தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்பு அவரை உண்மையாகவே பின்பற்றியவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள். ஆனால் சிலர் தயக்கம் காட்டினார்கள். அவர்களைப் பார்த்து தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் இப்படி கேட்டார்;

“எனதருமை சகோதரர்களே இன்னும் இந்த தயக்கம் ஏன்? நான் உங்களை போர் களங்கள் நோக்கி அழைத்தபோது ஓடோடி வந்தீர்கள். நான் உங்களை அறப்போராட்ட களங்களை நோக்கி அழைத்தேன் வந்தீர்கள். சிறைச்சாலைக்கு சென்றேன். உடன் வந்தீர்கள். இப்போது பூரண விடுதலையை நோக்கி அழைக்கின்றேன். ஏன் தயங்குகிறீர்கள்?”

“உங்களை கண்டாலே தீட்டு, பட்டால் பாவம், ஆலயங்களை அண்டாதீர், ஆண்டவனை தரிசிக்காதீர் என்றெல்லாம் தடுத்தவர்களைத்தான் நாம் எதிர்த்தோம். இப்போது நான் இஸ்லாத்தை ஏற்று பள்ளிவாசலுக்குள் சென்று தொழுகையில் நிற்கிறேன். நெருங்கி நில்லுங்கள், இடைவெளி விடாமல் நில்லுங்கள் என அல்லாஹ் முன் நம்மைப் பிணைத்து நிறுத்தும் மார்க்கத்திற்கு அழைக்கின்றேன். ஏன் தயக்கம்?”.

(கும்பகோணம் சாதி ஒழிந்தது நூல் வெளியீடு நிகழ்ச்சியில் பேசியது.)

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் இனி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தீண்டத்தகாத மக்களுக்கு போராடுவது நின்று போகுமா என ஆதங்கப்பட்ட மக்களுக்கு அவர் சொன்ன பதில்;

“நான் இஸ்லாத்தை படித்த பின் பெற்ற பாடம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக போராடுவது என்ற பெரும் பணி இன்னும் அதிக வேகத்தோடு நடக்க வேண்டும் என்பதே!”

என சங்கரன் கோவில் சாதி ஒழிந்தது நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்கள்.

அவருடைய முன்மாதிரியை பின்பற்றி பலர் குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்று சாதிய அடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் நிரந்தர தீர்வு கண்டு உலகமகா சகோதரத்துவத்தோடும், ஆதி நபி ஆதம்(அலை) முதல் அறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பெண்ணம் பெரிய பாரம்பரியத்தோடும் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

இப்படி இஸ்லாத்தை ஏற்றவர்களின் இன்றைய தலைமுறைக்கு சாதியம் என்றால் என்னவென்றே தெரியாது. (இதை முனைவர் தொல். திருமாவளவன் அவர்களும் தனது முனைவர் பட்ட ஆய்வில் உறுதி செய்திருக்கின்றார்கள்) ஆனால் தீன் சுடர் அவர்களின் குடும்பம்....? (அவரது மனைவி ஆயிஷாவைத் தவிர)

அன்பு சகோதரர் ப.ரஞ்சித் அவர்கள் கூர்மையான அறிவுக்குச் சொந்தக்காரரர். இதற்கு அவர் இயக்கிய படங்களே சாட்சி. தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் ஐயா அவர்கள் ஏற்றுக்கொண்ட தீர்வை ஏற்றுக் கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களைப் பற்றி ஆய்வு செய்திட இன்னும் நிரம்ப இருக்கின்றது. அவற்றையும் ஆய்வு செய்து நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

### மீடியாக்களின் சொல்லாட்சி

இயக்குநர் புகழ் பா.ரஞ்சித் அவர்கள் தன் உரையில் தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களைக் குறிப்பிடும் போதெல்லாம் டி.எம். உமர் ஃபாரூக் ஐயா என்றே குறிப்பிட்டார்கள். ஆனால் தி இந்து ஆங்கில இதழ் அனைத்துச் செய்திகளிலும் டி.எம். மணி என்றே குறிப்பிட்டது. ஆனால் “டைம்ஸ் ஆஃப் இந்தியா” நாளிதழ் டி.எம். உமர் ஃபாரூக் என்று இணைத்தே எழுதியது.

### பா.ரஞ்சித் மீதான வழக்கு

முதலில் இராஜ, ராஜ சோழன் பற்றி தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் தன்னுடைய உரையில் கூறியது உண்மையான வரலாறு. அதனை அ.மார்க்ஸ் அவர்களின் பதிவும் உண்மைப்படுத்தி இருக்கின்றது.

சென்னை வாசகர்கள்
இந்த புத்தகத்தை பெற
8248208144
என்ற எண்ணிற்கு
தொடர்பு கொள்ளவும்

# அந்தக் கேள்விகளை எழுப்ப பா. ரஞ்சித்-க்கு மட்டுமல்ல, நமக்கும் உரிமை உண்டு.

அ.மார்க்ஸ் அவர்களின் பதிவு

மதுரை உயர்நீதிமன்றத்தில் இயக்குநர் ரஞ்சித் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் வைக்கப்படும் கேள்விகளையும் சுமத்தப்படும் குற்றச்சாட்டையும் இப்படித் தொகுத்துக் கொள்ளலாம்.

1. ஆதிதிராவிடர் நிலத்தை ராஜராஜன் சோழன் கையகப்படுத்தியதற்கு ஆதாரம் என்ன?


2. ரஞ்சித்தின் பேச்சு மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்பது குற்றச்சாட்டு.

3. ஆயிரம் ஆண்டுகட்குப் பின் ராஜராஜன் குறித்து விமர்சனம் செய்தது ஏன்?

இது குறித்து சில:

1, இந்த 'ஆதிதிராவிடர்', 'ஹரிஜன்' என்கிற சொல்லாக்கங்கள் மற்றும் 'தீண்டாமை', 'காணாமை' முதலான கருத்தாக்கங்கள் எல்லாம் நடைமுறையில் பல்வேறு வடிவங்களில் பலகாலமாய் இருந்தபோதும் பிரிட்டிஷ் ஆட்சி மற்றும் அதற்குப் பிந்திய காலத்தில்தான் இன்றைய சொற்களில் இருக்கமான வரையறைகளுடன் உருவாக்கப் பட்டன. எனவே நேரடியாக இச்சொற்களை ராஜ ராஜனின் பட்டயங்களில் தேடிக் கொண்டிருக்க இயலாது. சமூக ஒதுக்கம் என்பது சங்க காலத்திலிருந்து தொடங்கிவிட்டது. அந்தணன், பாணன், பறையன் என்றெல்லாம் பிரிவினைகளும் ஏற்றத்தாழ்வுகளும் உருவாகிவிட்டன. இன்றைய வடிவத்தில் தீண்டாமை என்பது இல்லாவிட்டாலும் ஒரு மூல வடிவத்தில் அது தோன்றத் தொடங்கி விட்டது. வரலாறு முழுவதிலும் 'பாய்ச்சலூர்ப் பதிகம்', 'கபிலர் அகவல்', 'நந்தன் கதை', 'இராமாயண மகாபாரதங்கள்' எல்லாவற்றிலும் தீண்டாமையின் இந்த proto type களைக் காண முடிகிறது.

அதேபோல "நிலத்தைப் பறித்துக் கொடுப்பது" என்பதையும் இன்றைய பொருளில் பார்க்க இயலாது. இன்றுள்ளது போன்ற வடிவத்தில் அன்று தமிழகத்தில் நில உடைமைகள் கிடையாது. ஆனாலும் நில உரிமைகள் பெரிய அளவில் கீழ்மட்ட , உழவுத் தொழில் சார்ந்த மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு வேதங்கள் ஓதி யாகங்கள் நடத்திய பார்ப்பனர்களுக்குக் கொடுக்கப்பட்டதற்கு வேள்விக்குடிச் செப்பேடுகள் முதலான ஏராளமான பாண்டியர் பட்டயங்கள் முதலியன சான்றுகளாக உள்ளன. tribal and upland people இதற்கெதிராகக் கிளர்ந்து அதிகாரம் பெற முடிந்த காலமாகத்தான் களப்பிரர் ஆட்சிக் காலம் பற்றி, இடைக்காலத்தமிழகச் சமூக மற்றும் அரசமைப்பு குறித்து ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ள, பர்டன் ஸ்டெய்ன் போன்ற அறிஞர்கள் விளக்குகின்றனர்.



கடைச்சங்க காலம் தொடங்கியே (அதாவது சுமாராக ராஜராஜனுக்கு முன் ஏழு, எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே) வேள்விச் சடங்குகள் செய்யும் பார்ப்பனர்களுக்கு ஏற்கனவே சாகுபடியில் உழவுத் தொழில் செய்துகொண்டிருந்த பிரிவினரிடம் இருந்த நில உரிமைகள் பிரித்துக் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இதற்கு உரிய பட்டயச் சான்றுகள் உள்ளன (எ.கா: வேள்விக்குடிச் சாசனம் முதலியன). ராஜராஜனின் காலத்தில் பெரிய அளவில் பிரமதேயங்கள் முதலியன அளிக்கப்பட்டு பார்ப்பனர்கள் நிலை ஓங்கியிருந்தது. இவர்களில் பலர் வடநாட்டில் இருந்து வந்த பார்ப்பனர்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட நில உரிமைகள்

யாரிடமிருந்து பறித்தளிக்கப்பட்டன? பார்ப்பனர்களும், வேளாளர்களும் அன்று ஆதிக்கத்தில் இருந்ததையும். இதர உழவு மற்றும் கைவினை சார்ந்த தொழில் புரிந்த மக்கள் கீழ் நிலையில் இருந்ததையும் வரலாறு ஏற்றுக் கொள்கிறது.

*2.* ஆதி திராவிடர்கள் ராஜராஜன் ஆட்சியில் தனிச்சுடுகாடு, தனிக் குடியிருப்புகள் அமைக்கப் பட்டு பிரிக்கப்பட்டு இருந்ததை ஏராளமான சான்றுகளை முன்வைத்து இன்று சுப்பராயலு, கராஷிமா ஆகியோர் சுட்டிக் காட்டி ஐயத்திற் கிடமின்றி நிறுவியுள்ளனர். இப்படி அவர்கள் தனியாகப் பறைச்சேரிகளில் ஒதுக்கப்பட்டார்கள் எனில் அதன் பெயர் என்ன? அது தீண்டாமை இல்லையா? அப்படிச் சிலருக்குத் தனிக் குடியிருப்புகள் எனில் அது சமூகப் பிளவு இல்லையா?. சோழ மன்னர்களின் காலத்தில் பறையர்கள் எனப்பட்டோர் ஆலயங்களுக்குள் அனுமதிக்கப்படாமைக்கு நந்தன் சரித்திரம் முதலியன சான்றுகள் இல்லையா? ஏதோ மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின் ரஞ்சித்தான் இப்படி சாதி அடிப்படையில் பிளவை ஏற்படுத்துகிறார் என்றால் இதென்ன வேடிக்கை?

*3.* இன்றும் தீண்டாமை உள்ளது. இன்றும் தலித் மக்களின் வீடுகள் கொளுத்தப்படுகின்றன. சாதி மீறிய திருமணங்கள் பிரிக்கப்பட்டு தலித் மக்கள் எரித்துச் சாம்பலாக்கப்படுகின்றனர். அதன் வேர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இங்கு கால் பதித்துள்ளன. இன்றளவும் இதற்குக் காரணமான ஆட்சியாளர்களையும், மன்னர்களையும், பறைச்சேரிகளை உருவாக்கியவர்களையும் சிலை எடுத்துக் கொண்டாடுவதற்குச் சமூகத்தில் மேல்தட்டினருக்கு என்ன உரிமைகள் உள்ளனவோ அதே உரிமைகள், இவர்கள் காலத்தில்தான் பாலும் தேனும் பெருகி ஒடியது என இன்றைக்குப் பேசித் திரிபவர்களை நோக்கி, "அப்படியானால் எங்களுக்கு அன்று ஏன் தனிச் சேரிகள், தனிச் சுடுகாடுகள்?" எனக் கேட்க ரஞ்சித்திற்கு மட்டுமல்ல நமக்கும் உரிமை உண்டு.

(Ref: Y.Subbarayalu, South India under the Cholas, Oxford, 2011)

நொபொரு கராஷிமா, வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம் சோழர் காலம் ( 850 - 1300)

Burton Stein, Peasant State and Society in Medieval South India, 1980

K.A.Neelakanda Sastri, The Cholas, 1935 & A History of South India, 1955

அ,மார்க்ஸ், சீனி.வேங்கடசாமி அவர்களின் "களப்பிரர் ஆட்சியில் தமிழகம்", (விடியல் பதிப்பகம், கோவை) நூலுக்கு எழுதப்பட்ட விரிவான முன்னுரை, 2012

### பா.ரஞ்சித் திசை மாறும் முதல் தகவல் அறிக்கை

முதலில் பரபரப்பாக பேசப்பட்டதைப் போல், இராஜ ராஜ சோழனைப் பற்றிப் பேசியமைக்காக ப.ரஞ்சித் மீது வழக்குத் தொடரப்படவில்லை மாறாக, “மாடு” பற்றிய பேச்சுக்காகவே வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

இதிலிருந்து பெறப்படும் உண்மை என்னவெனில் பா.ரஞ்சித் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்டவை உண்மைதான் என்பதுதான்.

இப்போது இயக்குநர் புகழ் பா.ரஞ்சித் அவர்கள் மீது தமிழ்ச் சமுதாயத்தின் கோபத்தை திரும்பலாம் என முயற்சிகளை மேற்கொண்டவர்களின் முயற்சிகள் முனை மழுங்கிப் போய்விட்டன. வழக்கு அதே பாதையில் சென்றால் செந்தமிழ் நாட்டில் சாதிய அடுக்குமுறையை முந்தைய ஆட்சியாளர்கள் எப்படி பாதுகாத்து வைத்தார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும். அதனால் “மாட்டு” அரசியலுக்குப் போய்விட்டார்கள்.

இப்படி முதல் தகவல் அறிக்கை தடுமாறுவதால் வழக்கை ஒட்டுமொத்தமாக தள்ளுபடி செய்திட வேண்டும் என விண்ணப்பித்திருக்கின்றார் வைகை சட்ட நிறுவனத்தின் தலைவர் திறமைமிகு வழக்கறிஞர். லஜபதிராய் அவர்கள்.

இப்போது பா.ரஞ்சித் அவர்களுக்கு முன் ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. ஏன் வழக்கைத் தள்ளுபடி செய்யக்கூடாது எனக்கேட்டு அரசுக்கு தாக்கீதும் அனுப்பப்பட்டுள்ளது.

### அடிமை முறையின் ஆதி மூலம்

சங்க காலம் தொட்டே தமிழகத்தில் அடிமை முறை நிலவி வருகின்றது என்பது வரலாற்று உண்மை.

இதனை பலர் ஆய்வு செய்து அவற்றை நூலாகவும் வெளியிட்டிருக்கின்றார்கள். அவற்றுள் சிறப்புகள் பல பெற்ற ஆய்வு நூல் தமிழகத்தில் அடிமை முறை ஆய்வு செய்தவர் ஆ. சிவசுப்ரமணியன்.

ஆய்வாளர் ஆ.சிவசுப்ரமணியன் அவர்கள் நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

“பல்வேறு பெயர்களில் தமிழர்களில் ஒரு பிரிவினர் அடிமைகளாய் அல்லல்பட்டு ஆற்றாது அழுது மடிந்த துயர நிகழ்ச்சிகள் மறைக்க முடியாத வரலாற்று உண்மைகளாகும். இத்தகைய வரலாறு இன்னும் முடிந்துவிட வில்லை. இன்னும் புதிய வடிவில் பல்வேறு தொழில்களில் அடிமை நிலை நீக்கமற நின்று நிலவுகிறது.”

“தமிழ்ச் சமுதாய வரலாற்றில் இவ்வடிமைகளைக் குறித்து ஆராயாமல் அடிமைகளே தமிழர்களிடம்

இருந்ததில்லை என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்." (பக்கம்:13)

வெறும் அடிமை முறை, தேவரடியாள் முறை இவை மட்டும் தான் இருந்தன என்றில்லை. அடிமைகளுக்குப் பல தண்டனைகள் இருந்தன. அதில் பெண் அடிமைகளுக்கு வழங்கப்பட்ட தண்டனையில் ஒன்று அண்ணந்தாள். இது ஒரு பெரும் சித்ரவதை என்பதே உண்மை. (பக்கம்:61)

இந்த அண்ணாந்தாள் தண்டனை என்றால் என்ன என்பதை தமிழ்ச் சொல் அகராதி இப்படிக் குறிப்பிடுகின்றது.

"ஒருவருடைய கழுத்தைக் கயிற்றால் சுற்றி கயிற்றின் இரு முனைகளால் கால் கட்டை விரல்கள் இரண்டையும் கட்டி விடுவர். இதனால் நிமிர முடியாமல் குனிந்த நிலையிலேயே இருக்க வேண்டியது இருக்கும் இந்நிலையில் முதுகின் மேல் ஒரு கல்லை வைத்து விடுவர்." நூலின் பக்கம்: 155 ( Tamil Lexicon: Vol. 1, Page 60 By University of Madras )

இதே போல் இன்னொரு தண்டனையுமிருந்தது. அதுதான் சாணிப்பால் குடிப்பது.

"மாட்டுச் சாணத்தை மண் குடத்திலிட்டு தண்ணீரை ஊற்றிக் கரைப்பார்கள். பின்பு அதை துணியால் வடிகட்டுவர். இவ்வாறு வடிகட்டப்பட்ட நீர் சாணிப்பால் எனப்படும். இதைக் குடிக்க வைத்தலே "சாணிப்பால் குடித்தல்" எனப்பட்டது.(ராம கிருஷ்ணன் 1993 - 37)இதுவும் அடிமைகளுக்கு வழங்கப் பட்ட தண்டனைகளின் ஒரு பகுதி.

## தமிழக வரலாற்றில் கோடிக்கணக்கான அடிமைகளை விடுவித்த முஸ்லிம்கள்

"நிலத்துடன் ஒடுக்கப்பட்ட மக்களும் தானமாக வழங்கப்பட்டதை 17,18ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இச்செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. முதல் ராசேந்திரனின் கரந்தை செப்பேடு "தீண்டா சேரி" என்ற ஒரு குடியிருப்பைச் சுட்டுகிறது (ஏடு 7 வரி 6-7). இராமநாதபுரம் வட்டம் உத்திரகோச மங்கையிலுள்ள வீரபாண்டியனின் இரண்டாம் ஆட்சி ஆண்டு (கி.பி.1433) கல்வெட்டு ஒன்று இவ்வூரில் புறஞ்சேரியில் தீண்டா அடிமையுள்ளதும், தீண்டா அடிமை மற்றும் எப்பேற்பட்டனவும்... சர்வ மானியமாக என்று குறிப்பிடுகிறது. (சாந்தலிங்கம் 2000:71-72). இவற்றின் தொடர்ச்சியாகவே இச்செப்பேட்டுச் செய்திகளைக காண வேண்டும். நிலத்தைத் தானமாகப் பெறும் உழுவித் துண்போர்களுக்காக உழைத்து மாய ஒடுகப்பட்ட மக்களையும் நிலத்துடன் கொடையாக வழங்கியுள்ளனர் என்பது தெளிவு."

1.11.1742இல் முத்துக்குமார விசய ரகுநாத சேதுபதி ஏர்வாடி பள்ளிவாசலுக்குப் பெரிய மாய குளம் என்ற கிராமத்தைக் கொடையாக வழங்கியுள்ளார். இக்கொடை செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. வழக்கமாகக் கொடையைக் குறிக்கும் செப்பேடு மற்றும் கல்வெட்டில் இடம்பெறும் "ஒப்படைக்கிளவி" (காப்புரை) போல் அல்லாமல் சற்று வேறுபாடாக இச்சேப்பேட்டின் காப்புரை அமைந்துள்ளது. சேதுபதி வழங்கிய இக்கொடையைப் பரிபாலிக்கும் இஸ்லாமியர்கள் "கோடிக்கணக்கான அடிமைகளை விடுவித்த புண்ணியத்துக்கு ஆளாவார்கள்" என்ற பொருளில்.

"இந்த தர்மத்துக்கு யாதாமொரு யிசிலாமானவர்களில் பரிபாலனம் பண்ணினனவர்கள் கோடி அடுமை கொண்டு உடுமைக்கு விட்ட பலனும்"(கமால் 1992:476)

என்ற காப்புரை வாசகம் இடம் பெற்றுள்ளது. இப்பட்டயத்தை பதிப்பித்துள்ள கமால் (1992 : 478 - 479)

"அரபுத்தாயத்தில் இஸ்லாமிய பிரச்சாரத்தைத் தொடங்கிய பொழுது முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தமது பணிகளில் ஒன்றாக அடிமைகளை அவர்களுக்குரிய தொகையை அந்த அடிமைகளை வைத்திருப்பவர்களிடம் கொடுத்து வாங்கி அவர்களுக்கு உரிமை விட்டு சுதந்திர மனிதராக வாழும் படி செய்தார்கள். தமது பிரதம சீடர்களான அபூபக்கர்(ரலி) போன்றவர்களையும் அவ்விதமே கொத்தடிமை முறைகளை நீக்குவதற்கு உதவி செய்யுமாறு வலியுறுத்தினார்கள். ஆதலால் இந்தப்பட்டயத்தில் (வரி 65) "கோடி அடிமை உடுமை கொண்டுவிட்ட பலன்" என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது."

என்று விளக்கமளித்துள்ளார். முறிந்துவிட்ட சத்தியத்திற்கான குற்றப் பரிகாரங்களில் ஒன்றாக ஓர் அடிமையை விடுதலை செய்யலாம். என்று குர்ஆன் (5:89) குறிப்பிடுகிறது. செய்த கொலைக்குரிய பாவப்பரிகாரங்கள் ஒன்றாகவும் அடிமையை விடுதலை செய்வதை குர்ஆன் (5:92 - 93) குறிப்பிடுகின்றது.

"அரேபியாவில் இருந்த இத்தகைய நடைமுறை இந்திய நாட்டில் இஸ்லாமியர்களால் பின்பற்றப் பட்டதா? என்பது நமக்குத் தெரியவில்லை. மேற்கூறிய காப்புரையில் இடம்பெற்றுள்ள வரி, இறைநூல் சார்ந்த ஒன்றாகக் குறிப்பிடப் பட்டுள்ளதா? அல்லது அரேபிய நடைமுறை தமிழ் நாட்டிலும் இஸ்லாமியர்களால் பின்பற்றப் பட்டுள்ளதை வெளிப்படுத்தி நிற்கிறதா? என்பது மேலும் ஆய்வுக்குரியது."

ஆதாரம்: தமிழகத்தில் அடிமை முறை -ஆ.சிவ சுப்ரமணியன். பக்கங்கள் 48/49

# இராஜ ராஜ சோழனும் - அலாவுத்தீன் கில்ஜியும்!

*அ. மார்க்ஸ் அவர்களின் முகநூல் பக்கத்திலிருந்து.*

கி.பி. 1200 களில் ஆட்சியாளர்களிடையே ஓர் வழக்கம் இருந்தது. அது பிராமண சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு பெரும் நிலப்பரப்புகளை இலவசமாக பரிசாகத் தருவது. இதனால் இவர்கள் பெரு நிலப்பிரபுகளாக வாழ்ந்தார்கள். இந்த பெருநில பிரப்புக்கள் பிரம்மதேயா என அழைக்கப்பட்டார்கள்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் வாழ்பவர்கள், இவர்களுக்கு அடிமைகளாய், அனைத்து ஏவல்களையும் செய்து வாழ்ந்தார்கள். இந்த நிலங்களில் வாழ்ந்தவர்கள் இந்த பிரம்மதேயாக்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்ய வேண்டும். இலவசமாக இந்த பிரம்மதேயாக்கள் அவர்களாகப் பார்த்து தருவதைக் கொண்டு உயிர் வாழ்ந்திட வேண்டும்.

இந்த நிலப் பிரபுகளுக்குத் தரப்பட்ட நிலங்களில் வாழும் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும், குழந்தைகளும் கூட இவர்களுக்கு அடிமைகளாய் வாழ்ந்திட வேண்டும். இவர்களை "விஸ்தி" அடிமைகள் என அழைத்தார்கள்.

இப்படி ஒரு கூட்டம் மக்கள் நிலத்தில் உழைத்துக் கொட்டிக்கொண்டிருந்ததால், இந்த பெருநில சீமான்கள், ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எகிப்திலிருந்தும், ஐரோப்பியாவிலிருந்தும் குதிரைகளைத் தருவித்து அவற்றில் சவாரி செய்தார்கள். உலகில் எந்தப் பகுதியில் விலையுயர்ந்த ஆடைகள் கிடைக்குமோ அவற்றை வாங்கி உடுத்தி கழித்துக் கிடந்தார்கள்.

இவர்கள் தங்களுக்கு அரசு தந்த நிலங்களை விருப்பப்பட்டால் விவசாயம் செய்வார்கள். அதிலும் தங்களுக்கு விருப்பப்பட்ட பகுதியை மட்டுமே விவசாயம் செய்வார்கள்.

"விஸ்தி" என்ற தங்கள் நிலங்களில் வாழ்ந்த ஆண்களையும், பெண்களையும் தங்கள் விருப்பம்போல் பயன்படுத்தினார்கள், அதாவது பெண்களைத் தங்கள் ஆசை நாயகிகளாகவும் ஆக்கிக் கொண்டார்கள். நிலமானிய முறையின் பொற்காலம் இது எனக் கூறிடும் அளவுக்கு சுகபோகம் அங்கே கொட்டிக் கிடந்தது. (Source : Alauddin Khilji - Saviour of Hindusm, Monish Borah)

ஏறத்தாழ இதேப்போன்றதொரு நிலைதான் தஞ்சை பெரு நிலப்பரப்பை ஆட்சி செய்து வந்த



சோழர்கள் காலத்திலும் இருந்தது. ஆனால் சோழ மன்னர்கள் இந்த இழிநிலையை ஆதரித்து தங்களை உயர் சாதியினராக அடையாளப்படுத்திக் கொண்ட பார்ப்பனர்களுக்கு ஆதரவான ஓர் ஆட்சியைத்தான் நடத்தினார்கள். அவர்கள் இந்த இழி நிலைக்கு முடிவு காண முன்வரவில்லை.

ஆனால் ஏறத்தாழ அதே காலக்கட்டத்தில் அல்லது 100 வருடங்களுக்குப் பின் இந்தியாவை ஆண்ட அலாவுதீன் கில்ஜி என்கின்ற இஸ்லாமிய மன்னர் இந்த பிரச்னைகளுக்கு தீர்வு கண்டார். சகோதரர் பா.ரஞ்சித் அவர்கள் வரலாற்றின் இந்த பகுதிகளை கூர்ந்து ஆய்வு செய்ய வேண்டும்.

### உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தம்

அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தார்கள் "விஸ்தி" களுக்கும் நிலம் சொந்தம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால் பிரம்மதேயாக்களுக்குக் கொடுத்த நிலங்களில் பெரும் பகுதியை கையகப்படுத்திட வேண்டியதாயிற்று.

அடுத்து யாரும், யாருக்கும் இலவசமாக உழைக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்திட இயலாது உழைப்பிற்கேற்ற கூலியை வழங்கியே ஆக வேண்டும். அது விஸ்தியாக இருந்தாலும் சரி, பிரம்மதேயாக்களாக இருப்பதாலும் சரி என பிரிதொரு சட்டத்தைக் கொண்டு வந்தார்.

அலாவுத்தீன் கில்ஜியின் இந்த சீர்திருத்தங்களை பூமியிலேயே சொர்க்கத்தை தருவித்து, வாழ்ந்து கொண்டிருந்த பிரம்மதேயாக்கள் என்ற பிராமணர்களால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அதே நேரத்தில் அவர்களால் அலாவுத்தீன் கில்ஜி-க்கு எதிராக எதுவும் செய்திட இயலவில்லை. ஏனெனில் அலாவுத்தீன் கில்ஜி தன் சட்டத்தை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை அறிவித்திருந்தார். அந்தத் தண்டனைகளைக் கண்டிப்பான முறையில் செயல்படுத்திடவும் செய்தார். இதனால் சில நேரங்களில் இந்த பிரம்மதேயாக்கள், நிலத்தில் உழைத்திட வேண்டியவர்களாகவும் ஆனார்கள்.

அன்று அலாவுத்தீன் கில்ஜியின் ஆளுமைக் கெதிராக எதுவும் செய்திட முடியாதவர்கள், பிற்றை நாள் வரலாற்றில் அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இந்துக்களுக்கு எதிரானவர் என்றும், இந்துக்களின் நிலங்களைப் பிடுங்கிக் கொண்டவர். இந்துப் பெண்களையும், வேலை செய்ய வைத்தவர் என்றெல்லாம் பொய்களைப் பரப்பி, அதை இன்றுவரை பள்ளிக்கூடங்களில் பாடமாகவும் கற்றுக் கொடுக்கின்றார்கள்.

ஆக அலாவுத்தீன் கில்ஜியின் காலத்தில் விஸ்திகளுக்கு அதாவது பாமரர்களுக்கும் உழைப்பவர்களுக்கும் அன்றைய சொல்லாட்சியில் அடிமைகளுக்கு நிலம் சொந்தமானதால் அவர்கள் உற்சாகத்துடன் உழைத்தார்கள். இதனால் உற்பத்தி பெருமளவில் பெருகிற்று.

அத்தோடு நாட்டிலுள்ள விளை நிலங்கள் அனைத்தும் விவசாயத்தின் கீழ் உற்பத்தியின் கீழ் வந்துவிட்டன. இதனால் உற்பத்தி பெருகி நாட்டில் வளம் கொழித்தது. ஏழை பாழைகளுக்கும் வருவாய் வந்தது, அது பெருகிற்று.

### வரி விலக்கம்

இத்தோடு அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இன்னொரு பொருளாதார நடவடிக்கையையும் மேற்கொண்டார்கள். அன்றைய நாட்களில் விளையும் விளை பொருட்களின் மேல் மூன்று விதமான வரிகள் புழக்கத்தில் இருந்தன. அவை, அப்போதைய மொழி வழக்கில் போஹா, போக், கார் என வழங்கப்பட்டன.

இதனை ஆங்கிலத்தில் இப்படி மொழி பெயர்க்கின்றார் வரலாற்று ஆசிரியர் சத்திஷ் சந்திரா. அது Land Revenue - நில வருமானம், Cess - தீர்வை, Tax - வரி என்பனவாகும். Medieval India Part-1 by Satish Charnda.

இப்படி மூன்று தலைப்புகளில் விவசாயி களிடமிருந்து வரிகள் வசூலிக்கப்பட்டு வந்தன. இவை அனைத்தையும் ரத்து செய்து விட்டு ஒரே வரியைக் கொண்டு வந்தார். இந்த ஒற்றை வரியில் ஜிஸ்யா - என்ற பாதுகாப்பு வரியும் அடங்கும். இதனால் நிலத்தில் உழைப்பவர்கள் வரிச்சுமையி லிருந்து பெருமளவில் விடுவிக்கப்பட்டார்கள்.

(விரிவான தகவல்களுக்கு பார்க்க - வைகறை வெளிச்சம் பிப்ரவரி 2018 இதழ், ஜூலை 2018 இதழ்.)

அன்று அலாவுத்தீன் கில்ஜியும், இன்று உமர் ஃபாரூக் ஐயா அவர்களும் ஒரே கொள்கையை முன் வைத்து தான் இந்த பிரச்னைக்கு தீர்வு கண்டார்கள். அந்த கொள்கை தான் இஸ்லாம்.

ஆக சகோரர் பா. ரஞ்சித் மற்றும் அவரைப் போன்று ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக குரல் கொடுப்போர், போராடுபவர்கள் எல்லாம் இதுபோன்ற வரலாறுகளின் மேல் கவனம் செலுத்த வேண்டும். அவைகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். இறுதியாக ஐயா உமர் ஃபாரூக் அவர்கள் கூறியது போல அந்த ஒரு இறைவனாகிய அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டு விடுதலையடைய வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

ஆய்வு - மு.குலாம் முஹம்மது

**Cover Story by: MGM / Ashraf Islam**

**வைகறை வெளிச்சம்**
**பத்திரிகையில் வரும்**
**கட்டுரைகள் குறித்த**
**தங்களது கருத்துகளை**
**+91 9092723753**
**என்ற கைபேசிக்கு**
**வாட்ஸ்ஆப்-இல் பகிரவும்**

# இயக்குனர் பா.ரஞ்சித் குறிப்பிட்டு பேசிய உமர் ஃபாருக் யார்?

உமர் ஃபாருக் அவர்கள் இந்து மதத்தில் தாழ்த்தப்பட்டவராய் பிறந்தவர். டி.எம்.மணி என்ற பெயரில் அடையாளம் காணப்பட்டவர். இன இழிவு நீங்க இஸ்லாமே அருமருந்து என இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாக மரித்தவர்.

தன் சமுதாய மக்களுக்கு இந்துக்கள் (அவர் அப்படித் தான் குறிப்பிடுகிறார் சாதாரண இந்துக்கள், சாதி இந்துக்கள் என்று பிரிப்பதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை இந்து மதத்திலிருந்து வேறுபடுத்தியும் அவர்களை கொடுமைப்படுத்தியவர்களை இந்துக்கள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்) செய்த கொடுமைகளை கண்டு சகிக்காமல் நீலப்புலிகள் இயக்கம் என்ற இயக்கத்தை உருவாக்கி அதன் மூலம் பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்.

அதற்காக சிறை சென்றவர். ஏகப்பட்ட வழக்குகள் அவர் மீது. கொலை வழக்கு முதல் வெடிகுண்டு வீசிய வழக்கு வரை எத்தனையோ வழக்குகள் அவர் மீது. அத்தனை வழக்குகளையும் தன் சமுதாய மக்களுக்காக ஏற்று துணிச்சலாக போராடியவர். அதில் வெற்றி கண்டவர். அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அவரைக் கண்டு சாதி வெறி கொண்டவர்கள் அரண்டனர். தன் கொட்டம் இவர் மேல் செல்லுபடியாகவில்லையே என காட்டம் கொண்டனர். அவரை கொலை செய்ய பல்வேறு முயற்சிகள் செய்தனர். ஆனால் இறைவன் அவரை எல்லா சதிகளிலிருந்தும் காப்பாற்றினான். அவன் அவரை வேறொரு நோக்கத்திற்காக படைத்திருந்தான் என்பது பின்னர் தான் அறியவந்தது.

தான் நடத்திய பல்வேறு போராட்டங்கள் இந்துக்களின் கொடுமைகளுக்கு பதிலடியாகத்தான் இருந்ததே தவிர, அது தன் சமுதாய மக்களுக்கு தீர்வை பெற்றுத்தரவில்லை என்பதை தெளிவாக உணர்ந்தார் அய்யா டி.எம்.மணி அவர்கள். அவரின் போராட்டங்கள் எல்லாம் அவர் தம் மக்களின் சாதி இழிவை போக்கவில்லை. அவர் அம்பேத்கரையும் படித்தார். அறிவார்ந்தோர் பலரின் அறிவுரைகளையும் படித்தார். கூடவே இஸ்லாத்தையும் படித்தார். இறுதியில் இஸ்லாம் ஒன்றே தம் மக்களின் அடிமைத்தனத்தை போக்கும் சாதிக் கொடுமையை நீக்கும் என உறுதியாக நம்பினார். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

அவர் திருக்கலிமாவை முன் மொழிந்த நிகழ்வு இன்னும் நெகிழ்வானது.

அவருக்கு பல்வேறு நிலைகளில் இஸ்லாத்தின் மாண்புகளை எடுத்துரைத்ததும் இஸ்லாமிய நூல்களை அறிமுகப்படுத்தியதும் தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் நிறுவனத்தின் நிறுவனர் மு.குலாம் முஹம்மது அவர்கள். கிட்டத்தட்ட 30 வருட பழக்கம் அண்ணன் மு.குலாம் முஹம்மது அவர்களுடன். தலித் சமுதாயத்து மக்கள் பலரை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வழி காட்டிய டி.எம்.மணி அவர்கள் அப்போது இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதன் அவசியத்தையும் அது இவ்வுலக வாழ்விற்கும் மறுவுலக வாழ்விற்கும் தேவையானது என்பதை பலமுறை அண்ணன் குலாம் முஹம்மது அவர்கள் அவரிடம் எடுத்துக்கூறியிருந்தார். அப்போதெல்லாம் மணி அண்ணன் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

அது 2006ம் ஆண்டு. நவம்பர் 26. அப்போது குலாம் முஹம்மது அவர்களுக்கு ஒரு விபத்து. அவர் மீண்டெழ மாட்டார் என அவருடன் இருந்தவர்கள் நினைத்துவிட்டனர். அவர்கள் அவரையும் விட்டு விலகி சென்றனர். அவர் வழி காட்டிய இஸ்லாமிய கொள்கைகளை விட்டும் விலகி சென்றனர். ஆனால் இறைவன் அவருக்கு ஆயுளை நீட்டித்தான். அவரை நேரில் சென்று நலம் விசாரித்தார் மணி அண்ணன் அவர்கள். அப்போதும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டாரில்லை.

பின்னர் தன் துணைவியாரின் வற்புறுத்தலுக்கிணங்க ஓய்வுக்காக அண்ணன். குலாம் முஹம்மது அவர்கள் திருவனந்தபுரம் சென்று விடுகிறார்கள். ஒரு நாள் மணி அண்ணன் அவர்களிடமிருந்து குலாம் அண்ணன் அவர்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. நான் உங்களை வந்து சந்திக்க வேண்டும் என்று கூறுகிறார் மணி அண்ணன்.

அண்ணன், நீங்க தான் என்னை மருத்துவமனையிலேயே பார்த்துவிட்டீர்களே, எதற்கு இவ்வளவு தூரம் வந்து கஷ்டப்படுகிறீர்கள் என்கிறார் குலாம் அண்ணன்.

இல்லை நான் மதுரை வரை வருகிறேன். அப்படியே உங்களை வந்து பார்த்து விட்டு வருகிறேன் என்கிறார் மணி அண்ணன்.

அதன் படியே திருவனந்தபுரம் வர, தன் உறவினர்களை விட்டு அவரை தன் வீட்டிற்கு அழைத்து வருகிறார் குலாம் அண்ணன் அவர்கள்.

“ஏன் அண்ணன் இவ்வளவு தூரம் வந்து கஷ்டப்படுகிறீர்கள். நான் மெட்ராசுக்கு வந்து விட்டால் 6 மணி நேர பயணம் தானே. அங்கேயே வந்து பார்த்திருக்கலாமே?”

“இல்லை. இனியும் நான் தாமதிக்க விரும்பவில்லை. உடனடியாக நான் கலிமா சொல்லவேண்டும். அதுவும் உங்கள் முன்னிலையில் நான் இஸ்லாத்தை ஏற்கவேண்டும்” என்று கூறுகிறார் மணி அண்ணன் அவர்கள் எவ்வளவு பெரும் பாக்கியம். இதற்காகத் தான் முப்பது ஆண்டுகாலம் காத்திருந்தேன் என மனதிற்குள் நினைத்தவராக குலாம் அண்ணன் அவர்கள் அங்கேயே சிறியதாக ஒரு விருந்து ஏற்பாடு செய்து மணி அண்ணன் அவர்களுக்கு கலிமா சொல்லி கொடுக்கிறார்கள். மணி

அண்ணன் தன் பெயரை உமர் ஃபாருக் என மாற்றிக்கொள்கிறார்கள்.

உமர் ஃபாருக் அவர்கள் எழுதிய புத்தகங்கள் தான் சாதி ஒழிந்தது, மற்றும் செந்தமிழ் நாட்டுச்சேரிகள். இந்த இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டது வேர்கள் பதிப்பகம்.

இதில் சாதி ஒழிந்தது என்ற நூலில் அவர் ஒரு தாழ்த்தப்பட்டவனாக அவர் சந்தித்த சோகங்கள், வலிகள், போராட்டங்கள் போன்றவற்றை எடுத்துக்கூறி இறுதியில் இஸ்லாமிய மார்க்கமே சாதியை நொடிப்பொழுதில் நீக்கியது என்று நிருவியிருப்பார்.

சாதி ஒழிந்தது புத்தகத்தில் ஓரிடத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் கிடைக்கக்கூடிய இடஒதுக்கீட்டு சலுகைகள் போய்விடுமே என்று தாழ்த்தப்பட்டோர் அவரிடம் கேட்கும் போது அவர் சொல்லும் பதில் அலாதியானது. பேருந்தில் ஊனமுற்றோர் இருக்கையை பெற வேண்டும் என்பதற்காக, அந்த சலுகையை பெறுவதற்காக யாராவது தங்களை ஊனப்படுத்திக் கொள்வார்களா? அது போல தான் இட ஒதுக்கீடு சலுகையும் என்ற அவருடைய பதில் அவர்களுடைய வாயை கட்டிப்போடும்.

உமர் ஃபாருக் அவர்களுடன் எனக்கு 2008ம் ஆண்டிலிருந்து தான் அறிமுகம். அதன் பின் பலமுறை சந்தித்திருக்கிறோம். என்னுடைய இல்லத்திற்கு உமர் ஃபாருக் அவர்கள் இருமுறை வந்திருக்கிறார்கள். மிக எளிமையாக அனைவரிடமும் பழகக்கூடியவர்.

அதன் பின்னர் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நானும் குலாம் அண்ணனும் நேரில் சென்று பார்த்து வந்தோம்.

பின்னர் உடல்நலம் தேறி வந்தார். இருந்தாலும் சிறிது கால இடைவெளியிலேயே அவர் இறைவனடி சேர்ந்தார். அவருடைய ஜனாசா தொழுகைக்கும் நானும் குலாம் அண்ணனும் சென்றிருந்தோம்.

மஸ்ஜிதுக்கு எதிரில் அவரின் வீடு. ஒருபுறம் முஸ்லிம்கள் சோகம் தாங்கியவர்களாக அவரின் ஜனாசா தொழுகைக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்க மற்றொரு புறம் தலித்கள் தெருமுனையில் பெருங்கூட்டமாக தங்களின் சோகத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர்.

ஜனாசா தொழுகை முடிந்து அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது.

முஸ்லிம்கள் தலித்கள் என மிக அதிகமான கூட்டம். அப்போது வானம் சற்று தூறல் போட்டு நின்றிருந்தது. இதனால் அடக்கம் செய்யும் இடம் நொதநொதவென்றிருந்தது. ஆனாலும் கூட்டம் குறைந்தபாடில்லை. மதில் சுவரின் மேலெல்லாம் கூட்டம். நான் ஒரு பள்ளத்தில் காலை விட்டு விட்டேன். அதனால் கூட்டத்தை விட்டு வெளியே வந்து விட்டேன்.

அப்போது இரண்டு தலித் மக்கள் பேசிக்கொண்டதை கேட்க நேர்ந்தது. ஒரு தலித் சகோதரர் தன் நண்பரை வா நாம் உள்ளே சென்று என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று கூப்பிடுகிறார். அதற்கு அந்த நண்பர் அது எதற்கு என கேட்க நமக்கும் இஸ்லாத்தை ஏற்பதை தவிர வேறு வழியில்லை. இன்றில்லாவிட்டாலும் ஒருநாள் நாம் இஸ்லாத்தை ஏற்றுத்தான் ஆக வேண்டும். ஆகவே, இப்போதே சென்று நடைமுறைகள் என்னென்ன என்று பார்த்துக்கொள்ளலாம் என்று கூறுகிறார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த என் கண்கள் கலங்கி விட்டன. இது தான் உமர் ஃபாருக் அவர்களின் வெற்றி.

அ.மார்க்ஸ் அவர்கள் உமர் ஃபாருக் குறித்து தான் எழுதியுள்ள கட்டுரையில் சென்ற மாதம் அவர் இறந்தபோதுகூடத் திரண்டிருந்த தலித் மக்கள், “இனி எப்பிடிய்யா தைரியமா இந்தக் கடைவீதியில நாங்க வந்து போவோம்...'' எனக் கதறி அழுததை குறிப்பிட்டுள்ளார்கள்.

https://keetru.com/index.php/homepage/2009-10-07-16-54-27/dalitmurasu-jul15/29066-2015-08-28-04-16-10

உமர் ஃபாருக் அவர்களுடைய இந்த இரண்டு புத்தகங்களும் பல நபர்களை இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்து சேர்த்துள்ளது என்றால் மிகையல்ல.

இந்த உமர் ஃபாருக் அய்யாவைத் தான் இயக்குனர் பா.ரஞ்சித் அவர்கள் நினைவு கூர்ந்துள்ளார்கள். அவருடைய நினைவேந்தல் நிகழ்ச்சியில் தான் சாதி ஒழிந்தது புத்தகத்தையும் செந்தமிழ்நாட்டுச்சேரிகள் புத்தகத்தையும் குறிப்பிட்டு அதன் சாராம்சத்தை பா.ரஞ்சித் அவர்கள் பேசியுள்ளார்கள். இதற்காகத் தான் அவர் மீது இந்துக்களால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பா.ரஞ்சித் அவர்களும் ஒரு விஷயத்தை தெளிவாக்க மறுக்கிறார். அது இந்த சாதியக் கொடுமைகளுக்கு தீர்வாக உமர் ஃபாருக் அய்யா அவர்கள் குறிப்பிட்டது திருக்கலிமாவை முன் மொழிந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது மட்டும் தான். இதை ஏனோ பா.ரஞ்சித் அவர்களும் அவரைப் போலவே பலரும் மறைத்தே சாதியக் கொடுமைகளுக்கு எதிராக தீர்வைத் தேடுகின்றனர்.

உமர் ஃபாருக் அவர்களை தொடர்ந்து அவரை முன்மாதிரியாகக் கொண்டு பா.ரஞ்சித் அவர்களும் சாதியக் கொடுமைகளுக்கு எதிராக தீர்வைத் தேடுபவர்களும் இஸ்லாத்தை ஏற்று தன் சாதியை ஒழித்து கொள்ள வேண்டும் என்பதே நம் விருப்பம்.

-அபூ அஃப்ரஹ்

**01. செந்தமிழ் நாட்டுச் சேரிகள்(விலை 40 ரூபாய்)**

**02. சாதி ஒழிந்தது(விலை 50 ரூபாய்)**

**ஆகிய நூல்களை பெற தொடர்பு கொள்ளவும்**

**வேர்கள் பதிப்பகம்**

**8248208144**

**9042039594**



# குமரி மாவட்டத்தில் அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை

நாகர்கோவில் பிஜேபி பிரமுகர் எம்.ஆர்.காந்தி ஐ 2013 ல் கொலை முயற்சி செய்ததாக போடப்பட்ட வழக்கில் பொய்யாக குற்றம் சாட்டப்பட்ட

அப்துல் சமீம், நவாஸ், முகமது சாலின், ஹம்ஷா, ஷாஜி அனைவருக்கும் விடுதலை. (குற்றமற்றவர்கள்) என அறிவித்து **(NAGERCOIL CHIEF JUDICIAL MAGISTRATE)** நீதிமன்றம் உத்தரவு...

பா.ஜ.க. பிரமுகர் எம்.ஆர். காந்தி மயங்கி விழுந்த போது அதைக் கொலை முயற்சி என சித்தரித்து ஒரு பெரும் போராட்டத்தை அறிவித்தார்கள் குமரி மாவட்ட பாசிஸ்டுகள். பல பஸ்களை உடைத்தார்கள். முஸ்லிம்களைக் கைது செய்ய வேண்டும் எனக் கண்ணை மூடிக் கொண்டு அழுத்தங்களைக் கொடுத்தார்கள். போராடினார்கள்.

குமரி மாவட்ட காவல்துறை நீண்ட நெடும் நாட்களாகவே முஸ்லிம் இளைஞர்களை குறி வைத்து வேட்டையாடி வருகின்றது. இதனை நாம் அறிக்கைகளாக எல்லா அதிகாரிகளுக்கும் சட்டப் பேரவி உறுப்பினர்களுக்கும் தந்துள்ளோம். அந்த வகையில் பல பொய் வழக்குகளிலும் சிக்கவைக்கப் பட்ட மேற்சொன்ன அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இப்படி பொய் குற்றம் சாட்டுவது தமிழகத்தில் குறிப்பாக குமரி மாவட்டத்தில் பாசிசத்தை வளர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுள் ஒன்று. அந்த முயற்சிகள் முனை மழுங்கும் அளவில் அந்த முயற்சிகள் தேய்ந்து போயின. இப்போத் அந்த அப்பாவிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

**ஊடகங்கள்**

இந்த அப்பாவிகளை விடுதலை செய்யும் தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் அன்று காவல்துறையும், ஊடகங்களும் பெரிய அளவில் குழுமின. ஊடகங்களுக்குக் காவல்துறையினர் தான் செய்திருக்க முடியும். ஏனெனில் அவர்களுக்கு மட்டுமே தீர்ப்பு வழங்கும் நாள் தெரியும். வந்த ஊடகங்களுக்கு தீனி கிடைக்கவில்லை. காரணம் காவல் துறையினரைப் போலவே ஊடகங்களும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என எதிர்ப்பார்த்தார்கள். அந்த அளவுக்கு பொய் சாட்சியங்களைக் குவித்திருந்தார்கள். ஆனால் தண்டிக்கப்படாமல் அனைவரும் விடுதலைச் செய்யப்பட்டது பாசிச பயங்கரவாதிகளைப் போல் காவல்துறைக்கு ஏமாற்றம்.

அந்த அப்பாவி முஸ்லிம்கள் குற்றமற்றவர்களாக விடுதலை செய்யப்பட்ட செய்தியை எந்த ஊடகமும் வெளியிடவில்லை. ஆனால் அந்த அப்பாவிகள் பொய்யாகக் குற்றம் சாட்டப்படவும், கைது செய்து கொட்டடியில் அடைக்கப்படவும் காரணமாக இருந்தவர்களில் காவல்துறையினரைப் போலவே ஊடகங்களும் பங்கு வகித்தன. கைதுக்கு காரணமாக நாள் தவறாமல் பரப்பிய பரப்புரைகள் பொய்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அப்போதும் இடைவிடாமல் காவல்துறையின் பொய்களையும், புனைந்துரைகளையும் தவறாமல் வெளியிட்டு கொண்டிருந்தன ஊடகங்கள்.

ஊடகங்களில் ஓர வஞ்சனை சொல்லி மாளாது.

**நாகர் கோவிலிலிருந்து - ந.நி.**




# தொடரும் என்.ஐ.ஏ.வின் கைதுகள்.
## உண்மை என்ன?

தமிழகத்தில் இலங்கைத் தாக்குதல்களை மையமாக வைத்து தொடர்ந்து என்.ஐ.ஏ. பல அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து வருகிறது. இதனடிப்படையில் ஜூன் 11ஆம் தேதி கோயம்புத்தூரில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் ரெய்டுகள் நடந்தன. இது குறித்து ஆய்வு மேற்கொள்ள வைகறை வெளிச்சம் மாத இதழ் சார்பில் உண்மை கண்டறியும் குழுவாக சென்றோம்.

கோயம்புத்தூரில் கரும்புக்கடை, உக்கடம், போத்தனூர் மற்றும் குனியமுத்தூர் உட்பட முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் இலங்கை குண்டுவெடிப்பில் சந்தேகிக்கப்படும் சஹ்ரான் ஆஸிமுடன் முகநூல் தொடர்பு கொண்டிருந்ததாக முஹம்மது அசாருதீன், ஷேக் ஹிதாயத்துல்லா, இப்ராஹிம் என்ற ஷாஹின்ஷா, அக்ரம் ஜிந்தா, அபுபக்கர் மற்றும் சதாம் உசேன் உட்பட 6 பேரை என்.ஐ.ஏ. கைது செய்தது. கைதுக்குக் காரணம், “தடை செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் தொடர்பு மற்றும் தீவிரவாத தாக்குதல்களை அரங்கேற்றுவது போன்ற எண்ணத்தோடு சமூக வலைதளங்களில் கருத்துக்களை பரப்புவது” போன்றவையாகும்.

என்.ஐ.ஏ. வின் இந்த கைது நடவடிக்கைகளை வைத்துப் பார்க்கும் போது இந்தியாவில் என்.ஐ.ஏ. விரும்பினால் தான் நினைக்கும் காரணத்திற்காக வெல்லாம் யாரை வேண்டுமானாலும் கைது செய்யும் போலிருக்கிறது. என்.ஐ.ஏ. போன்ற நிறுவனங்கள் எப்படி இயங்குகின்றன என்பது வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நன்றாக தெரியும். நாம் தொடுத்து அதுபற்றிய விழிப்புணர்வை கொடுத்து வருகின்றோம். ஆனாலும் மீண்டும் நினைவிற்கு கொண்டு வருவோம்.

திட்டமிட்டு ஏதாவது ஒரு இடத்தில் குண்டுவெடிப்புகளை நிகழ்த்துவது. பின்னர் ஏற்கனவே தேர்வு செய்து வைத்திருந்த அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை அந்த குண்டு வெடிப்புகளோடு தொடர்பு படுத்தி கைது செய்வது. பின்னர் லஷ்கரே தொய்பா, இந்தியன் முஜாஹிதீன் போன்ற அமைப்புகளின் பெயர் கூறி, சித்ரவதைக் கூடங்களுக்கு அழைத்து சென்று துன்புறுத்தி அவர்களை குற்றத்தை ஒத்துக்கொள்ள வைப்பது. இது தான் என்.ஐ.ஏ. வின் பாணி. (விரிவான தகவல்களுக்கு Bhraminists Bombed Muslims Hanged நூலை வாங்கிப்படிக்கவும்) இதே தான் கோவை கைது நடவடிக்கைகளிலும் நடந்துள்ளது.

இலங்கையில் நடந்த குண்டுவெடிப்புகளை இந்தியாவோடு தொடர்பு படுத்தி அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து சிறையில் அடைத்திருக்கின்றது.

### இவைதான் ஆதாரங்களா?

கைது நடவடிக்கையின் போது கைப்பற்றப் பட்டதாக சொல்லப்படும் பொருட்களை பாருங்கள். Air Gun (Air Gun என்றால் பறவைகளை வேட்டையாட பயன்படும் துப்பாக்கி). துப்பாக்கி குண்டுகள் 300 (குண்டுகள் இங்கே! துப்பாக்கிகள் எங்கே? ஒரு வேளை அதை வைக்க மறந்து விட்டார்கள் போலும்). மொபைல் போன்கள், சிம் கார்டுகள், பென்டிரைவ்கள், சி.டி., டி.வி.டிக்கள். இதுவெல்லாம் தான் ஆதாரங்களாம். இவை யெல்லாம்

எல்லா மனிதர்களும் உபயோகப்படுத்தும் சாதாரண பொருட்கள் தான். இதையெல்லாம் ஆதாரமாக வைத்து கைது செய்ய வேண்டும் என்றால் என்.ஐ.ஏ. கோடி கணக்கான மக்களை கைது செய்ய வேண்டியிருக்கும்.

### குடும்பங்களின் நிலை

இந்த வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் நடுத்தர வர்க்கத்தினர் தான். சிறு வியாபாரங்களை செய்து தனது மொத்த குடும்பத்தினரையும் காப்பாற்றக்கூடியவர்கள். இவர்கள் அனைவரும் வாடகை வீட்டில் வசிப்பவர்கள். அன்றாடங்காய்ச்சிகள் தான்.

### ஒரு சில வழக்குகள் உங்கள் பார்வைக்கு

**நஸ்ருத்தீன் அஹ்மத்:** 23 வருட சிறை. கைது செய்யப்பட்டது 1994. விடுதலை செய்யப்பட்டது 2015. வழக்கு: பாபரி மஸ்ஜித் இடிப்பு தினத்தின் போது நடந்த ஐந்து குண்டுவெடிப்புகளில் தொடர்பு. 2ம் ஆண்டு மருத்துவ படிப்பின்போது கைது செய்யப்பட்டார்.

**குல்சார் அஹ்மத் பானி:** 16 வருட சிறை. கைது செய்யப்பட்டது 2001. விடுதலை செய்யப்பட்டது 2017. வழக்கு: சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் குண்டுவெடிப்பு.

**ஜாஹிருத்தீன் அஹ்மத்:** 23 வருட சிறை. கைது செய்யப்பட்டது 1994. விடுதலை செய்யப்பட்டது 2016. வழக்கு: மும்பையில் சிவில் பொறியாளராக இருந்தபோது தீவிரவாத செயலில் ஈடுபட்டதாக கைது.

**முஹம்மத் ஆமீர்கான்:** 14வருட சிறை. கைது செய்யப்பட்டது. 1998 விடுதலை செய்யப்பட்டது 2012. வழக்கு: டில்லியில் 20 சக்தி குறைந்த குண்டுவெடிப்புக்கு காரணம்.

**ஹபீப் பாவா:** 14வருட சிறை. கைது செய்யப்பட்டது 2003. விடுதலை செய்யப்பட்டது 2017. வழக்கு: பேருந்தில் டிபன்பாக்ஸ் குண்டு வைத்த வழக்கு

**ஹனிப் பாகிட்வாலா:** 14 வருட சிறை. கைது செய்யப்பட்டது 2002. விடுதலை செய்யப்பட்டது 2017. வழக்கு: பேருந்தில் டிபன் பாக்ஸ் குண்டுவைத்த வழக்கு.

இப்படி இதற்கு முன் இதேப்போன்று கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம் இளைஞர்களெல்லாம் எந்த குற்றமும் செய்யாமல் நீண்ட நாள் சிறைவாசத்திற்கு பின் விடுவிக்கப்பட்ட வரலாறு ஏராளம். ஏராளம். இதன் மூலம் அவர்களின் வாழ் நாள் லட்சியங்கள், குடும்ப சூழ் நிலைகள், சமூக அந்தஸ்துகள் போன்றவைகள் சிதைக்கப்பட்டன. இதுப்போன்ற அநியாயங்களையெல்லாம் எல்லாம் பல சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், நடு நிலையாளர்கள் எல்லாம் மக்கள் மன்றத்திற்கு கொண்டு சேர்க்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனாலும் என்ன செய்ய! எங்களை உங்களால் எதுவும் செய்ய முடியாது என்று தொடர்ந்து தன்னுடைய அடுத்தக்கட்ட இலக்கை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கின்றது என்.ஐ.ஏ. போன்ற அமைப்புகள்.

நமது தமிழகத்தில் நமக்குள் இருக்கும் ஒற்றுமையை குலைத்து வடநாடுகளில் நடப்பது போன்ற அமைதியற்ற சூழலை இங்கேயும் உருவாக்க முயல்கிறார்கள் பாசிச சக்திகள். அதற்கு என்.ஐ.ஏ. போன்ற அமைப்புகள் முதல் ஊடகங்கள் வரை எல்லோறும் துணை நிற்கிறார்கள். அவர்களுக்கு எதிரான நாமும் ஒன்றினைவோம். இதுபோன்ற அநியாயங்களுக்கு எதிராக எந்த வேறுபாடுமின்றி குரல் கொடுப்போம். நீதியை நிலை நாட்டுவோம்.

### கோவையிலிருந்து நமது நிருபர்கள்

என்.ஐ.ஏ. வின் போக்குகளைப் பார்க்கும் போது அது தமிழகத்திலுள்ள பெரும்பாண்மை முஸ்லிம் இளைஞர்களை குற்றவாளிகளாக்கிட வேண்டும் என்றே முயற்சி செய்கின்றது. இதனால் பல குடும்பங்கள் சிதையும் என்பது அவர்களுக்குத் தெரியும். இதுவும் அவர்களின் இலக்கில் இல்லாமல் இல்லை.

என்.ஐ.ஏ. வின் சட்டத்தில் பல புதிய இணைப்புகள் வருகின்றன. அதில் எந்தத் தனிமனிதரையும் தீவிரவாதி என அறிவிக்கலாம் என்ற அதிகாரம் என்.ஐ.ஏ.வுக்கு வழங்கியிருக்கின்றது. இவையெல்லாம் மறைமுகமாக சொல்லும் செய்தி "It is a crime to be a Muslim in India - இந்தியாவில் ஒரு முஸ்லிம் இருப்பதே குற்றம்" எனச் சட்டம் வரலாம். சட்டம் வருகின்றதோ இல்லையோ வட இந்தியாவில் இது செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### என்.ஐ.ஏ. வின் கைதுகள் அடிப்படை இல்லாதது

என்.ஐ.ஏ. முஸ்லிம் இளைஞர்களை வாழ்விழக்கச் செய்வதற்கு பயன்படுத்தும் காரணம் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற அமைப்பைக் காட்டித்தான். இந்த அமைப்பு அமெரிக்கவால் உருவாக்கப்பட்டது. நோக்கம் உலக முஸ்லிம்களைக் கொலை செய்வது. முஸ்லிம் நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளை அடிக்கவும் தனது ஆயுதங்களை விற்பனை செய்யவும்.

அதேப்போல் டெய்ஸ் என்ற அமைப்பையும் குறிப்பிடுகிறார்கள். இது ஆப்கானிஸ்தானில் முஸ்லிம்களின் மேல் தாக்குதல் நடத்தவும் பழியை (டெய்ஷ்) அமைப்பின் மேல் போடவுமே! இந்த அமெரிக்க உளவுத்துறையின் உருவாக்கங்களைப் பயன்படுத்தி முஸ்லிம் இளைஞர்களை வேட்டையாடுவது அநியாயமானது.இதை அமெரிக்க அதிபர் புஷ் ஒத்துக் கொண்டார்.

**எம்.ஜி.எம்.**

# எதிர் வரும் போரில் ஈரானா? அமெரிக்காவா?



கடந்த 2010ம் ஆண்டு அமெரிக்கா ஈரானுக்கு எதிராக ஒரு மறைமுகபோரை தொடங்கியது. அப்போது ஈரான் அணு ஆயுத வல்லமை பெற்றுவிட்டிருந்தது. இதை அமெரிக்காலும் இஸ்ரேலாலும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இந்த இரண்டு நாடுகளுக்கும் நேரடியாக ஈரானுடன் போரில் ஈடுபட நெஞ்சுரம் கொள்ளவில்லை.

ஈரான் அப்போது தானே சொந்தமாக அணுவை செறிவூட்டும் வல்லமையை பெற்றுவிட்டிருந்தது. ஐந்தாம் தலைமுறை தொழில்நுட்பத்தை தானாக உருவாக்கி இருந்த ஈரான் இதனை தான் அனைத்து நாடுகளுக்கு கற்றுத்தர தயாராக இருப்பதாகக் கூறியது. மேலும் இந்த பலத்தை நன்மையான காரியங்களுக்கே பயன்படுத்தப்போவதாகவும் கூறியது.

ஈரானின் இந்த வல்லமை அமெரிக்காவையும் இஸ்ரேலையும் அதிர்ச்சியடைய செய்து விட்டது. எனவே, தங்களுக்கு இருந்த கம்ப்யூட்டர் சாப்ட்வேர் எனப்படும் கணினி மென்பொருள் வல்லமையுடன் ஈரானுக்கு எதிரான போரை தொடங்கின. இந்த இரண்டு நாடுகளும் தங்களிடமிருந்த மிகத்திறமையான கணினி வல்லுனர்களைக் கொண்டு ஸ்டக்ஸ்நட் என்ற ஒரு வைரஸ் புரோகிராமை (நிகழ்ச்சி நிரல்) உருவாக்கி ஈரானை நோக்கி செலுத்தினர். இதனை அப்போது எல்லா வல்லுனர்களும் டிஜிட்டல் ஆயுதம் என்றே வர்ணித்தனர்.

### ஸ்டக்ஸ்நட் வைரஸ்

இந்த வைரஸ் ஈரானின் அணு ஆயுத உலைகளை குறிவைத்து அனுப்பப்பட்டது. இந்த வைரஸின் தன்மை என்னவென்றால் இது மற்ற வைரஸ்களைப் போல இணையம் வழியாக பரவுவது கிடையாது. நாம் பென் டிரைவ் என்று அழைக்கும் ஃபிளாஷ் டிரைவ்கள் வழியாக பரவக்கூடிய வண்ணம் வடிவமைக்கப் பட்டிருந்தது. இது மற்ற வைரஸ்கள் போல தகவல்களை திருடவில்லை. மாறாக தான் தாக்கிய இயந்திரத்தின் தொழில்நுட்பத்தை தொந்தரவு செய்யும் விதமாக அமைக்கப் பட்டிருந்தது. பொதுவாக மையவிலக்கி கருவிகள் வழியாக யுரேனியம் வாயுக்கள் செறிவூட்டப்பட்டு அவ்வாறு செறிவூட்டப் பட்ட அணுக்கள் சேகரிக்கப்படும். இவை பின்னர் அணு உலைக்கோ அல்லது அணு ஆயுதத்திற்கோ பயன்படுத்தப்படும்.

இந்த அணுவை செறிவூட்டக்கூடிய

ஆலைகளில் சீமென்ஸ் (Siemens) என்ற நிறுவனத்தின் மென்பொருள் பயன்பாட்டில் இருந்தது. இந்த நிறுவனம் தங்களுடைய கணினிகள் பாதிக்கப்பட்டது அமெரிக்கா போன்ற நாட்டிலிருந்த தயாரித்து அனுப்பப்பட்ட அதிநவீன வைரஸ் நிரலால் தான் எனக்கூறியது. இந்த வைரஸ் தாக்கப்பட்ட கணினி தவறாக செயல்பட்டு அணு உலைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இதன் காரணமாக ஈரானின் அணு செறிவூட்டல் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆனாலும் ஈரான் தளரவில்லை. ஆச்சரியப்படும் விதமாக அந்த தாக்குதல்களிலிருந்து மீண்டு வந்தது. அதற்கடுத்த சில நாட்களில் தானே சொந்தமாக ஆபரேடிங் சிஸ்டம் (இதன் வழியாகத் தான் ஒரு கணினியில் இணைக்கப்படும் அனைத்து வன்பொருளையும் கணினி அடையாளம் கண்டு கொள்கிறது. விண்டோஸ், லினக்ஸ் போன்றவை பொதுவான ஆபரேடிங் சிஸ்டம்கள்) என்று சொல்லப்படும் கணிணியில் அடிப்படையாக நிறுவப்படும் மென்பொருளையும் தானே வடிவமைத்துக் கொண்டது. இது மிகப்பெரிய சாதனையாகவே கருதப்பட்டது.

### பதிலடி

இதற்கு பதிலடியாக ஈரான் ஒரு வைரஸை அமெரிக்காவை நோக்கி அனுப்பியது. அது செய்த வேலை அபரிதமானது.

இந்த வைரஸ் மூலமாக ஈரான் அமெரிக்காவின் ஓர் ஆளில்லா விமானத்தை அப்படியே கைப்பற்றி தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டது. அப்படி கைப்பற்றப்பட்ட விமானத்தின் பெயர் ஆர்.கியூ.170 (Lockheed Martin RQ-170 Sentinel unmanned aerial vehicle (UAV)). இந்த விமானம் அதீத திறன் பெற்ற விமானம். இதனை யாரும் கண்டு பிடிக்கவே இயலாது. இது தரைக்கட்டுப் பாட்டு தொடர்பை இழந்து விட்டால் தானாகவே புறப்பட்ட இடத்தை நோக்கி வந்து விடும் என்று ஏகப்பட்ட கதைகள் இந்த விமானம் குறித்து சொல்லப்பட்டன. இந்த விமானத்தை கொண்டு தான் ஒசாமா பின் லேடன் கண்காணிக்கப்பட்டார் என்றும் அவருடைய கொலை நேரடியாக அமெரிக்க அதிபரால் பார்க்கப்பட்டது என்ற கதைகளும் சொல்லப்பட்டன. ஆனால் இந்த விமானத்தை மிக எளிதாக ஈரான் கைப்பற்றி தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து உலகத்தையே ஆச்சரியப்பட வைத்தது. அமெரிக்காவை அதிர்ச்சியடைய வைத்தது.

அந்த ஆளில்லா விமானத்தின் இருப்பிடம் அறிய உதவும் ஜி.பி.எஸ். பகுதிக்குள் உள்நுழைந்து தான் இந்த சாதனையை ஈரான் செய்திருந்தது. இவ்வாறு செய்வதற்கு தங்களுக்கு ஒரு மின்னஞ்சலை ஹேக் செய்ய எவ்வளவு சிரமப்படவேண்டுமோ அவ்வளவு சிரமமே இருந்ததாக ஈரான் வல்லுனர்கள் தெரிவித்திருந்தனர். பின்னர் இந்த ஆளில்லா விமானத்தை தங்களிடம் ஒப்படைக்க அமெரிக்கா கதறியதும் இரஷ்யா, சீனா போன்ற நாடுகள் இதனை ஈரானிடமிருந்து பேரம் பேசி வாங்கிக்கொண்டதும் தனிக்கதை.

இது குறித்து 2012ம் ஆண்டு ஜனவரி மாத வைகறை வெளிச்சம் இதழில் மிக விரிவாக வெளியிட்டிருந்தோம். இப்போது அதையும் தாண்டி ஈரான் அமெரிக்காவின் மிக அதீத தொழில்நுட்பம் கொண்டதாக கருதப்படும் உளவு விமானத்தை (US RQ-4A Global Hawk unmanned surveillance drone) சுட்டு வீழ்த்தியுள்ளது. இது குறித்து காண்போம்.

### வழக்கம் போல் ஒப்பந்தத்தை முறித்த அமெரிக்கா

நாம் மேலே கூறியிருந்த முன்னேற்றங்களின் அடிப்படையில் முதலில் அமெரிக்கா ஈரானுக்கு பல பொருளாதார தடைகளை விதித்தது. ஈரான் அதற்கு அசரவில்லை. அமெரிக்காவிற்கும் தடைவிதித்தது. ஐரோப்பிய நாடுகளுக்கும் ஈரான் தடையை வியீத்தது.



அரண்டு போன ஐரோப்பிய நாடுகள் தாங்கள் ஈரானுடன் எந்த மோதல் போக்கையும் கையாள விரும்பவில்லை என்றும் வர்த்தகம்

செய்யவே விரும்புவதாகவும் கூறி ஈரானிடம் சரணடைந்தன. தங்களின் பொருளாதாரத் தடை தோற்று போவதைக் கண்ட அமெரிக்கா பின்னர் ஐ.நாவின் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் (China, France, Russia, United Kingdom, United States) 5 பேருடன் ஜெர்மனியையும் சேர்ந்து ஈரானுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தன. இதன் பெயர் இணைந்த விரிவான செயல் திட்டம் (Joint Comprehensive Plan of Action (JCPOA). ஜூலை 14, 2015இல் வியன்னாவில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

98 சதவீதத்திற்கு யுரேனியத்தை செறிவூட்டக் கூடாது (இது தான் அணுஆயுதங்களை செய்ய பயன்படும்) என்பதும் 15 வருடங்களில் யுரேனியத்தை செறியூட்டப்பயன்படும் கனநீர் தயாரிக்கும் நிலையங்களை உருவாக்கக்கூடாது என்பதும் ஈரானின் அணுஉலைகளை சர்வதேச அணுசக்தி நிறுவனம் (International Atomic Energy Agency (IAEA)) தொடர்ந்து கண்காணிக்க அனுமதிக்க வேண்டும் என்பதும் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகள்.

இதை தொடர்ந்து கடைபிடித்து வந்தது ஈரான். ஆனால் 8 மே 2018இல் அமெரிக்காவின் டொனால்டு டிரம்ப் தன்னிச்சையாக இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார். மே 2019இல் சர்வதேச அணுசக்தி நிறுவனம் (International Atomic Energy Agency (IAEA)) ஈரான் ஒப்பந்தப்படியே அனுமதிக்கப்பட்ட விதத்திலேயே செயல்பட்டு வருவதாகவும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவில்லை என்றும் சான்றளித்தது.

இதன் பின்னர் ஈரானின் மீது பல பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்தது. ஆனால் ஈரான் அசரவில்லை. இதற்கிடையே சர்வதேச அணுசக்தி நிறுவனமும் ஈரானுக்கு நற்சான்றிதழ் தந்து விட்டதால் ஈரானை தாக்க வேறு உபாயங்களைக் கையாளத் தொடங்கியது அமெரிக்கா. தன் அடிவருடியான சவூதி அரசாங்கத்தை இதற்கு பயன்படுத்திக் கொண்டது.

## இஸ்லாமிய ஒத்துழைப்பு கூட்டமைப்பு (Organisation of Islamic Cooperation)

அமெரிக்க அடிவருடியான சவூதி அரசாங்கம் இஸ்லாமிய ஒத்துழைப்பு கூட்டமைப்பைக் கூட்டியது. இந்த கூட்டமைப்பில் 57 நாடுகள் அங்கமாக உள்ளன. இஸ்லாமிய நாடுகளில் தற்போதைய பிரச்னைகள் என்ற தலைப்பில் கூட்டப்பட்ட இந்த கூட்டத்தில் ஈரானின் அச்சுறுத்தல் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது. இதில் ஈரான் கலந்து கொள்ளவில்லை. துருக்கியின் தலைவர் எர்துகான் அவர்களும் இதில் கலந்து கொள்ளவில்லை. இந்த கூட்டம் பெரும்பாலும் ஈரானை அச்சுறுத்துவதற்காகவே கூட்டப் பட்டது என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.



## சவூதி எண்ணெய் கப்பல்கள் தாக்கப்பட்டன

இஸ்லாமிய ஒத்துழைப்பு கூட்டமைப்பின் கூட்டம் பெரிதாக ஈரானை பாதிக்கவில்லை. இதன் பின்னர் சவூதி அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு எண்ணெய் கப்பல்கள் தாக்கப்பட்டதாகவும் அதற்கு காரணம் ஈரான் தான் எனவும் சவூதி அரசாங்கம் குற்றம் சாட்டியது. அமெரிக்காவும் இதே குற்றச்சாட்டை ஈரானின் மீது வைத்தது. மிக வெளிப்படையாக ஈரானை குற்றப்படுத்தி தாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த குற்றச்சாட்டு வைக்கப்பட்டதாக தெரிந்தது. ஈரான் இந்த குற்றச்சாட்டை தெளிவாக மறுத்தது. இதன் பின்னணியில் உள்ள சதியை இஸ்லாமிய நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை ஈரான் முன்வைத்தது. வழக்கம் போல ஈரானுடன் நேரிடையான ஒரு போரை மேற்கொள்ள தயாராக இல்லாத அமெரிக்கா சவூதி அரசாங்கத்தை ஈரானுடன் மோதவிட செய்த ஏற்பாடே இது எனவும் விமர்சனங்கள் எழுந்தன.



இதன் பின்னர் ஈரானை பயமுறுத்த தனது படைகளை அமெரிக்கா வளைகுடா நாடுகளில் உள்ள தன்னுடைய இராணுவ கேந்திரங்களுக்கு அனுப்பி வைத்தது. அதன் தொடர்ச்சியாக தன் உளவு பார்க்கும் நவீன விமானம் ஒன்றை ஈரானுக்குள் அனுப்பி வைத்தது அமெரிக்கா. அதனை சுட்டு வீழ்த்தி தன் பலத்தையும் ஆண்மையையும் மீண்டும் ஈரான் நிரூபித்துள்ளது.

## அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் (US RQ-4A Global Hawk unmanned surveillance drone)

ஆர்.க்யூ 4ஏ என்ற ஆளில்லா விமானத்தை தான் தற்போது ஈரான் சுட்டு வீழ்த்தியுள்ளது. இதன் விலை 123 மில்லியன் அமெரிக்க டாலர்கள். அமெரிக்கா இந்த செய்தியை முதலில் மறுத்தது. பின்னர் ஈரான் சுட்டு வீழ்த்திய விமானத்தின் பகுதிகளை படமெடுத்து காட்டிய பின்னர் இந்த செய்தியை ஏற்றுக்கொண்டது. தன் சொந்த தயாரிப்பான குர்தாத்3 (Khordad3) என்ற வான்பாதுகாப்பு ஏவுகணைகளைக் கொண்டு இந்த தாக்குதலை செயல்படுத்தியுள்ளது ஈரான்.

ஒரே நேரத்தில் நான்கு இலக்குகளை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது குர்தாத் 3. ஒரே நேரத்தில் எட்டு ஏவுகணைகளை செலுத்தும் ஆற்றல் கொண்டது. 50 முதல் 75 கி.மீட்டர் வரை செயல்பாட்டு எல்லையை கொண்ட இந்த ஏவுகணைகள் 25 முதல் 30 கி.மீ.வரை உயரம் செல்லும் இலக்கையும் துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது. இது இரஷ்யன் எஸ்.300 வகையை போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் அதையும் தாண்டி அதன் திறனை தற்போது குர்தாத் 3 தற்போது நிரூபித்துள்ளது.

இதைத் தவிர்த்து பவார் 373 (Bavar 373), எஸ்.ஏ.எம் தபாஸ் (SAM Tabas), எஸ்.ஏ.எம். ராட் (SAM Raad) போன்றவையும் ஈரானின் ஏவுகணை தொழில்நுட்பங்கள்.

தன் அடையாளத்தை வெளிப்படுத்தாக பிரான்சிஸ் உளவுத்துறை தலைவர் ஒருவர் ஈரான் அமெரிக்க விமானத்தை சுட்டு வீழ்த்தியதை சுட்டிக்காட்டி அமெரிக்கா ஈரானுக்கு மேலே தன்னுடைய விமானங்களை அனுப்பினால் இது போன்று சுட்டு வீழ்த்தப் படுவதை எதிர்பார்த்தே அனுப்பவேண்டும் என்று கூறியுள்ளார்.




இந்த தாக்குதல் அமெரிக்காவை திடுக்கிட செய்துள்ளதாக நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விமானம் பறக்கும் உயரத்திற்கு சென்று தாக்கும் வல்லமை பல நாடுகளின் ஏவுகணைகளுக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. 47 அடி நீளம், ஆர்.க்யூ 4 ஏ ஜெட் எஞ்சின். 65000 அடிகளுக்கு மேல் 24 மணி நேரம் தொடர்ச்சியாக பறக்கும் வல்லமை கொண்டது இந்த உளவு விமானம். எல்லா தாக்குதல்களுக்கும் போக்கு காட்டி அதிக உயரத்தில் பறந்து சென்று தரையிலிருந்து சென்று தாக்கும் ஏவுகணைகளில் தாக்குதலில் இருந்து தப்பிக்கும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ள இந்த உளவு விமானம் எப்படி சுட்டு வீழ்த்தப்பட்டது என்ற அதிர்ச்சியில் இருந்து இன்னும் அமெரிக்கா மீளவில்லை என்று அந்த செய்தி குறிப்பிடுகிறது.

<https://www.presstv.com/Detail/2019/06/21/599025/Iran-US-drone-RQ4A-Global-Hawk-IRGC?fbclid=IwAR1OBq44GiQcRpSY0R2fLLw78DyzOihJ4CC7nPHYwqs6zWDnQ5YGi5al1R4>

இதற்கிடையே அமெரிக்கா ஒருவேளை ஈரானுடன் போர் தொடுக்குமானால் அந்த போரில் அமெரிக்காவிற்கு ஆதரவளிப்பது குறித்து ஆய்வு செய்தே முடிவெடுக்கப்படும் என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவெடுக்க இயலாது என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.

<https://www.presstv.com/Detail/2019/06/24/599355/Britain-will-have-to-consider-backing-a-US-war-with-Iran>

இந்த சுட்டு வீழ்த்தலுக்கு பின்னர் உடனடியாக ஒரு தாக்குதலை ஈரானின் மீது மேற்கொள்ளவிருப்பது போல அமெரிக்கா பாவ்லா காட்டியது. பின்னர் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அதனை நிறுத்திவிட்டதாக செய்திகள் வெளிவந்தன. ஏன் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தாக்குதலை தொடங்க வில்லை என்ற செய்தி வெளியிடப்படவில்லை. ஆனால் உலகநாடுகள் கணித்ததன் அடிப்படையில் அப்படி ஒரு தாக்குதலை ஈரானுக்கு எதிராக துவங்குமேயோனால் அது அமெரிக்காவிற்கான பெரும் அழிவாகவே இருக்கும் என கருதப்படுகிறது.

### மூன்றாவது உலகப்போர்

அமெரிக்கா இதுவரை இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராக மூன்றாவது உலகப்போரை துவங்கி மறைமுகமாக நடத்தி வருகிறது. இந்த போர்களில் நேரிடையாக கலந்து கொள்ளாமல் அந்தந்த நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற அமைப்புகளை உருவாக்கி இந்தப் போரை அமெரிக்கா நடத்திவருகிறது. நேரிடையாக கலந்து கொண்ட ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் அதற்கு மிகப்பெரிய தோல்வியே பரிசாக கிடைத்துள்ளது. ஆப்கானிஸ்தானில் உள்ளே நுழைந்தவர்கள் எப்படி வெளியேறுவது என்று தெரியாமல் முழித்து கொண்டு இருக்கிறார்கள்.

அங்கு கொல்லப்படும் அமெரிக்கர்களின் உடல்கள் தொடர்ந்து அமெரிக்காவிற்கு வந்த வண்ணம் உள்ளன. இதனால் தாலிபான் களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளார்கள். ஆனால் இதற்கு தாலிபான்கள் உடன்படவில்லை. உடனே நாங்கள் உங்களுக்கு கத்தாரில் அலுவலகம் அமைத்து தருகிறோம். அங்கு வந்து பேச்சுவார்த்தை நடத்துங்கள் என கோரிக்கை வைத்துள்ளார்கள். இதற்கிடையே தாலிபான்களிடம் பேச்சுவார்த்தை நடத்த முயன்று இடைத்தரகர்களை அணுகி தங்கள் பணத்தையும் இழந்துள்ளனர். அவர்கள் எங்களுக்கு தாலிபான்களின் தலைவர்களை தெரியும். நாங்கள் உங்களுடன் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று கூறி பணத்தை



பெற்று ஏமாற்றி சென்றுவிட்டனர். இதுவே தான் ஈராக்கிலும் நடந்து வருகிறது.

எனவே, ஈரான் போன்ற வல்லமை மிக்க நாட்டுடன் இன்னொரு போரை அமெரிக்கா எதிர்கொண்டால் அது என்ன விளைவை ஏற்படுத்தும் என்பது அமெரிக்காவிற்கு நன்றாகவே தெரியும். எனவே தான், தன்னுடைய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னரும் அமெரிக்கா ஈரானை தாக்கும் திட்டத்தை கைவிட்டது என போர் வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி அமெரிக்கா தன்னை தாக்குமானால் நிமிடங்களுக்குள் தன்னை சுற்றி உள்ள ஆயிரக்கணக்கான அமெரிக்க தளங்கள் அனைத்தையும் தாக்கி அழிக்கும் வல்லமை தங்களுக்கு இருப்பதாக ஈரான் ஏற்கனவே அறிவித்திருந்தது.

<https://www.reuters.com/article/us-iran-nuclear-missiles/iran-says-can-destroy-u-s-bases-minutes-after-attack-idUSBRE86308I20120704>

### ஈரானுக்கு ஆதரவான நாடுகள்

இதற்கிடையே ஈரானின் போர் கூட்டாளியான இரஷ்யா தன்னுடைய துருப்புகளை தயார் நிலையில் இருக்குமாறு உத்தரவிட்டுள்ளது. இரஷ்ய அதிபர் புடின் இப்படி ஒரு உத்தரவை தன் படைகளுக்கு தந்துள்ளார். இந்தப் போரில் சிரியாவும் ஈரானுக்கு உதவி செய்யும். துருக்கியும் ஈரானுக்கு ஆதரவான நிலையை தான் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<https://www.presstv.com/Detail/2019/06/24/599353/Putin-orders-surprise-combat-readiness-inspection-for-Russian-army>

இவ்வாறிருக்க ஹிஸ்புல்லாவும் அமெரிக்காவிற்கு எதிராக அறிக்கை விடுத்தது. ஈரானுடன் போர் தொடங்குமானால் அது அமெரிக்கா செய்யும் முட்டாள்தனம் என்றும் அத்துடன் இஸ்ரேலையும் சேர்த்து அழித்து விடுவோம் என்றும் ஹிஸ்புல்லா அறிக்கை விட்டது. ஈரானுக்கு எதிரான பலவீனமான தாக்குதல் காரணமாக இஸ்ரேல் அழிக்கப்பட்டு விடலாம் என்ற பயத்தை இஸ்ரேலும் வெளியிட்டிருந்தது.

<https://www.middleeastmonitor.com/20190622-israel-analysts-weak-us-attack-on-iran-could-spark-retaliation-against-israel/?fbclid=IwAR2ezdzyq3i84AJJmz6rTCSv7vah25tJS3XOw5STRqekYUQ9QM49iMGuy2c

இதற்கிடையே, ஒப்பந்தத்தின் சாராம்சத்தை எந்த நாடுகளும் பின்பற்றாததன் காரணமாக ஈரான் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறப் போவதாக கெடுவிதித்திருந்தது. தற்போது அது ஒப்பந்தத்திலிருந்து விலகி விட்டதாக அறிவித்துள்ளது. யுரேனியத்தை 98% செறிவூட்டப்போவதாகவும் அது மிக தைரியமாக அறிவித்துள்ளது. மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் தற்போதைக்கு எந்த ஒரு போரையும் ஈரானுக்கு எதிராக துவங்கும் மனோ தைரியம் அமெரிக்காவிற்கு இல்லை என்பது தெளிவு. அப்படி ஒருவேளை நேரடி போரைத் துவங்குமானால் அமெரிக்கா பெரும் பேரழிவை சந்திக்க வேண்டியிருக்கும்.

**-அபூ அஃப்ரஹ்**



# எது முதலில்?



யூசுஃப் அல் கர்லாவீ

**அஷ்ஷைக் அல் கஸ்ஸாலி(மிஸ்ரி)**

மிகப்பெரிய இஸ்லாமிய பிரச்சாரகரான இவர் தன் தொலைநோக்கு பார்வை, விரிந்த ஞானம், ஆழமான சிந்தனை இவற்றின் மூலம் “எது முதலில்” துறையில் தேர்ந்து விளங்கியவர். தனது நூல்களில் இது பற்றி பெரிய அளவில் விவாதித்துள்ளார். குறிப்பாக அவர் எழுதியுள்ள கடைசி நூலில் அழகுபட விஷயங்களை கூறியுள்ளார். இஸ்லாமிய பிரச்சார பயணத்தில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களே இதற்கு காரணம். சிலர் தம்மை முஸ்லிம் என்று கூறிக் கொள்கிறார்கள். தாம் ஒரு அழைப்பாளர்(தாயீ) என்றும் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் இஸ்லாம் என்ற மார்க்கத்தை தலைகீழாக புரட்டுகின்றனர்.

வேரில் இருந்து வரும் கெட்டியான அதன் தண்டுப் பகுதியை மெல்லிய கிளைப் போல் ஆக்க பார்க்கின்றனர். அதன் கிளைகளை காற்று விளையாடும் இலைகள் போல பார்க்கின்றனர். அந்த நேரத்தில் அதன் இலைகளை தண்டு பகுதி என்கின்றனர். முக்கிய மற்ற பகுதிகளை விட இதுவே முக்கியம் இதற்காகவே முழுமுச்சுடன் பாடுபட வேண்டும் என்கின்றனர். இவ்விடயத்தில் நான் அறிஞர் கஸ்ஸாலி (மிஸ்ரி) அவர்களின் கருத்துக்களை கீழே தருகின்றேன். இது அவரின் அறிவாற்றலையும், திறனையும், புரிதலையும் விளங்கிட போதுமானது. “எது முதலில்” துறையில் எவ்வளவு தூரம் அவர் அக்கறை கொண்டவர் என்பதற்கு சான்றாக அமையும்.



“அத்தஅவத்துல் இஸ்லாமிய்யா தஸ்தக்பிலு கர்னஹல் ஹாமிசு அஷ்ர” (இஸ்லாமிய பிரச்சாரம் தனது பதினைந்தாம் நூற்றாண்டில் எதிர்கொள்கிறது) என்ற நூலில் இஸ்லாத்தின் கிளை வடிவங்கள் என்ற அத்தியாயத்தில் இஸ்லாமிய நாகரிகத்தின் வீழ்ச்சிக்குரிய காரணங்களையும், உன்னத சமுதாயமாக இருந்த முஸ்லிம்கள் கருத்து வேறுபட்டு நிற்பதையும் விரிவாகக் கூறியுள்ளார்.

இதோ அவர் கூறுகின்றார்

தமிழில்
பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி

ஈமான் எனும் இறைநம்பிக்கை 60க்கும் மேற்பட்ட அல்லது 70க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது. அந்த கிளைகளை நம் வசதிக்கு ஏற்ப வரிசையாக

அடுக்கி கொள்ளலாமா? விருப்பம் போல் அடுக்கி வைத்துக் கொள்ள அது என்ன கடையில் வாங்கி கைப்பையில் வைத்துக் கொள்ளும் பொருளா?

அல்ல! அதன் கிளைகளை பல தரங்கள் கொண்டவை. அவற்றுள் ஒன்றைச் செய்வதால் கிடைக்கும் பலன் அளவுக்கு மற்றொன்றை செய்யும் போது கிடைப்பதில்லை. அவற்றில் ஒன்றை செய்யாமல் இருப்பதால் ஏற்படும் ஆபத்தும் விளைவும் மற்றொன்றை செய்யாமல் இருக்கும் போது ஏற்படுவதில்லை. ஈமானின் மொத்த உருவத்தில் ஒவ்வொரு கிளைக்கும் அதற்கேற்ற தகுதி உண்டு. எல்லாக் கிளைகளையும் ஒருங்கிணைத்து கூறுவதென்றால் இப்படி சொல்லலாம்;

ஒரு நிறுவனமோ ஒரு அமைச்சரவையோ நடவடிக்கை எடுப்பதற்காக தயார் நிலையில் வைத்திருக்கும் கோப்புகளை பாருங்கள். அங்கே மேலாளர் இருப்பார். உதவியாளர் இருப்பார். வேலைக்காரர்கள் இருப்பார்கள். கண்காணிப் பாளர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவரின் பணிகளும் வரையறுக்கப்பட்டிருக்கும். அப்பொருளுக்கு மத்தியில் தொடர்புகள் இருக்கும். கோப்புகளை தொகுப்பது, அனுப்புவது வாங்கிப் படிப்பது, உத்தரவிடுவது, பின்விளைவுகளை பார்ப்பது இப்படி ஒரு நூலால் கோர்க்கப் பட்டிருப்பது போன்றிருக்கும் அப்பணிகள்.

இதற்கு இன்னொரு உதாரணம் பாருங்கள். சாலையில் ஓடிக்கொண்டிருக்கும் மகிழுந்து(சிஙீகூஷீ) ஒன்றைப் பாருங்கள். அதற்கென ஒரு தோற்றம் உண்டு. ஆக்சிலேட்டர், ஸ்டீயரிங், பெட்ரோல், பிரேக், விளக்குகள் முதலிய அனைத்தும் கொண்டதே கார். ஒவ்வொன்றுக்கும் ஒரு வேலை உண்டு. ஒவ்வொன்றும் தேவைப்படும் போது அது முக்கியத்துவம் பெறுகின்றது.

இறைநம்பிக்கை சில அடிப்படை கடமைகளையும் சில உபரி வணக்கங்களையும் உடையது. அதற்கு வேர்களும் உண்டு. கிளைகளும் உண்டு. உள்ளத்தால் செய்யும் வழிபாடுகளும் உண்டு. உடலால் செய்யும் வழிபாடுகளும் உண்டு. இஸ்லாமிய கலாச்சாரத்தை பற்றி தொடக்கத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் இதுதான். சிலர் இஸ்லாத்தின் ஒரு பகுதியை அளவுக்கு மீறி கடைபிடிக்கின்றனர். இதர பகுதிகள் இதனால் பாதிப்படைகின்றன உடலில் ஏதேனும் ஒரு பகுதியில் தோன்றும் வீக்கம் இதர உறுப்புகளில் படர்ந்த உடல் நிலையைக் கெடுத்து விடுகிறது அல்லவா? அதுபோல இப்படிப்பட்ட தவறான புரிதலால் அல்லது அறிவீனத்தால் இந்தச் சமுதாயத் திலேயே முதன்முதலில் பாதிக்கப்பட்டவர்கள் ஹாரிஜிய்யாக்கள்தான்.

அலி(ரழி) அவர்கள் ஆட்சியில் இருந்து விலகும் வரை அவர்களுடன் சண்டை விடுவோம் என்று ஹாரிஜிய்யாக்கள் கிளம்பினார்கள். உமையா வம்சம் ஆட்சியாளர்களாம் உமர் பின் அப்துல் அஜீஸ்(ரஹ்) அவர்களின் மூதாதையர்களை பழித்தார்கள். உமர் பின் அப்துல் அஜீஸ்(ரஹ்) அவர்கள் சண்டையிட வந்தனர். ஒருவனிடம் ஒரு குறிப்பிட்ட சிந்தனைப் போக்கு ஆதிக்கம் செலுத்தும் போது அவனுடைய இதயத்திலுள்ள காலியிடங்கள் அனைத்தையும் அது ஆக்கிரமித்துக் கொள்கிறது. மாற்றுக் கருத்து கொஞ்சம் கூட இடம் தர மறுக்கிறது.

நல்ல மனிதர்கள் என்று நம் மக்கள் மத்தியில் பெயர் பெற்ற கூட்டத்தை சார்ந்த ஒருவர் என்னை சந்தித்து "இந்த ஷைஹ் உடைய கிராமத்து (அற்புதம்)களில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா" என்று கேட்டார்.

"அவருடைய வரலாற்றை நான் படித்ததிலேயே" என்று நான் கூறினேன். உடனே அவர் "இதோ அந்த ஷைஹ் உடைய வாழ்க்கை வரலாறு" என்று ஒரு நூலை என்னிடம் தந்தார். நான் அதை வாங்கி வைத்துக் கொண்டேன்.

கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் என்னை வந்து சந்தித்து "நூலைப் படித்து விட்டீர்களா" இப்போது சொல்லுங்கள் என்றார்.

"நான் அந்த நூலை படிக்க மறந்து விட்டேன்" என்றேன்."அதை எப்படி மறக்கலாம்" என்றார் அவர்.

நான் சொன்னேன்! "இது ஒன்றும் அவ்வளவு முக்கியம் இல்லையே! உன்னுடைய குரு நாதரை பற்றி தெரிந்து கொள்ளாமலேயே நான் இறந்து போனால் நிச்சயமாக அல்லாஹ் என்னிடம் உன் குருவை பற்றியோ அவரின் அற்புதம் பற்றியோ கேட்கவே மாட்டான்."

உடனே அவர் என்னை "இறைநேசர்களின் அற்புதங்களை மறுக்கும் மார்க்க விரோதி" என்று திட்டிக் கொண்டே போனார். இன்னொருவர் வந்தார் இசை பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்டார்.

"போர்க்களத்தில் வீரத்தையும் தியாக உணர்வையும் கிளர்ந்தெழ செய்திட இசையை பயன் படுத்துவது தவறல்ல. உள்ளத்தில் ஒழுக்கத்தையும் சுறுசுறுப்பையும் ஊற்றெடுக்க வைத்திட மென்மையான இசையாக இருந்தால் அதில் ஒன்றும் தவறில்லை. கிறுக்கு பிடிக்க வைக்கும் வீணான கேளிக்கை இசை என்றால் அது கூடாது." என்று கூறினேன். உடனே அவர் "ஹராமை கேட்கும் கேட்கத்தூண்டும் இன விரோதி" என்று திட்டிக் கொண்டே போனார். இவர்கள் இருவருமே சில நடைமுறைகளை வைத்து மார்க்கத்தை புரிந்தவர்கள்.

சில மனிதர்களிடம் விளக்கம் கேட்டு அதன்படி மார்க்கத்தைப் புரிந்து விட்டதாக கணக்கு போட்டவர்கள். இப்படித் தான் மார்க்கத்தின் ஒரு பகுதியில் வீக்கம் ஏற்பட்டு விடுகிறது. அது எல்லா பகுதிகளையும் பாதிக்கிறது.

சட்ட ஞானம் ஏதுமில்லாத வேடிக்கையான சில அடையாளங்களை வைத்துக்கொண்டு திரிகின்ற போலி சூஃபிகள் ஒரு வணக்கசாலியிடம் இருக்க வேண்டிய இதயமில்லாத, ஓட்டை விழுந்த சிந்தனைக்கு சொந்தக்காரர்களான போலி மேதாவிகளுக்கு பின்னாலுள்ள ரகசியம் இதுதான். தவறான புரிதல் காரணமாக தவறான முடிவுக்கு வருகின்றனர்.

நாங்கள் ஹதீஸ் (நபிவழி, நபி மொழியை) மட்டுமே கடை பிடிப்போம் என்று கூறும் சிலர், சில நபிமொழிகளை மனப்பாடம் செய்து வைத்திருக்கின்றனர். ஆனால் அவற்றை முறையாக ஆய்வு செய்வதும் இல்லை. அதற்கு தர வேண்டிய பொருளை தருவதுமில்லை. இவர்களின் ரகசியமும் இதுதான்.

சிலர் தம் மனம் போன போக்கில் சமூக நலனில் அக்கறை காட்டுகின்றனர். குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் அவற்றை முறையாக அழகாக செய்வதில்லை. இவர்களின் பின்னால் உள்ள ரகசியமும் இதுதான்.

குர்ஆனுக்கும், நபிமொழிக்கும் தன் மனம் விருப்பம் படி விளக்கங்களைத் தந்து அதன்படி குடி மக்களை வழிநடத்தும் போதிய இறையச்சம் இல்லாத ஆட்சியாளர்களுக்கு பின்னாலுள்ள ரகசியம் இதுதான்.

மேலும் தம்முடைய தனிப்பட்ட வழிபாடுகளில் பெரும் முனைப்புக் காட்டுகின்றன.ர் பொதுமக்கள். ஆனால் அரசுக்கு ஒரு அறிவுரை தேவை. அச்சுறுத்தல் தேவை. அரசு செய்யும் அநியாயத்தை தடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் செய்ய மாட்டார்கள். ஆட்சியாளர்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வருமே என்று பயந்து நீண்ட மௌனத்தோடு பதுங்கி விடுவார்கள். இவர்கள் பதுங்குவதற்கு பின்னாலுள்ள ரகசியம் இதுதான்.

மனிதர்களில் சிலர் இப்படி இருப்பதுண்டு. வழிபாட்டின் வடிவங்களில் சமரசம் செய்து கொள்ள மாட்டார்கள். நபிவழியில் கூறப்பட்டபடி அளவு மாற்றம் இல்லாமல் வழிபாடுகளை நிறைவேற்றுவார்கள். ஆனால் அவை கற்றுத்தரும் பண்பாடுகளையும் ஞானங்களையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். உதாரணமாக பாருங்கள்; நபிவழியில் தொழுகிறோம் என்று கூறுபவர்கள் தொழுகை கற்பிக்கும் பாடங்களான கட்டுக்கோப்பு, சுத்தம் இவற்றை பெறுகிறார்களா?

கட்டுக்கோப்பு இல்லாமல் சிதைந்தும் தலைவிரி கோலமாக வருகிறார்கள். இவர்கள் இப்படி இருப்பதற்கு பின்னாலுள்ள ரகசியம் இதுதான்.

ஹஜ் என்பது செப்பனிடும் பயணம். கருணை, அமைதி, நிம்மதி ஆகியவற்றைக் கொண்டு உள்ளத்தையும், உறுப்புகளையும் செப்பனிடுவது. ஆனால் என்ன நடக்கிறது இங்கே! “ஹஜ்”ஜின் போதும் அதற்குப் பின்னரும் இவர்கள் இருகிய இதயத்துடன் தீயவர்களாக இருக்கின்றார்கள். இப்படி இவர்கள் இருப்பதன் ரகசியம் இதுதான். இந்த உற்சாகம் மடையர்களால் இஸ்லாத்திற்கு கிடைப்பது முட்கள் தான். மலர்கள் அல்ல. தமது அறிவீனத்தால் இவர்கள் நன்மை செய்வதில்லை கேடு விளைவிக்கிறார்கள்.

அமெரிக்க, ஐரோப்பிய சமுதாயங்களில் பரவலாக சில இளைஞர்களை காணமுடிகிறது. அவர்கள் வெள்ளை நிற நீண்ட அங்கி அணிந்து இருக்கின்றார்கள். உணவு உண்ணும்போது டேபிள் பயன்படுத்தாமல் தரையில் அமர்ந்து கொள்கிறார்கள். கரண்டி பயன்படுத்துவதில்லை. கைகளால் எடுத்து சாப்பிடுகின்றனர். பின்னர் விரல்களில் ஓரங்களில் கூட விடாமல் நக்குகின்றனர்.

இப்படியெல்லாம் செய்து ஒரு நபிமொழி மூலமாக மேற்கத்தியர்களிடம் இஸ்லாத்தைக் கொண்டு சேர்த்திட தொடங்கிவிட்டார்களாம். அவர்கள் இப்படி எண்ணிக் கொள்கிறார்கள். நான் கேட்கிறேன் உணவை இஸ்லாம் கடைபிடிக்க சொன்ன ஒழுக்கம் இதுவா? நின்று கொண்டிருக்கும் ஒருவருக்கு தண்ணீரை குடிக்க வேண்டும் போல் தோன்றுகிறது. டம்ளரில் நீரை எடுத்து உட்கார்ந்து கொள்கிறார். இது நபி வழி என்பதால் அப்படி செய்வதாக கூறுகிறார். இந்த வினோதமான காட்சியை பார்த்த மாத்திரத்தில் ஐரோப்பியர் இஸ்லாத்தை தழுவிய விரும்பி விடுவார்களா என்ன?

ஒரு சிறிய விஷயத்திற்கு ஏன் இவ்வளவு பெரிய முக்கியத்துவம்? இது அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்க விடாமல் தடுக்கும் செயல் போல் தெரிகிறது. இப்படியெல்லாம் செய்வதன் மூலம் இஸ்லாம் குறையுள்ள மார்க்கம் என்று தான் காட்டுகிறார்கள். இவர்களால் இஸ்லாத்திற்கு எந்த பலனும் இல்லை. இன்னொரு முக்கிய விஷயம். ஒரு இஸ்லாமியப் பிரச்சாரகர் கருத்து வேறுபாடுக்குரிய விஷயத்தை வைத்து பிரச்சாரம் செய்யலாகாது. அவரைப் பொறுத்தவரை அது முக்கியமானதாகவே கூட இருக்கலாம். தரையில் அமர்ந்து கையால் சாப்பிடுவது பெருமானாரின் வழக்கம். அது

வணக்கமல்ல. வழிபாடல்ல. இவற்றை வணக்கமாகக் காட்டி இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வது அருவருப்பானது.

பெண்கள் நிகாப் எனும் முகத்திரை அணிவது அவர்களின் விருப்பத்தையும் சூழலையும் பொறுத்தது. விரும்பினால் போடலாம் இல்லையென்றால் விட்டுவிடலாம். மக்களிடையே இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும்போது இதையெல்லாம் ஏன் சொல்ல வேண்டும்? என்ன தேவை இருக்கிறது? இஸ்லாமிய பிரச்சாரம் எந்த அடிப்படையில் அமைய வேண்டும்? என்பதற்குப் பின்வரும் செய்தி சிறந்த சான்று. கருத்தூன்றிப் படியுங்கள்.

நான் ஆயிஷா(ரலி) அவர்களின் சபையில் இருந்த போது, ஈராக் நாட்டைச் சார்ந்த ஒருவர் வந்து இறந்தவருக்கு (கஃபன்) இறுதி ஆடை அணிவதற்கு எது சிறந்தது? என்று ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்டார்.

“எப்படி இருந்தால் என்ன? எந்த கலர் துணியும் அணிவிக்கலாம்.” என்றார்கள்.

“இறைநம்பிக்கையாளர்களின் அன்னையே உங்களின் குர்ஆன் பிரதியை எனக்குக் காட்டுங்கள்” என்று கேட்டார் அவர். “ஏன்” என்றார்கள் ஆயிஷா(ரலி).

“ஒரே தொகுப்பாக யாரும் குர்ஆனை ஓதுவதில்லை. நான் உங்களிடம் உள்ள குர்ஆனை பார்த்து நானும் தொகுத்துக்கொள்ள தான் கேட்கிறேன்.” என்றார் அவர்.

அதற்கு “எந்த அத்தியாயத்தை முன் பின்னாக ஓதினாலும் குற்றமில்லை. குர்ஆனில் ஆரம்பமாக இறங்கியவை சொர்க்கம், நரகம் பற்றி கூறும் வசனங்களே. பின்னர் மக்கள் அதிகமானோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது ஹலால், ஹராம் பற்றிய வசனங்கள் இறங்கின.”

“மது அருந்தாதீர், விபச்சாரம் செய்யாதீர் என்ற வசனங்கள் ஆரம்ப கட்டத்திலேயே இறக்கியருளப் பட்டிருந்ததால் “மதுவை விடவே மாட்டோம் குடித்தே தீருவோம். விபச்சாரத்தை எங்களால் விட முடியாது” என்று மக்கள் கூறியிருப்பார்கள்.

நான் விளையாடும் சிறுமியாக இருந்தபோது மக்காவில் நபி(ஸல்) அவர்களுக்கு இறங்கிய வசனங்களில் ஒன்று இது;

“மறுமை தான் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட இடம். மறுமை அவர்களுக்கு மிக கசப்பானது மிகக் கடுமையானது. (அல்குர் ஆன்: 54: 46)

அல்பகரா, அந்நிஸா (போன்ற சட்டங்களை கூறும் அத்தியாயம் நான் நபி(ஸல்) அவர்களின் மனைவியாக இருக்கும்போது இறங்கின” என்று கூறிய ஆயிஷா(ரலி) அந்த கிராமவாசியிடம் தன்னிடமுள்ள குர்ஆன் பிரதியை காட்டி அதில் உள்ள வரிசைப்படி அத்தியாயங்களை பதிவு செய்திட அனுமதித்தார்கள். (நூல்: புகாரி)

இதுதான் பிரச்சாரத்தின் யுகதி. வழி. இப்போது சில பிரச்சாரப் பணியில் ஈடுபடுகிறார்கள். சரியான விளக்கமும், புரிதலும் இல்லாத இவர்கள் இந்தசன்மார்க்கத்துக்கு நன்மை செய்யவில்லை. தீமை தான் செய்கின்றார்கள். இவர்களில் சிலர் மற்றவர்களை குறை கூறுகிறார்கள். தம்மிடமுள்ள அறிவு பஞ்சத்தை ஆணவத்தைக் கண்டு களிக்கிறார்கள். இந்த அறிவு பற்றாக்குறை பரவலாக இருக்கிறது. சிலர் இஸ்லாத்தை நான்கு விஷயங்களில் அடங்கி விடுகின்றனர்.

ஆணின் முகத்தில் தாடி. பெண்ணின் முகத்தில் திரை. எந்தத் தாளிலும் உருவப்படம் இருக்கக்கூடாது. பாடலும் இசையும் அறவே கூடாது. அது முக்கிய நிகழ்வில் நுண்ணிய பொருள்தரும் வார்த்தைகளைக் கொண்ட பாடலாக இருப்பினும் சரி. இவைதான் அந்த நான்கு. நான் இப்படி சொல்வதை வைத்துக் கொண்டு மேற்கண்ட விஷயங்களை நான் ஒரு முடிவை சொல்லப்போவதாக நினைக்க வேண்டாம். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் எதுவும் எல்லை மீறாமல் இருக்கவேண்டும். அவரவரும் தம் நிலைப்பாடு தான் மார்க்கத்தின் அதி முக்கிய விஷயம் என்று கருதக் கூடாது.

இவையெல்லாம் கிளை சட்டங்கள். இதற்காக சண்டை போட்டுக்கொள்வது இஸ்லாத்தைக்கே முடிவு கட்டி விடும் அளவுக்கு போய் விடக் கூடாது. சமுதாயத்தை கூறு போட்டு விடவும் கூடாது. (நூல்: அத்தஅவத்துல் இஸ்லாமிய்யா, ப்அக்கம். 68–71)

பிரபல சீர்திருத்தவாதிகள் முன் வைத்த விரிவான, முழுமையான, அடிப்படையான முன்னுரிமை பணிகள் இவைதான். இது நிகழ்கால இஸ்லாமிய சிந்தனையில் ஏற்பட்டுள்ள ஓட்டையை அடைக்கும் என்று நான் நம்புகிறேன். ஆரம்பத்திலும் முடிவிலும் அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். எங்கள் இறைவா நாங்கள் மறைத்ததற்காக எங்களைக் குற்றம் பிடிக்காதிருப்பாயாக. இறைவா! எங்களுக்கு முன்னிருந்தோர் மீது சுமத்தியது போல எங்கள் மீதும் சுமையைச் சுமத்தி விடாதே. இறைவா! எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட தாங்க இயலாத சுமையை எங்கள் மீது சுமத்தி விடாதே.

எங்கள் பாவங்களை அழிப்பாயாக. எங்களை மன்னிப்பாயாக. எங்களுக்கு கருணை காட்டுவாயாக. நீயே எங்கள் காவலன். உன்னை மறுக்கும் கூட்டத்திற்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக.

# சிலுவைப் போர் 2.0

## CRUSADE 2.0 BY JOHN FEFFER



**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

# சிலுவைப் போர் பொய்கள்

ஜான் பெப்ஃபர் கூறுகின்றார்;


அன்றைய நாட்களில் போர்கள் என்பது அன்றாட நிகழ்வுகள் இந்தப் போர்கள் நாடுபிடிக்க வேண்டும். அண்டை நாடுகளின் சொத்துக்களையும் கருவூலங்களையும் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற எண்ணங் களால் உண்மையைச் சொன்னால் பேராசை களினால் வருவன.

இதற்காக படை திரட்டுபவர்கள் மக்கள் என்ன சொன்னால் விரைவில் உணர்ச்சிவசப் படுவார்களோ அதைச் சொல்லி மக்களை உணர்ச்சிவசப்படுத்துவார்கள். உணர்ச்சி உச்சியில் ஏறி நிற்கும் வாலிபவர்களின் கைகளில் வாளைத் தந்து எதிரிகளைப் பிளக்கச் செய்வார்கள்.

இப்படி எதிரிகளின் மேல் பாய்ந்திட மதத்தின் பெயரால் தான் வெறியூட்ட முடியும் என்றால் அதையுல் தவறாமல் செய்வார்கள். இதைத்தான் போப் அர்பன் II அவர்களும், இதர கிருஸ்தவ மன்னர்களும் செய்தார்கள். அந்த கிருஸ்தவ மன்னர்கள் இதர கிருஸ்தவ மன்னர்கள் மீது போர் தொடுத்திட கிருஸ்தவத்தில் ஏற்பட்ட பிரிவுகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

எப்படி, மக்களை வெறியூட்டித்தான் படைக்கு ஆள் பலம் சேர்க்க முடியும் என்ற நிலை இருந்ததோ, அதேப்போல் தான் போருக்கும், படைக்கும், வேண்டிய பண பலத்தைத் திரட்டிட பண முதலைகளை வெறியூட்ட வேண்டும் அதற்கு மதம் பயன்படும் என்றால் அதைத் தயங்காமல் பயன் படுத்தினார்கள் மன்னர்கள். அதேபோல் கிருஸ்தவர்களுக்கு எதிராகக் கிருஸ்தவர்களைப் பயன்படுத்திடும் போது கிருஸ்தவ உட் பிரிவுகளைச் சார்ந்த பணக்காரர்களையே பயன்படுத்தினார்கள். பணம் போதிய அளவுக்கு வந்து குவிந்தது.

(முதல் சிலுவைப் போரின் போது போப் அர்பன் II அவர்களும் இதே முறையையே பின்பற்றினார்கள். - (பார்க்க குறிப்பு : 1)




இப்படி முதல் சிலுவைப் போர்களுக்கு முன்னாலிருந்தே நடந்த போர்களில் நடந்த அநியாயங்கள், அத்துமீறல்கள்அத்தனையையும் நாங்கள் முஸ்லிம்கள் மீதே போட்டோம். கோரமான மனிதர்களாக முஸ்லிம்களையும் அந்தக் கோரங்களுக்கும் கொடூரங்களுக்கும் அடிப்படையாக அமையும் மதமாக கொள்கையாக இஸ்லாத்தையும் காட்டினோம்.

இத்தோடு எங்கள் பணிகள் முடிந்து விடவில்லை. நாங்கள் இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை அப்படியே இன்றளவும் தொடர்ந்து வந்துள்ளோம். ஒரு கட்டத்தில் அமெரிக்க விசுவாசம் என்பது இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அடியோடு வெறுப்பது என்றே பொருள்பட்டது.

ஆகவே நாங்கள் ஏற்படுத்தும் வெறுப்பு ஆழமாக வேர் பாய்ந்ததாக இருக்க வேண்டும். என்பதில் உறுதியாக இருந்தோம். இல்லையேல் யாரும் சிலுவைப் போருக்காக (பொருள் சிலுவைப் போர் 2.0 க்காக) சல்லிக்காசு கூட தரமாட்டார்கள். அதேபோல் சதாம் ஹுஸைன் அசிங்கியமானவர் எனச் சொன்னவுடன் அமெரிக்காவின் நாடாளுமன்றம் கோடிக்கணக்கான டாலர்களை தந்து அவரைத் தாக்குங்கள் எனச் சொல்லாது.

இதற்கெல்லாம் பெரும், பெரும் கட்டுக் கதைகள் தேவை. அவை இஸ்லாம் ஆபத்தானது முஸ்லிம்கள் ஆபத்தானவர்கள். சதாம் ஹுஸைன் ஆபத்தானவர் எனக் காட்டின. ஈராக் - இல் இருக்கும் சதாம் ஹுஸைனை நாம் தாக்கவில்லை என்றால் அமெரிக்காவின் வீதிகளில் நமது குந்தைகள் நிம்மதியாக வாழ்ந்திட இயலாது என்ற மாயையை பிரம்மையை ஏற்படுத்தின. இந்தப் பிரச்சாரத்தை இடைவிடாமல் செய்தோம்.

பாக்தாத்(ஈராக்கின் தலைநகர்) அன்றைய அந்தலூஸ்(ஸ்பெயின்), ஜெருஸலம் எல்லாம் ஒன்று போலவே ஆபத்தானவை எனப் பிரச்சாரம் செய்தோம். பின்னர் அல்காயிதாவை



உருவாக்கி அதுவே உலக மகா ஆபத்து எனப் பிரச்சாரம் செய்தோம். அதன் பின்னர் தான் எங்களுடைய சிலுவைப் போர் 2.0 தேவையான உக்கிரத்தை எட்டியது (அல்காயிதா.பார்க்க குறிப்பு:2)

இந்த வெறுப்பை, காழ்ப்பை, கசப்பை இஸ்லாமியப் பீதியை பராக் ஒபாமா காலத்திற்கும் கொண்டு சென்றோம்.

எங்களுடைய மன நிலை ***Us vs Them*** - நாங்களும் - அவர்களும் என்ற மன நிலையையே சுற்றி வந்தன. இது ஒரு பிரம்மைப் போல் எங்களோடு ஒட்டிக் கொண்டு விட்டது என்பதை நாங்கள் பிற்றை நாட்களில் தாம் உணர்ந்தோம். (பார்க்க குறிப்பு : 3)

நாங்கள் இன்றும் இந்த (மில்லினியமின்) இந்த ஆயிரம் ஆண்டில் பழைய பெரும் போர்களை நடத்திக் கொண்டிருப்பதாகவே உணருகின்றோம். இவற்றில் இரண்டு முடிந்து விட்டன. புதிய மூன்றாம் உலகப் போர் தொடங்கப்பட்டு தொடர்ந்து வருகின்றது. இந்தப் போரை நாங்கள் ***Overseas Contingent Operation*** என்று அதிகார வட்டாரத்திற்குள் பேசிக் கொள்கின்றோம்.

(14)பதிநான்காம் நூற்றாண்டில் ஓய்ந்து போன சிலுவைப் போர்கள் எங்களுடைய உலகளாவிய சிந்தனைகளை இன்றும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. (பார்க்க அடிக்குறிப்பு:04)

***"Cold War"*** என்ற பணிப்போர்கள் 1991-இல் முடிவடைந்தன. (இவை கம்யூனிசம் என்ற பொதுவுடைமை தத்துவத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்ட ரஷ்யாவுக்கும், கேப்பிடலிசம் என்ற முதலாலித்துவத்தின் பிரதிநிதியாக கருதப்பட்ட அமெரிக்காவுக்கும் இடையே நடந்த கருத்து மோதல்கள்.)

இந்தப் பனிப்போர்கள் 1991இலேயே முடிந்து போனாலும் இன்றும் அந்த கம்யூனிசத்திற்கு எதிரான குரோதம் எங்கள் மன நிலையை ஆக்கிரமித்துக் கொண்டே இருக்கின்றது. (பார்க்க அடிக்குறிப்பு:05) அன்று நாங்கள் கம்யூனிச கொள்கைகளுக்கு எதிராக செய்தவற்றையும் - சொன்னவற்றையும் இன்று இஸ்லாத்திற்கு எதிராகவும், முஸ்லிம்களுக்கு எதிராகவும் பரப்பிக் கொண்டும் சொல்லிக் கொண்டும் இருக்கின்றோம்.

ஒபாமா அமெரிக்காவின் அதிபர் பதவியை ஏற்றவுடன் இஸ்லாத்திற்கெதிரான போருக்கு ஒரு புதிய பெயரை வைத்தார். அது **Global War on Terror** - தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவியப் போர்.(பார்க்க அடிக்குறிப்பு:06)

இப்படி பெயர் வைத்ததால் ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான்,எமன், என இன்னும் பல்வேறு நாடுகளுக்கும் இந்தப் பெரும் போரைக் கொண்டு சென்றிட முடிந்தது.

இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாமிய பீதியால் உந்தப்பட்ட போர்கள், கொலை

செய்யப்பட்ட முஸ்லிம்கள், அழிக்கப்பட்ட இஸ்லாமிய அடையாளங்கள் போதாது போதாது எனக் கருதினோம். அதனால் காபுல், சனா, பாகிஸ்தானின் ஆகிய நாடுகளின் பழங்குடி மக்கள் வாழ்ந்திடும் பகுதிகள் இங்கெல்லாம் குண்டுகளை வீசினோம்.

எங்களுடைய முதல் சிலுவைப் போர்(1095 - 1274) காட்டு மிராண்டித்தனமான ஐரோப்பியர் களை, பண்பாட்டில், கலாச்சாரத்தில், நாகரிகத்தில் முன்னேறி நின்ற இஸ்லாமிய உலகின் மேல் பாய்ந்திடச் செய்தது தான். (பார்க்க அடிக்குறிப்பு:07)

சிலுவைப் போர் 2.0 இன்னும் ஆபத்தான அளவில்லா அழிவுகளை ஏற்படுத்துவது. பல உயிர்களைப் பழிவாங்கும். பெருமளவில் பணம் பாழாகும். செல்வங்கள் விரையமாகும் மேலை நாட்டவர்கள் என்ற மகிமையையே சீர்குலைக்கும். ஆனாலும் இந்தப் போர் சிலுவைப் போர் 2.0 தொய்வின்றி தொடரும்...

### குறிப்பு:1

### மூன்று முழக்கங்கள்

போப் அர்பன் II அவர்கள் தாம் ஐரோப்பாவில் வாழ்ந்த கிருஸ்தவ மக்களிடம் முஸ்லிம்களுகு எதிரான சிலுவைப் போர்களில் கலந்து கொள்வது கட்டாய மதக்கடமை என்றார். அந்தப் போர்களுக்கு புனிதப் போர்கள் "Holy Wars" எனப் பெயர் வைத்தார். அதில் மூன்று முழக்கங்களை முன் வைத்தார்;

01 The Promised Land வாக்களிக்கப்பட்ட பூமி அதாவது ஜெரூஸலமும் அதனை சுற்றி இருக்கும் பகுதிகளும் கிருஸ்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி அதனால் ஆதனை தரிசிக்க வேண்டும். அதனை மீட்க வேண்டும்.

02. அடுத்த சொல் The Choosen People "தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்." அது கிருஸ்தவர்களில் கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள்என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டது. இவர்கள் மட்டுமே அந்த இடத்திற்குச் செல்வார்கள்.

இதனை நாம் சற்று விரிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அது இந்தப் பிரச்சாரம் அதாவது கிருஸ்தவ தலைவர் போப் அர்பன் II அவர்களும் அவர்களின் சார்பில் சிலுவைப் போருக்கு ஆட்களைத் திரட்டியவர்களும், ஐரோப்பாவில் தான் இந்தப் பிரச்சாரத்தைச் செய்தார்கள். குறிப்பாக பிரான்ஸ் நாடு தான் இந்தப் பிரச்சாரத்தின் மையப் பூமியாக அமைந்தது.

ஐரோப்பாவின் மையப் பகுதிகளிலிருந்து ஜெரூஸலத்திற்குப் பயணம் செய்வது என்பது மிகவும் கடினமான ஒன்று. ஏனெனில் பயணம் நெடுநாள் பயணம். ஆகவே ஜெருஸலத்தை நோக்கி எல்லோரும் பயணம் செய்து கொள்ள மாட்டார்கள். அப்படி பயணம் மேற்கொள்ளும் எல்லோரும் ஜெருஸலம் வந்து சேர்ந்திட மாட்டார்கள். இந்தக் கையறு நிலையை சமாளிக்கவும் மக்களை உற்சாகப் படுத்திடவுமே மக்களிடம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மட்டுமே புனித இடமாகிய ஜெரூஸலத்தை சென்று சேருவார்கள் எனக் கூறினார்கள். பிரச்சாரம் செய்தார்கள்.

மூன்றாவது சொல்லாட்சி The Land Without People is For People Without Land மக்கள் இல்லாத நிலங்கள் - நிலங்கள் இல்லாத மக்களுக்கு என்றார்கள். இதன் மூலம் ஜெரூஸலத்திற்கு (இன்றைய பாலஸ்தினத்தில்) செல்பவர்களுக்கு இடம் நிச்சயம் கிடைக்கும் என்பதை உறுதி செய்தார்கள். ஐரோப்பிய நாடுகளில் இருந்த மக்களை ஒன்று திரட்டி ஒரு பெரும் போரில் ஈடுபட வைப்பதற்கு அன்று பயன்படுத்திய சொல்லாட்சி இவை.. இந்த கதை களெல்லாம் நாங்கள் இன்றும் பரப்பித்தான் வருகின்றோம் என்கிறார் ஜான் பெப்ஃபர் அவர்கள்.

### குறிப்பு: 2

### அல்காயிதா அமைப்பை உருவாக்கியது எப்படி?

அல்காயிதா என்பது அமெரிக்காவின் உருவாக்கம். பெரும்பாலும் மீடியாக்கள் வழியாகவே இதனை உருவாக்கிவிட்டார்கள். இதற்காக அமெரிக்க அரசு 540 மில்லியன் டாலர்களை ஒதுக்கியது. பல தாக்குதல்களை அமெரிக்காவின் உளவுத்துறை நடத்திவிட்டு அதனை அல்காயிதா என்ற அமைப்பின் மேல் போட்டது. இந்த அல்காயிதா என்ற அமைப்பைப் பயன்படுத்தி இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும், வெறுப்பை வளர்த்திட தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான டாலர்களை அமெரிக்க அரசு செலவிட்டு வருகின்றது.


விரிவான தகவல்களுக்கு பார்க்க : அல்காயிதா அமைப்பு உருவானது எப்படி? - ஆக்கம் ரம்ஸ் பரோடி - Ramzy Baroud - தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மது. வைகறை வெளிச்சம் - ஏப்ரல் 2017 பக்கங்கள் 64-66 - Quote : Radiance News Weekly - 25-31/12/2016

இதில் வேடிக்கை என்னவென்றால் ஜான் பெஃபர் இவற்றையெல்லாம் பச்சையாக ஒத்து கொள்கின்றார். அதனை மிகவும் நக்கலாகவும் குறிப்பிடுகின்றார். குறிப்பாக அல்காயிதா அமைப்பைப் பற்றிச் சொல்லும் போது நாங்கள் அல்காயிதா என்ற அமைப்பை உருவாக்கியவுடன் இஸ்லாத்திற்கெதிரான சண்டையை Kicked The Conflict up Several Notches. அதாவது சண்டையை பல கியர்கள் மேலே கொண்டு சென்றது.

**அடிக்குறிப்பு** 3

## Us vs Them

செப்டம்பர் 11, 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. செப்டம்பர் 13ஆம் நாள் 2001 ஆம் ஆண்டு அன்றைய அமெரிக்க அதிபர் புஷ் Modern Crusades Have Started - நவீன சிலுவைப் போர்கள் தொடங்கிவிட்டன எனப் பிரகடனப்படுத்தினார். அதில் அவர் அடிக்கடி ஒரு சொல்லைப் பயன்படுத்தினார் அது இந்த Us vs Them என்பது தான். அதனை விரிவாக இப்படிக் குறிப்பிட்டார், “If you are not with us, You are against us - நீங்கள் எங்களோடு இல்லை என்றால் நீங்கள் எங்களுக்கு எதிரானவர்களே.




இதற்கு பைபிளையும் மேற்கோள் காட்டினார். (பைபிள்: மத்தேயு: 12:30) அது பைபிளில் இந்த வசனம். இன்னும் விபரமான விளக்கங்களுக்கு “வைகறை வெளிச்சம்” மாத இதழ் பிப்ரவரி 2010 இதழை பார்க்கவும். இது குறித்த விரிவான ஆய்வு ஒன்று வேர்கள் பதிப்பகத்தின் “தாலிபானின் பிடியில்” என்ற நூலில் பிற்சேர்க்கையாக இணைக்கப் பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**:4

**மேலை நாடுகளின் மனநிலை**

இதே கருத்தை அதாவது முதல் சிலுவைப் போர்கள் தாம் (1095-2074) மேலை நாட்டவர்களின் சிந்தனைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அந்த சிலுவைப் போர்கள் என்ற கண்ணாடி வழியாகத் தான் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த முதல் சிலுவைப் போர்களை மனதில் கொண்டே அவர்கள் இன்றைய வெறுப்பையும் வடிவமைக்கின்றார்கள் என்ற உண்மையை 1934 இலேயே வெளியிட்டார் இஸ்லாமிய அறிஞர் லியோ பால்டு முஹம்மத் அசாத் அவர்கள் அதாவது ஜான் பெஃபர் அவர்கள் ஒத்துக் கொள்வதற்கு 85 ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டார்கள்.

அப்போதே முஸ்லிம்கள் மேலை நாடுகளில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதன் முதல் படியாக சிலுவைப் போர்கள் பற்றி அவர்கள் பரப்பிக் கொண்டிருக்கும் பொய் களுக்குப் பதில் சொல்லுவதிலிருந்து தொடங்க வேண்டும். இதே போல் மேலை நாடுகளில் இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொள்வதற்குப் பலப் பொன்னரிய அறிவுரைகளை வழங்கினார்கள். இவற்றால் அங்கே இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்பவர்கள் பெருமளவில் பலனடைந்தார்கள். இன்று ஐரோப்பாவில் அதி வேகமாகப் பரவிடும் மார்க்கம் இஸ்லாம் என்ற நிலையை எட்டியுள்ளது. Source: Islam at the cross Roads - by Muhammad Azad - Page 45,49 - year 1932 -

(லியோ பால்டு முஹம்மத் அசத் அவர்கள் யூத பின்னணியில் பிறந்து பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.)

லியோபால்டு முஹம்மத் அவர்கள் சொன்னதை கரன் ஆம்ஸ்ட்ராங் அவர்களும் கூறி இருக்கின்றார்கள். அதனை முந்தைய இதழ் அடிக்குறிப்பு ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

**அடிக்குறிப்பு**:5

*1991இல் பனிப்போர் முடிந்தது என ஜான் பெஃப்பர் மிகவும் எளிதாகச் சொல்லிவிட்டுப் போகின்றார். ஆனால் அந்தப் பனிபோர் எப்படி முடிந்தது என்பதை அவர் சொல்லிடவில்லை. பனிப் போர், ரஷ்யாவுக்கும், அமெரிக்காவிற்கும் இடையே நடந்தது தான். இறுதியில் ரஷ்யா 1979இல் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. அங்கு ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் ரஷ்யாவை தோற்கடித்தார்கள்.*

*வெறுங்கையோடு உலகின் வல்லரசுகளில் ஒன்றோடு மோதிய அந்த முஜாஹித்கள் பத்து ஆண்டுகள் இடைவிடா தியாகங்களுக்குப் பின் 1990 - இல் ரஷ்யப் படைகளை விரட்டி அடித்தார்கள் ரஷ்யா சுக்கு நூறாக உடைந்தது. ரஷ்யாவிலிருந்து ஆறு புதிய நாடுகள் தோன்றின. ரஷ்ய சித்தாந்த ரீதியாகவும் படுதோல்வி அடைந்தது. (தினமணி தலையங்கம் மே 3, 1988)*






*இந்த வரலாற்றை விபரமாக அறிந்திட படியுங்கள் ஆப்கானிஸ்தான் முஹாஹித்களின் தியாக வரலாறு - வேர்கள் வெளியீட்டகம் - மு. குலாம் முஹம்மது.*

**அடிக்குறிப்பு** 6

## Global War on Terror - *பொருள்*

*வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் நடந்தும் பொதுக்கூட்டங்களிலும், அரங்கங்களிலும் நாம் நீண்ட நாட்களாக ஓர் உண்மையை உரக்க முழங்கி வருகின்றோம். அது தீவிரவாதத்திற் கெதிரான உலகளாவியப் போர்.* Global War on Terror *என்பது இஸ்லாத்திற்கெதிரான போர் தான் என்பதே!*

**அடிக்குறிப்பு**:7


*வரலாறு முழுவதும் ஐரோப்பிய நாடுகள் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் போர்களைத் தொடுத்திடுவதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் "வைக்கிங்", "மஃகியார்" என்ற இரண்டு முரட்டுக் கூட்டத்தினர் போப் அர்பன் II அவர்களின் கைகளில் கிடைத்தார்கள். அவர்களின் முரட்டுத்தனத்தையும், ஈவிரக்கமற்ற கொலைகளையும், வெறியையும் அப்படியே முஸ்லிம்கள் மேல் திருப்பிவிட்டார்கள். சிலுவைப் போர்கள் என்ற பெயரில்.*


*இதனை நாம் மேலை நாட்டு சதிகள் என்ற பெயரில் நடத்திய வகுப்புக்களிலும் அரங்கங்களிலும் விளக்கி வந்துள்ளோம். ஆமாம் அதுதான் உண்மை என ஜான் பெப்ஃபர் ஒத்துக் கொள்கின்றார்.*

- Page: 30 Myths of Crusade

- Crusade 2.0

**வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**





பெரியார் – அண்ணா நினைவகம் – ஈரோடு

# பெரியார் இல்லமும்

# காயிதே மில்லத்தின் நினைவுகளும்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

ஒவ்வொரு சமூகத்திலும் அவசியம் ஏற்படும் சமயங்களில் மகத்தான தலைவர்கள் தோன்றி சாதனை நிகழ்த்தியுள்ளனர். இந்திய சுதந்திரப் போராட்ட ஆரம்ப காலத்திலிருந்தே மகத்தான தலைவர்கள் நாட்டில் தோன்றி சாதனை படைத்தனர்.

இந்திய விடுதலை வரலாற்றில் மௌலானா ஜௌஹரின் குடும்பமே பங்கு பெற்றுள்ளது. மௌலானா முஹம்மதலீ அவர் தமயனார் மௌலானா சவுக்கத்தலி ஆகிய இருவரின் பங்கும் இந்திய சுதந்திரத்தில் முக்கியமானதாகும்.

சுதந்திர போராட்ட காலத்தில் பிரச்சாரத்திற்காக நாடு பூராவும் சுற்றிய போது நம் குமரி மாவட்டத்திற்கு வந்துள்ளனர் அலீ சகோதரர்கள்.

நம் குமரி மாவட்ட அன்றைய காங்கிரஸ் தலைவர்களான Dr.நாயுடு. குலாம் ஹைதர் சாகிப்(சந்தாமியா சூப் பிரண்டின் தம்பி அன்றைய திருவாங்கூரின் போலிஸ் சூப்பிரண்ட்) அலீ சகோதரர்களை வரவேற்று ஒழுகினசேரியில் இன்றைய தீயணைப்பு நிலையம் இருக்கும்

பகுதியில் காங்கிரஸ் சார்பாக சுதந்திர பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அக்கூட்டத்தில் அலீ சகோதரர்களின் தாய் பீ அம்மா எனும் ஆதிபாபா னுஸாயி பா அம்மையார் தம் பிள்ளைகளோடு கலந்துள்ளார்.

அலீ சகோதரர்கள் கோட்டார் சந்தாமியா சூப்பிரண்டின் இல்லத்தில் தங்கியுள்ளனர் என முன்னாள் செல்வி பத்திரிகை ஆசிரியர் கோட்டார் ஆ. சுப்பையா சொன்னார்கள். அலீ சகோதரர்கள் இருவரும் இரு சிங்கங்களைப் போன்று காட்சியளிப்பர் என ஆ.சுப்பைய்யா சொன்னார்கள். இவர் செல்வி பத்திரிகை ஆசிரியர்.

மௌலானா ஜௌஹர் நினைவு மலரின் காயிதே மில்லத் என் நினைவுகள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையில் மௌலானா ஜௌஹரைப் பற்றி குறிப்பிடும் போது **1920**-ல் மஜ்லிஸூல் உலமாவின் மூன்றாவது மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது.

மௌலானாக்கள் முகம்மதலீ, சவுக்கத்தலீ, அபுல்கலாம் ஆசாத் ஆகியோரும் ஹக்கீம் அஜ்மல் கான், சௌத்திரி கலிக்குஸ்ஸமான் ஆகிய பலரும் வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் கனம் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் வீட்டில் தங்கியிருந்தனர். நான் அங்கு அவர்களோடு தங்குவதுண்டு. அச்சமயம் கனம் நாயக்கர் தாய், மனைவி குடும்பத்தார்களை அலீ சகோதரர்களுக்கு அறிமுகப்படுத்த அழைத்து வந்தார்.

தலைவர்களெல்லாம் தரையில் விரிப்பில் இருந்தார்கள். பெரியாரின் குடும்ப பெண்களை கண்டதும் தலைவர்கள் எழுந்து மரியாதை செய்து உட்கார்ந்தனர். பெரியார் அவர் தாய் குடும்பத்தாரிடம் மகாத்துமாவுக்கு உலகம் அடக்கம் அந்த மகாத்மா இந்த மௌலானா முகம்மதலீ அவர்களின் ஜேபில் (சட்ட சபையில்) என்றார்.

மௌலானா சவுக்கத்தலீ திரும்பவும் எழுந்து பெரியாரின் அம்மையிடம் நீங்கள் தேசத்திற்காக ஒரு மகனைப் பெற்ற புண்ணியவதி - நீங்கள் என்னை ஆசிர்வதியுங்களென வேண்டினார்கள்.

இந்த நிகழ்வுகளையெல்லாம் புன் முறுவலோடு சாந்த சொரூபியாக பார்த்துக் கொண்டிருந்தார்கள் மௌலான முகம்மதலீ ஆனால் மேடை ஏறினால் உணர்ச்சியூட்டும், அனல் பறக்கும் அவர் பேச்சில் நாயக்கர் மிட்டில் அலீ சகோதரர்கள் தங்கியிருக்கும் போது அவர்களைப் பார்க்க பெரும் கூட்டம் கூடும். மௌலானா நீரளிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருந்தாலும் மக்களைப் பார்த்ததும் மக்களின் வர்புறுத்தலுக்காக உரையாற்றுவார். அவ்வுரை காந்த சக்தியுடையதாக இருக்கும். மக்கள் உரையாற்ற வற்புறுத்தவே மௌலானா பெரியார் வீட்டு மாடி மீது நன்று உரையாற்றியுள்ளார்.

சுதந்திர போராட்ட காலத்தில் அலிகருக்கு எதிராக ஜாமியாமில்லியா மௌலானா முகம்மதலியால் ஆரம்பிக்கப்பட்டு ஜாகிர் ஹுஸைன், ஹக்கிம், அஜ்மல் ஆகியோர்களால் வளர்க்கப்பட்டு ஜாமியா பலகீனமான போது டாக்டர் அன்ஸாரி, மௌலானா ஆஸாத், டாக்டர் ஜாகிர் ஹுஸைன் ஆகியோர் சென்னை வந்து ஜனாப் ஜமால் முகம்மது சாகிப் உதவி புரிந்து ஏனையோரிடமும் உதவ வேண்டினர் என முன்னாள் ஜனாதிபதி டாக்டர். ஜாகிர் ஹுஸைன் என்னிடம் சொன்னார்கள் என்று காயிதே மில்லத் குறிப்பிடுகிறார்கள்.

நான் ஈரோட்டிற்கு பல முறை சென்றும் பெரியார் வீட்டை பார்க்க வேண்டுமென்ற ஆவலுண்டு காரணம் அவ்வீட்டிற்கு வந்து போன தலைவர்களின் பட்டியலை நான் பார்த்துள்ளதால் **24.05.2015** அன்று நானும் குடும்பமும் பகல் **12.30** பெரியார் வீடு பார்க்க போனோம். அக்காலத்தில் கட்டப்பட்ட பழைமையான மாடி வீடு.

பெரியார் குடும்பம் அண்ணா குடும்பம் வசித்த இடம் பெரியாரின் கண்ணாடி, கைத்தடி, கட்டில், புத்தகங்கள் போன்றவை பார்த்தோம். மேலும் சுதந்திர போராட்டத்தில் பெரியார் எடுத்த புகைப்படங்களையும் பார்த்தோம்.

பெரியார் வீட்டினை பார்த்த போது நாட்டின் முன்னாள் விடுதலை வீரர்களான மௌலானா முகம்மதலீ, மௌலானா அபுல் கலாம் ஆஸாத் போன்ற தலைவர்கள் வந்து போன வீட்டில் நாமும் போனோமே என்ற நினைவு பசுமையாக மனதில் நிழலாடியது சமுதாய சீர்த்திருத்தவாதியின் வீட்டிற்கு சென்ற ஒரு திருப்தியும் மனதிற்கு ஏற்பட்டது.

# மதமாற்றங்கள் பற்றி......?

தலையங்கம்

இப்படி ஒரு கேள்வியை "விஜய பாரதம்" என்றொரு இதழ் எழுப்பி அதற்கு இப்படி ஒரு பதிலை தந்திருக்கின்றது.

"மதமாற்றம் ஒரு பலாத்காரம் என்கிறார் சுவாமி தயானந்த சரஸ்வதி. பலாத்காரம் என்றால் உடலில் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் வரும். உடலில் காயத்தை ஏற்படுத்துகிற வன்முறையைக் காட்டிலும் மதமாற்றம் என்ற வன்முறை கொடூரமானது. ஏனெனில் காயம் உடலில் மட்டுமல்ல உள் மனதிலும் ஏற்படுகின்றது.

(விஜய பாரதம்: 7.06.2019 - பக்கம்: 33)

இந்தக் கேள்வியை வெளியிட்ட 24.06.2019 விடுதலை இதழ் ஒரு பதிலைத் தந்துள்ளது. அந்தப் பதிலையும் விவேகானந்தர் அவர்கள் வாயாலேயே தந்திருக்கின்றது.

இதோ சுவாமி விவேகானந்தர் பேசுகிறார்;

"ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் என்று இருந்த உரிமைகளை உடைத்ததற்காக முஸ்லிம் ஆட்சிக்கு நாம் கடமைப் பட்டுள்ளோம். முஸ்லிம் ஆட்சியின் முழுவதும் கெட்டது எனச் சொல்ல முடியாது. எதுவுமே முழுவதுமாக கெட்டதாக இருப்பதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் இந்தியாவில் ஏற்பட்ட முஸ்லிம் ஆட்சி விடுதலை வழங்கியது. எனவே தான் வட இந்திய மக்களில் ஐந்தில் ஒரு பங்கு மக்கள் முஸ்லிம்களாயினர். வாள் தான் இந்த மதமாற்றத்தை முழுவதும் ஏற்படுத்தியது என்பது சரியல்ல. வாளும், நெருப்புமே இத்தனை பேரையும் மாற்றியது என்று கூறுவது பயித்தியக்காரத்தனத்தின் உச்ச நிலையாகும்."

"20 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடு சென்னை மாகாண மக்கள் கிருஸ்தவ மதத்தைத் தழுவி விடுவார்கள். நீங்கள் அவர்களின் குறைகளை களையவில்லையானால்"

"நான் மலபாரில் பார்த்ததை விட மட்டமான விஷயத்தை உலகில் , எங்கேனும், யாரேனும் பார்த்திட முடியுமா?"

"உயர்ந்த சாதியினர் செல்லும் தெருக்கள் வழியே ஏழைப் பறையன் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் அதே ஏழைப் பறையன் ஒரு விசித்திரமான ஆங்கிலப் பெயரை

தனக்குச் சூட்டிக் கொண்டால் பின்னர் அவன் உயர் சாதியினர் செல்லும் தெருக்கள் வழியே அனுமதிக்கப்படுகின்றான்"

"இந்த நடைமுறையிலிருந்து இந்த உயர் சாதி மலபார் மக்கள் அனைவரும் பைத்தியக்காரர்கள் என்றும் அவர்களது இல்லங்கள் ஒவ்வொன்றும் ஒரு பைத்தியக்கார விடுதி என்றும் தெரியவில்லையா?

(ஆதாரம்: ஸ்ரீ ராமகிருஷ்ணா தபோவனம். 1983 இல் வெளியிட்டுள்ள "The Man Making Message of Vivekananda for the use of College Students)

இஸ்லாத்தை மக்கள் ஏன் ஏற்றுக் கொள்கின்றார்கள்? குறிப்பாக வட இந்திய மக்கள் ஏன் ஏற்றுக் கொண்டார்கள் என்பதை சுவாமி விவேகானந்தர் மிகவும் தெளிவாகவே விளக்கியுள்ளார்.

மதம் மாறுவது கொடூரமல்ல. மதம் மாறாமலிருப்பதே கொடூரங்களை வரவழைத்துக் கொள்வதாகும். இதையே இந்தியாவின் சிற்பி என ஆழைக்கப்பட்ட பண்டித நேரு அவர்களும் தான் எழுதிய Discovery of India என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனாலும் பொய்களைத் திட்டமிட்டே பரப்புபவர்கள் வாளால் பரப்பப்பட்ட மார்க்கம் தான் இஸ்லாம் எனப் பொய்களைப் பரப்பிக் கொண்டே இருக்கின்றார்கள். அதன் வழி வட இந்தியாவில் வகுப்பு வாதங்களையும் இனப்படுகொலைகளையும் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கின்றார்கள். இவற்றால் கொடூரங்களை நிகழ்த்தி இரத்தம் சிந்தாத நாளில்லை. அப்பாவிகளின் உயிரைப் பறிக்காத நாளில்லை என்றாக்கிவிட்டார்கள்.

இஸ்லாம் என்பது ஒரு விடுதலை மார்க்கம். அது மனிதர்களை அனைத்து அடிமைத்தளைகளிலிருந்தும் அத்தனை அறியாமையிலிருந்தும் மக்களை விடுவிக்கும் ஒரு மகத்தான மார்க்கம். இதுபோன்ற கொடுமைகளுக்கு முடிவுகட்ட சங்கிலித் தொடராக இறைத் தூதர்களை அனுப்பி இறைவனே இந்த மார்க்கத்தை நிலைநாட்டினான்.

அவ்வாறு சங்கிலித் தொடராய் அனுப்பப்பட்ட நபிமார்களில் இறுதியாக அனுப்பப்பட்டவர்களே முஹம்மத்(ஸல்) அவர்கள். அவர்களின் பொன்னரிய லட்சியம் பற்றி இறைவன் இப்படிக் குறிப்பிடுகின்றான்;

"எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ - அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப் பட்டிருப்பதைக் காண்பார்கள்; அவர், அவர்களை நன்மையான காரியங்களை செய்யுமாறு ஏவுவார்; பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார்; தூய்மையான ஆகாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார்; கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார்; அவர்களுடைய பளுவான சுமைகளையும், அவர்கள் மீது இருந்த விலங்குகளையும், இறக்கிவிடுவார்; எனவே எவர்கள் அவரை மெய்யாகவே நம்பி, அவரைக் கண்ணியப்படுத்தி, அவருக்கு உதவி செய்து, அவருடன் அருளப்பட்டிருக்கும் ஒளிமயமான (வேதத்)தையும் பின் பற்றுகிறார்களோ, அவர்கள் தாம் வெற்றி பெறுவார்கள்.

(நபியே!) நீர் கூறுவீராக: "மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்; வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது, அவனைத் தவிர இறைவன் வேறுயாருமில்லை - அவனே உயிர்ப்பிக்கின்றான்; அவனே மரணம் அடையும்படியும் செய்கின்றான் - ஆகவே, அல்லாஹ்வின் மீதும், எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய அவன் தூதரின் மீதும் ஈமான் கொள்ளுங்கள், அவரும் அல்லாஹ்வின் மீதும் அவன் வசனங்களின் மீதும் ஈமான் கொள்கிறார் - அவரையே பின்பற்றுங்கள்; நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்."(அல்குர்ஆன்: 7;157-158)

இதுவே இஸ்லாத்தின் தெளிவான அழைப்பு.

இதனை ஏற்போம். வெற்றிப் பெறுவோம்.

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்
# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)



அபூ அப்ரஹ்

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப்போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். தம் சொந்த மக்களையும் கூட அவர்கள் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன்முதலில் அவர்களை நோக்கி தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நியாபகப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னாபின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள். நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

# டமாஸ்கஸை கைப்பற்றும் ஃபிரான்குகள் திட்டம்

▼▼▼

**ஹிஜ்ரி 542 கி.பி.1147ம் ஆண்டு**

*இந்த ஆண்டில் ரோம மன்னர்களும் ஃபிரான்க்குகள் எனப்படும் ஒட்டுமொத்த ஜெர்மானிய மன்னர்களும் ஒன்றாக இணைந்து இஸ்லாமிய நிலங்களை கைப்பற்ற வருகிறார்கள் என்ற செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தன. இதற்காக ரோமானிய மன்னர்களும் ஃபிரான்குகளும் தங்களின் குடிமக்களிடம் ஒத்துழைப்பை கோரினர். அவர்களையும் தங்களின் படையினருடன் சேர்த்து கொண்டனர். அவர்கள் எண்ணற்ற போர் தளவாடங்கள், செல்வம், படைவீரர்கள் இவற்றுடன் இஸ்லாமிய நிலங்களை நோக்கி படை எடுத்து வந்தனர். அந்தப்படையில் குதிரைப்படை வீரர்களையும் சேர்த்து கிட்டத்தட்ட பத்து இலட்சம் படைவீரர்கள் இருந்தனர்.*

*அந்த படையினர் முதலில் கான்ஸ்டான்டைன் நோபிள் எனப்படும் இப்போதைய துருக்கியை கைப்பற்றினர். போரை தவிர்க்க அமைதியை நிலைநாட்ட வேறுவழியின்றி அதன் மன்னர் அந்த படையினரின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார்.*

*இந்த செய்திகளை கேள்விப்பட்ட அண்டை மாநில இஸ்லாமிய ஆட்சியாளர்கள் தங்கள் நிலங்களை பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். ஃபிரான்குகள் எந்தெந்த வழிகளில் எல்லாம் தங்களை வந்து*

தாக்கக்கூடுமோ அந்த வழிகளையெல்லாம் பாதுகாக்கவும் அரண் அமைக்கவும் ஆரம்பித்தனர். அது மட்டுமன்றி எல்லைப்புறங்களில் இருந்த ஃபிரான்குகளுடன் கடுமையாக போர் புரியவும் செய்தனர். இதன் காரணமாக அதிக அளவிலான ஃபிரான்குகள் கொல்லப்பட்டனர். பல ஃபிரான்குகள் பாதைகள் தடைபட்டதன் காரணமாக சரியான உணவு கிடைக்கப் பெறாமல் பட்டினியால் இறந்தனர்.

**ஹிஜ்ரி 543 கி.பி.1148ம் ஆண்டு**

இப்போது மத்திய தரைக்கடல் பகுதி கடல் நகரங்களான டையர் மற்றும் அக்ர் (ஜிஹ்கூஃமீ ணீஸீபீ கிநீகூஃமீ) பகுதிகளுக்கு ஃபிரான்குகளில் கப்பல்கள் படையுடன் வந்து இறங்கியுள்ளதாக தகவல்கள் வந்தன. ஏற்கனவே முஸ்லிம்களின் தாக்குதல்களாலும் பசி பட்டினியாலும் இறந்து விட்டவர்களை தவிர்த்து மீதமானவர்களும் இங்கு வந்து சேர்ந்தனர். அவர்களையும் இப்போது வந்திருந்தவர்களையும் சேர்த்து மொத்தம் எட்டு இலட்சம் படைவீரர்கள் தற்போது இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டனர்.




அவர்கள் அனைவரும் ஜெருசலத்தை நோக்கி முதலில் புனித பயணத்திற்கு கிளம்பினர். அதில் சிலர் புனித பயணத்தை முடித்துக்கொண்டு கடல்வழியாக தங்களின் தாயகத்திற்கு திரும்பி விட்டனர். புனித பயணம் மேற்கொண்டவர் களில் பலர் இறந்து விட்டனர். இதில் அவர்களின் மன்னர்கள் சிலரும் அடங்குவர். பல பிரச்சனைகளுக்கு பிறகு மீதமிருந்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து டமாஸ்கஸை முற்றுகையிடுவது என முடிவு செய்தனர்.

**மிகப் பிரமாண்டமான படை**

ஜெர்மானிய ஃபிரான்க்குளின் மன்னன் மிகப்பெரிய இராணுவத்துடன் லெவான்தை நோக்கி தன்னுடைய படையை நகர்த்தினான். அவன் லெவான்தை அடைந்தவுடன் லெவான்தை சேர்ந்த ஃபிரான்குகளும் அவனுடன் சேர்ந்து கொண்டு டமாஸ்கஸை வெற்றிக் கொள்ள போர் செய்வது என ஒப்புக்கொண்டனர். இதற்கு முக்கிய காரணம் ஜெர்மானிய மன்னனின் மிகப் பிரமாண்டமான படை பலம். எனவே, இந்த படையைக் கொண்டு மிக எளிதில் டமாஸ்கஸை வெற்றிக் கொண்டு விட முடியும் என அவர்கள் திடமாக நம்பினர்.

அப்போது டமாஸ்கசின் ஆட்சியாளராக இருந்தவர் முஜிருத்தீன் அர்தக் இப்னு முஹம்மத் இப்னு பூரி இப்னு துக்தகீன். இவர் இதன் ஆட்சியாளர் என்ற பெயரில் இருந்தாலும் இதனை உண்மையில் ஆட்சி செய்து கொண்டிருந்தவர் முய்னுதீன் அனார் என்பவர். இவர் ஒரு மம்லூக். இவர் முஜிருத்தீனின் பாட்டனார் துக்தகீனிடம் மம்லூக்காக இருந்தவர். (மம்லூக் என்பவர்கள் அடிமை வம்சத்தினர். ஆனால் சாதாரண அடிமைகளை விட மேலானவர்களாகக் கருதப்பட்டவர்கள். இவர்கள் போர் குணம் கொண்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் துருக்கி, மங்கோலியா, செசன்ய (கவ்காஸ்) பகுதிகளை சேர்ந்தவர்கள். பின்னாட்களில் இவர்கள் பெரும்பலம் கொண்ட இராணுவமாக மாறினர். பின்னர் இவர்கள் பல பகுதிகளில் ஆட்சியாளர்களாகவும் மாறினர். மிக முக்கியமாக எதிப்தின் ஆட்சியாளராகவும் இவர்கள் இருந்தனர். மங்கோலியர்களுக்கு எதிராக இவர்கள் ஐன்ஜாலுத் என்ற இடத்தில் பெற்ற வெற்றி வரலாற்றில் மிக பிரசித்தமானது. இவர்களின் இந்த வெற்றி மங்கோலியர் களிடமிருந்து எகிப்தையும், இஸ்லாமியர்

களையும் காத்தது. மங்கோலியர்களின் மேற்கு நோக்கிய வளர்ச்சியை தடுத்தது)

மம்லூக்கான முயீன் தன் படைவீரர்களையும் மக்களையும் அணி சேர்த்து டமாஸ்கஸை ஃபிரான்குகளிடமிருந்து பாதுகாக்க ஒரு இஸ்லாமிய படையை உருவாக்கினார்.

**இறைவனிடம் செய்து கொண்ட வியாபாரம்**

இந்தப் படையில் பங்கேற்றவர்களில் ஒருவர் ஷெய்கு ஹுஜ்ஜதுத்தீன் அபூ அல்ஹஜ்ஜாத் யூசுப் இப்னு துனாஸல் ஃபின்தலவி என்பவர். இவர் மக்கள் மத்தியில் மிகவும் புகழ் பெற்ற இமாம். இவர் மாலிகி மத்ஹபை சார்ந்தவர். மிகவும் வயதானவர். இவரும் அந்தப்படையில் தன்னை இணைத்துக் கொண்டார். அவரிடம் படை குதிரை எதுவும் இருக்கவில்லை. எனவே, காலாட்படையில் தன்னை போர்வீரராக இணைத்துக்கொண்டார்.

முயீன் போர்களத்தில் இமாம் ஹுஜ்ஜதுத்தீனை அவர்களைக் கண்டார். கண்டவுடன் மிகுந்த மரியாதையுடன் இறங்கி அவரிடம் சென்று, அவரிடம் சலாம் கூறி பணிவுடன்,"ஷேக் அவர்களே, உங்களுக்கு இந்தப்போரிலிருந்து நிச்சயம் விதிவிலக்கு உண்டு. காரணம் உங்களின் வயது. நீங்கள் மிகவும் வயதானவர். உங்களை போன்ற தலை நரைத்த வயதானவர்களுக்கும் பலஹீனமானவர் களுக்கும் பதிலாக ஜிஹாதை நிறைவேற்ற நாங்கள் இருக்கிறோம். நீங்கள் நிற்க வேண்டிய இடம் போர்களம் அல்ல. இந்தப்போரில் ஜிஹாதில் பங்கேற்க உங்களுக்கு போதுமான உடல்பலம் இல்லை. ஆகவே, நீங்கள் வீட்டிலேயே இருந்து விடுங்கள்" என்று கோரினார்.

இதற்கு பதிலளித்த இமாம் அவர்கள் "நான் விற்று விட்டேன். அவன் வாங்கிக் கொண்டான். நான் இந்த வியாபாரத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை" என்று கண்டிப்பாக கூறி விட்டார். பின்னர் அவர் அந்த போரில் கொல்லப்பட்டு ஷஹீதானார்.

இமாம் அவர்கள் குர்ஆனில் 9வது அத்தியாயம் 111 வசனத்தில் கூறப்பட்டிருந்த "(நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களின் உயிர்களையும், பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்கு சுவனம் இருக்கிறது என்ற (அடிப்படையில்) விலைக்கு வாங்கிக் கொண்டான்; அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள் - அப்போது அவர்கள் (எதிரிகளை), வெட்டுகிறார்கள்; (எதிரிகளால்) வெட்டவும் படுகிறார்கள். தவ்ராத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் இதைத் திட்டமாக்கிய நிலையில் வாக்களித்துள்ளான். அல்லாஹ்வை விட வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுபவர் யார்? ஆகவே, நீங்கள் அவனுடன் செய்து கொண்ட இவ்வாணிபத்தைப் பற்றி மகிழ்ச்சி அடையுங்கள் - இதுவே மகத்தான வெற்றியாகும்." என்ற வசனத்தை சுட்டிக் காட்டியே இதனை கூறியிருந்தார்.

அவர் இறைவனிடம் செய்து கொண்ட அந்த வியாபாராத்தில் இருந்து பின்வாங்கவில்லை.

**தோல்வி முகத்தில் டமாஸ்கஸ்**

இதற்கிடையே முஸ்லிம்கள் கொஞ்சம் கொஞ்சமாக தன் பலத்தை இழந்து கொண்டிருந்தனர். எதிரிகளோ மிகுந்த பலத்துடன் உற்சாகத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தனர். எனவே, முயினுத்தீன் தன்னுடைய இந்த தோல்வி முகத்தை ஸைஃபுத்தீன் (நூருத்தீன் ஸங்கி அவர்களின் சகோதரர்) அவர்களிடம் தகவல் அனுப்பி எடுத்துக்கூறி தனக்கு உதவுமாறு கோரி இருந்தார்.

**ஸைஃபுத்தீன் அவர்களின் உதவி**

உடனடியாக ஸைஃபுத்தீன் அவர்கள் தன் படையை கிளப்பிக் கொண்டு ஹிம்ஸை நோக்கி படையெடுத்தார். பின்னர் தன் படை கிளம்பி வருவது குறித்த தகவலை முயீனுத்தீன் அவர்களுக்கு தெரியப்படுத்தினார்.

அதில், "நான் என் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மக்களில் யாரெல்லாம் ஆயுதந்தாங்கி போர் செய்ய இயலுமோ அவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு உங்களுக்கு உதவுவதற்காக வந்து கொண்டு இருக்கிறேன். என் உற்றார் உறவினர் யாரும் டமாஸ்கசின் ஆட்சியாளராக இல்லாத நிலையில் நான் உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறேன். ஒருவேளை நான் கொல்லப்பட்டுவிட்டால், அல்லாஹ் அவ்வாறு நிகழாமல் பாதுகாப்பானாக, நாங்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டு விடுவோம். அதன் பின்னர் டமாஸ்கசும் மற்ற இஸ்லாமிய அரசுகளும் ஃபிரான்குகளின் கைகளுக்கு மிக எளிதாக சென்றுவிடும்.

எனவே, நான் இந்த ஆபத்துகளை மீறி உறுதியோடு ஃபிரான்குகளை எதிர்கொள்ள வேண்டும் என்றால் என்னுடைய நம்பிக்கையை பெற்ற யாராவது ஒருவரிடம் நீங்கள் டமாஸ்கஸை ஒப்படைக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் ஃபிரான்குகளை வெற்றிக்கொண்டவுடன் நிச்சயமாக அங்கு நான் தங்க மாட்டேன். அதனை உடனடியாக உங்களிடம் ஒப்படைத்துவிட்டு என்னுடைய தாயகத்திற்கு திரும்பிவிடுவேன்" என்று கூறி இருந்தார்.

**முயீனுத்தீன் அவர்களின் இராஜதந்திரம்**

இதற்கு பதிலளிக்காமல் முயீனுத்தீன் முதலில் ஃபிரான்குகளின் நாடித்துடிப்பை சோதித்துபார்க்க நினைத்தார். அவர்களிடையே குழப்பத்தை உண்டு பண்ண முடிவு செய்தார். ஜெர்மன் ஃபிரான்குகளுக்கு செய்தி அனுப்பி அவர்கள் உடனடியாக திரும்பி செல்லா விட்டால் அவர்களை தாக்கி அழிக்கப் போவதாக பயமுறுத்தினார்.

"மன்னர் ஸைஃபுத்தீன் மிகப்பெரிய படையுடன் உங்களை தாக்கி அழிக்க வந்துள்ளார். நீங்கள் உடனடியாக உங்கள் முற்றுகையை நீக்கிக்கொண்டு இந்த இடத்தை விட்டு அகன்று செல்லவில்லை என்றால் நான் என்னை அவரிடம் ஒப்படைத்துக் கொண்டு உங்களுக்கு எதிராக மிகப்பெரிய போர் ஒன்றை தொடுப்பேன். அதில் உங்களுக்கு மரணமொன்றே பரிசாகக் கிடைக்கும். அதில் உங்களுடைய பாதுகாப்பை கனவில் கூட நீங்கள் நினைத்து பார்க்க முடியாது." என்று அந்த செய்தியில் அவர் கூறி இருந்தார். இந்த செய்தி ஜெர்மன் ஃபிரான்குகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது.

**லெவான்தின் ஃபிரான்குகளிடையே குழப்பம்**

இதற்கிடையில் லெவான்தை சேர்ந்த ஃபிரான்குகளுக்கு ஜெர்மன் ஃபிரான்குகள் குறித்து எச்சரிக்கை செய்து ஒரு செய்தி ஒன்றை அனுப்பி அவர்களையும் முயீனுத்தீன் குழப்பினார். அதில், "நீங்கள் குழப்பமான மனோநிலையில் உள்ளீர்கள் என்பது எனக்கு தெரியும். டமாஸ்கஸை ஜெர்மன் ஃபிரான்குகள் ஆக்கிரமித்துக் கொண்டால் நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களையெல்லாம் அவர்களிடம் இழக்க நேரிடும். அதன் பின்னர் அவர்களிடமிருந்து அதைத் திரும்பப் பெறுவது என்பது உங்களால் இயலாது. ஒருவேளை நான் ஸைஃபுத்தீனிடம் என் நாட்டை ஒப்படைத்து விட்டு அவரின் கட்டுப்பாட்டிற்குள் சென்றுவிட்டால் நீங்கள் அவருக்கு எதிராக போர் செய்யவோ அவரை தடுக்கவோ சக்தி பெறமாட்டீர்கள். அதுமட்டுமல்ல அவர் ஜெரூசலத்தையும் வெற்றி கொண்டுவிடுவார். எனவே நம் இருவருக்கும் பயன்தரக்கூடிய வகையில் நாம் சிந்திக்க வேண்டும்"

**பனியா கோட்டை**

இந்த செய்தியை கேட்டு குழப்பத்தில் ஆழ்ந்திருந்த லெவான்தின் ஃபிரான்குகளுக்கு அவர் இன்னொரு சலுகையையும் தர முன் வந்தார். அவர்கள் ஒருவேளை ஜெர்மன் ஃபிரான்குகளை எப்படியாவது திருப்பி அனுப்புவார்களேயானால் அதற்கு அவர்களை சம்மதிக்க வைப்பார்களேயானால் அவர்களுக்கு பனியா கோட்டையை விட்டுத் தருவதாக வாக்களித்தார்.

முயீனுத்துன் அவர்களின் வார்த்தைகளில் ஆசையும் நம்பிக்கையும் கொண்ட லெவான்தின் ஃபிரான்குகள் அவரின் இந்த சலுகைக்கு ஒப்புக்கொண்டனர். எனவே, அவர்கள் ஜெர்மன் ஃபிரான்குகளின் மன்னரை மொத்தமாக சென்று சந்தித்து ஸைஃபுத்தீன் அவர்களின் வீரத்தை பற்றியும் அவரின் படைகளின் எண்ணிக்கை குறித்தும் பல்வேறு பக்கத்தில் இருந்து அவருக்கு கிடைக்கக் கூடிய உதவிகள் குறித்தும் எடுத்துக்கூறி ஜெர்மன் ஃபிரான்குகளின் மன்னர்களை பயமுறுத்தினர்.

ஒருவேளை இந்தப்போரில் தோற்று ஸைஃபுத்தீன் அவர்களிடம் டமாஸ்கஸ் சென்று விட்டால் தங்களால் ஒருபோதும் லெவான்தில் வாழ இயலாது என்றும் கூறி அழுது புலம்பினர். இதையெல்லம் அவர்கள் பனியா கோட்டைக் காகவும் வரப்போகும் ஆபத்துகளை தடுத்துக் கொள்வதற்காகவும் செய்தனர். இந்த புலம்பல்களை எல்லாம் கேட்டப்பின்னர் ஜெர்மனியின் மன்னன் அவர்களின் கோரிக்கையை ஏற்று டமாஸ்கஸை விட்டு நீங்கி சென்றான். அதேப்போல் லெவான்தின் ஃபிரான்குகளும் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.


எந்த போரும் நடக்காமல் தன் தந்திரத்தினாலேயே முயீனுத்தீன் டமாஸ்கஸை காப்பாற்றிக் கொண்டார். வாக்களிக்கப்பட்டது போலவே பனியா கோட்டையை அவர்கள் முயீனுத்தீனிடமிருந்து பெற்றுக்கொண்டனர். நூருத்தீன் ஸங்கி அவர்கள் அதனை வெற்றி கொள்ளும் வரை அந்த கோட்டை ஃபிரான்குகளின் கைகளிலேயே இருந்தது.

இப்படி டமாஸ்கசுக்கு வர இருந்த பேராபத்து தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போனது போல் பனியா கோட்டையோடு சென்றது. இதற்கு முயீனுத்தீன் அவர்களின் இராஜதந்திரமும் அவருக்கு ஸைஃபுத்தீன் அவர்கள் பக்கபலமாக இருந்ததும் தான் காரணம்.

இந்த காலகட்டத்தில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் சில முடிவெடுத்தார். அது பலருக்கு அடிவயிற்றில் புளியை கரைத்தது. -இன்ஷா அல்லாஹ் வளரும்.

# 11

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?



# அனிதா (எ) ஃபாத்திமா

### இந்த தொடர் எதற்கு?

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சகோதர சகோதரிகளின் அனுபவங்களை அறிமுகப்படுத்தும் இந்த தொடர் ஏன்? எதற்கு? என்று சிலர் கேள்வி எழுப்பிய வண்ணம் உள்ளனர்.

சமகால தமிழகத்தில் முஸ்லிம்கள் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுகிறார்கள். முஸ்லிம் இளைஞர்கள் இந்து பெண்களை காதலித்து முஸ்லிமாக மாற்றிவிடுகிறார்கள்.(லவ் ஜிஹாத்) இது போன்ற சம்பவங்களை தடுக்க நினைக்கும் இராமலிங்கம் போன்றோர்களை படுகொலை செய்கிறார்கள் என்றொரு பொய்யான பிரச்சாரம் தமிழகம் முழுவதும் பரப்பப்பட்டு வருகின்றது.

இது ஒரு புறமிருக்க. இன்னொரு புறம் கிருஷ்ணசாமி போன்றோர்கள், “தமிழகத்தில் யாரும் இந்து மதத்தை விட்டு மதம் மாறுவதில்லை. எல்லோரும் இந்துக்களாக இருப்பதற்கே விரும்புகிறார்கள்.” என்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆக! சகோதர சமுதாயங்களிலிருந்து ஏன் இஸ்லாத்தை நோக்கி அலை அலையாய் வந்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தவே இந்த தொடர்.

அதுமட்டுமில்லாமல் பிரபலங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் அவர்களது அனுபவங்களை தேடித் தேடி அறிந்துக் கொள்ள ஆர்வம் காட்டும் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு சராசரி ஆண்/பெண் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் போது அவர்கள் என்ன மாதிரியான நிகழ்வுகளையெல்லாம் சந்திக்கிறார்கள், அதையெல்லாம் பொருத்துக் கொண்டு எப்படி இந்த மார்க்கத்தில் உறுதியோடு நிற்கிறார்கள் என்பதை அறிமுகப்படுத்துவதும் இந்த தொடரின் முக்கிய நோக்கமாகும். எனவே வாசகர்கள் வழக்கம் போல் தங்களது ஆதரவுகளை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.... என்னுடைய பெயர் அனிதா. (பெயர் மாற்றப்பட்டுள்ளது) நான் இந்து மதத்தில் பிராமின வகுப்பை சார்ந்த பெண். என்னுடைய குடும்பத்தில் தாய், தந்தை, தம்பி மற்றும் நான். தற்போது நான் இஸ்லாமிய மார்க்கத்திற்கு வந்து திருமணம் செய்துக் கொண்டேன். என்னுடைய கணவர் பெயர் இஸ்மாயில். என்னுடைய கணவரும் இஸ்லாத்திற்கு வந்தவர்தான். எனக்கு அபூபக்கர் சித்தீக் என்ற ஒரு ஆண் குழந்தையும் உண்டு. நான் சாதாரணமான கல்விதான் முடித்துள்ளேன். பத்தாம் வகுப்பு முடித்துள்ளேன். இப்போது அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய தூதரும் சொன்ன விடயங்களை அறிந்துக் கொள்வதற்காக ஆலிமா படிப்பு படித்துக் கொண்டிருக்கின்றேன்.

நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது என் தோழிகள் தொழுவதைப் பார்த்தும், அவர்களிடம் இருந்த குர்ஆனைப் பற்றி நான் கேட்டேன். அது என்ன? அதை பார்க்கலாமா? என்று கேட்டேன். அதற்கவர்கள் இந்த குர்ஆன் என்பது தூய்மையானது. இதை நீங்களெல்லாம் தொடக்கூடாது. நாங்கள் மட்டும் படிக்க வேண்டிய வேதம் இது என்று கூறினார்கள்.

அதைக் கேட்ட எனக்கு அவமானமாக இருந்தது. அதனால் இதைப் பற்றி நாம் தெரிந்துக் கொண்டு அவர்களை அசிங்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் குர்ஆனை படிக்க ஆரம்பித்தேன். தினத்தந்தியில் வரும் குர்ஆன் வசனங்களை சேகரிக்க ஆரம்பித்தேன்.

அதன் பின், “வின்” டீவியில் ஒளிபரப்பாகும் இஸ்லாமிய நிகழ்ச்சி ஒன்றினை பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த நிகழ்ச்சி மூலம் “முஹம்மத் ஜுப்லி” எனும் நபரிடம் தொடர்பு கொண்டு பேசி அவர்கள் மூலம் நான் இஸ்லாத்தை அறிந்துக் கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். திருக்கலிமாவையும் மொழிந்துவிட்டேன்.

**சோதனைகள்**

நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விடயம் என் வீட்டார்களுக்கு தெரிந்துவிட்டது, அதனால் என்னை என் தாத்தா வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். அங்கு என்னை வீட்டுச் சிறையிலேயே வைத்தார்கள். அப்போது என்னுடைய மாமா ஒருவர் இந்து முன்னணியில் இருக்கிறார். அவர் என்னிடம் வந்து எவ்வளவோ பேசிப் பார்த்தார். நான் வலுவாக கூறி விட்டேன். எனக்கு இஸ்லாம் தான் முக்கியம் என்று. அதன் பின் என்னிடம் இருந்த குர்ஆன், இஸ்லாம் சம்பந்தமான புத்தகங்கள் எல்லாவற்றையும் குப்பையில் போட்டு விட்டார்கள். அந்த காலங்களில் எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. என் கழுத்தில் காலை வைத்து மிதித்து இந்த இஸ்லாம் மதத்தை விட்டுவிடு என்று அடிப்பார்கள். அப்போதும் நான் எல்லாவற்றையும் அல்லாஹ்விற்காக பொருத்துக் கொண்டு உறுதியோடு நின்றேன்.

அந்த சோதனையான காலங்களில் என்னால் ஹிஜாப் போட முடியாமல், குர்ஆன் படிக்க முடியாமல் என் வாழ்க்கையையே வெறுமையாக இருப்பதைப் போன்று உணர்ந்தேன். மற்ற இஸ்லாமிய பிள்ளைகளைப் போல் மத்ரஸாக்களில் சென்று படிக்க எனக்கு ஆசையாக இருக்கும். ஆனால் என் வீட்டார்கள் என்னை வீட்டை விட்டு வெளியவே விடமாட்டார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்கு தெரியாமல் சென்று படித்து வருவேன். கையில் பணம் இருக்காது. சுமார் 8 கிலோ மீட்டர் நடந்தே சென்று இஸ்லாமிய கல்வி கற்று வருவேன்.

**இஸ்லாமிய மார்க்கம் என் மீது திணிக்கப்படவில்லை**

இஸ்லாமிய மார்க்கம் என் மீது திணிக்கப்படவில்லை. குர்ஆனில் தவறுகளை கண்டுபிடிக்க வேண்டும் எனும் எண்ணத்தில் நானாகத்தான் குர்ஆனை படிக்க ஆரம்பித்தேன். அதனடிப்படையில் நானாக முன்வந்து வின் டீவி மூலமாக முஹம்மத் ஜிப்லி அவர்களுக்கு போனில் தொடர்பு கொண்டு, நானாக அவருடைய வகுப்பில் இணைந்தேன். என்னுடைய விருப்பத்தின் காரணமாகத் தான் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேனே தவிர யாரும் இஸ்லாமிய மார்க்கத்தை என் மீது திணிக்கவில்லை.

**திருமணம் - அன்பான கணவர்**

இந்த நிலையில் நான் திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவெடுத்தேன். எனக்கு சென்னையின் ஒரு தாவா மையம்(பெயர் குறிப்பிடவில்லை) உதவி செய்தது. அந்த மையத்தின் மூலம் எனக்கு இஸ்மாயில் என்ற மாப்பிள்ளையை பார்த்தார்கள். அவரும் என்னைப் போலவே இந்து மதத்திலிருந்து இஸ்லாத்திற்கு வந்தவர்தான்.

அவர் என்னிடம், “உங்களுக்கான மஹர் தொகை எவ்வளவு” என்று கேட்டார். அதற்கு நான், “அல்லாஹ்வுடைய ஆலயமான பள்ளிவாசல் கட்டுவதற்கு ஒரு நிலம் வாங்கித் தர வேண்டும்” என்று கூறினேன். அவர் சம்மதித்தார்.

எங்களது திருமணம் நல்லபடியாக முடிந்தது. என் கணவர் எனக்கு மஹராக அளித்த அந்த இடத்தில் பள்ளிவாசல் கட்டுமான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றது.

அல்லாஹ் எனக்கு சிறந்த ஒரு வாழ்க்கைத் துணையை அளித்துள்ளான். என் கணவர் ஒரு தீவிரமான இஸ்லாமிய அழைப்பாளர். இதுவரைக்கும் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு அல்லாஹ் அவர் மூலமாக இஸ்லாத்தை அளித்துள்ளான். அல்ஹம்துலில்லாஹ். தொடர்ந்து தாவா பணியில் ஈடுபட்டு வருகிறார். அதேப்போல் என்னுடைய மார்க்கப் பணிகளுக்கும் உறுதுணையாக இருந்து வருகிறார்.

**அன்பான முஸ்லிம்களுக்கு**

ஈமான் கொண்ட என்னுடைய அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். முஸ்லிம் களாகவே அன்றி மரணிக்காதீர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். நான் இஸ்லாத்தை ஏற்ற பின் முஸ்லிம்களிடம் நிறைய கேள்விகளை கேட்டிருக்கின்றேன்.

அப்போது அவர்கள், "நான் தொழவில்லையென்றாலும் அல்லாஹ்வை அஞ்சுகின்றேன். நான் நோன்பு வைக்கவில்லை யென்றாலும் அல்லாஹ்வை அஞ்சுகின்றேன். நான் தர்காவிற்கு செல்வது கூட அல்லாஹ்வை நெருங்கத்தான்" என்று சொல்கிறார்கள்.

ஆனால் அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வை அஞ்சுங்கள். அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். என்று அல்லாஹ் கூருகின்றான். குர்ஆன் மற்றும் ஹதீஸைக் கொண்டுதான் நாம் அல்லாஹ்வை நம்பவேண்டும்.

ஆதலால் முஸ்லிம் சகோதரர்களே நீங்கள் குர்ஆனை தமிழில் படித்து, குர்ஆனை உணர்ந்து, நபி(ஸல்) அவர்கள் நமக்கு என்ன சொல்லிக் கொடுத்தார்கள், எது உண்மை, எது பொய் என்று அறிந்துக் கொண்டு நீங்கள் இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்ற வேண்டும்.

நமக்கு அல்லாஹ்வுடைய மார்க்கத்தை கற்றுத்தரக் கூடிய நிலையில் நாம் இருக்கக் கூடாது. நாம் தான் அல்லாஹ்வுடைய மார்க்கத்தை எடுத்துச் சொல்லக் கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

**அழைப்பு பணியில் ஈடுபடுங்கள்**

தாவா பணியில் முஸ்லிம்கள் அதிகதிகமாக ஈடுபட வேண்டும். தாவாவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் அதிகமான மக்களை இஸ்லாத்தில் இணைக்கலாம்.

நாம் தாவா பணியில் ஈடுபடவில்லை என்று சொன்னால் மறுமையில் நடக்கும் ஒரு சம்பவத்தை நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

நமது பக்கத்து வீட்டுக்காரரர்கள், எதிர் வீட்டுக்காரரர்களையெல்லாம் ஏன் நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அல்லாஹ் கேட்கும் போது. அப்போது அவர்கள் கூறுவார்களாம். "யா அல்லாஹ் இந்த முஸ்லிம்கள் எங்கள் வீட்டுப் பக்கத்தில் தான் இருந்தார்கள். ஆனால் அவர்கள் இந்த மார்க்கத்தைப் பற்றி எங்களிடம் சொல்லவேயில்லை" என்று கூறுவார்களாம்.

அதனால் அல்லாஹ்வின் நல்லடியார்களே நீங்கள் தாவா பணிகளை அதிகமாக மேற்கொள்ளுங்கள். தாவா பணிகளைப் பற்றி அதிகமாக தெரிந்துக் கொள்ளுங்கள். இன்ஷா அல்லாஹ் அதன் மூலம் அல்லாஹ் உங்களுக்கு பரக்கத்தை நாடுவான்.

**சகோதர சமுதாயத்தவருக்கு**

ஆதமுடைய பிள்ளைகளான என்னுடைய சகோதரர்களே. நான் உங்களிடம் சொல்லிக் கொள்வது என்னவென்றால், மரணம் வருவதற்கு முன் நம்மை படைத்த இறைவன் யார் என்பதை நாம் யோசிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கைக்காக நாம் தேடித், தேடி இதுதான் சரி என பலவற்றை எடுக்கின்றோம். ஆனால் நாம் மரணித்த பின் நாம் எங்கு வாழப் போகின்றோம். அது சுவர்க்கமா? நரகமா? இதை அறிந்து கொள்ள நாம் வழிபடக் கூடிய கடவுள் உண்மையா என்பதை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

உங்களுடைய வேதங்களான பைபிளையும் படியுங்கள், பகவத் கீதையையும் படியுங்கள், அதோடு சேர்த்து அல்லாஹ்வுடைய வேதமான குர்ஆனையும் படியுங்கள். அதன் மூலம் அல்லாஹ் உங்களுக்கு கொடுத்திருக்கின்ற சுய அறிவை வைத்து நீங்கள் அதை சிந்தித்து உண்மையான மார்க்கத்தில் வரவேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

ஆதாரம்: சென்ற ரமலான் 27 வது இரவில் சென்னை கே.கே. நகரில் அவர் ஆற்றிய உரையிலிருந்து.



# EVM உதவியால் கிடைத்த போலியான வெற்றி

நாம் கடந்த சில வருடங்களாகவே நடந்து முடிந்த 2019 தேர்தல் பற்றி பல முன்னெச்சரிக்கைகளையும் பல சூழ்ச்சி தந்திரங்களையும் சொல்லி இருந்தோம். வாக்காளர் பெயர் நீக்கம், காணாமல் போன 20 லட்சம் வாக்கு இயந்திரங்கள் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். தற்போது தேர்தலும் முடிந்தாகிவிட்டது எதிர்பார்த்தது போலவே சங்பரிவார்கள் மாபெரும் வெற்றி அடைந்து விட்டார்கள் ஆனால் இந்த மாபெரும் வெற்றி தான் பலருக்கு பல சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியிருக்கிறது என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை.

தேர்தல் காலங்களில் எல்லா தொலைக்காட்சி நிறுவனங்களும் தொங்கு பாராளுமன்றத்திற்கு அதிக வாய்ப்பு என்று கூறினர். தேர்தல் முடிந்த சில நேரங்களில் எல்லா தொலைக்காட்சி செய்திகளிலும் பாஜக மாபெரும் வெற்றி பெறும் என்று கூறினர். இது அப்போதே பலருக்கு பல கேள்விகளை எழுப்பியது. சங்பரிவார்கள் அடுத்தடுத்து தாக்குதல் தொடுத்துக் கொண்டே இருப்பதால் நாமும் பலவற்றை பாதியிலேயே விட்டுவிட்டு கடந்துவிடுகிறோம்.

ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் பலரும் பல சந்தேகங்களை இப்போது ஆயுதமாக மாற்றி தேர்தல் ஆணையத்தை வறுத்து எடுத்து கொண்டிருக்கிறார்கள். தொலைக்காட்சி நிறுவனங்களும் இதை செய்திகளை மூடி மறைத்தாலும் அது சமூக வலைதளங்கள் மூலம் இப்போது வெளிச்சம் ஆகிக் கொண்டிருக்கிறது அவற்றில் சிலவற்றை மட்டும் இப்போது பார்ப்போம்.

ஜூன் 14 - உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கை அவசர வழக்காக எடுக்க முடியாது என்று கூறி நிராகரித்தது. அந்த வழக்கு எதைப்பற்றி என்றால் நடந்து முடிந்த தேர்தலை நிராகரிக்க வேண்டும் என்றும் அதில் பல குளறுபடிகள் நடந்து உள்ளது என்று பல ஆதாரத்துடன் மனோகர்லால் ஷர்மா என்ற வழக்கறிஞர் இந்த வழக்கை தொடுத்திருந்தார். இந்த கோரிக்கைகள் அவர் முன்வைத்த பல காரணங்களில் ஒன்று வாக்கு இயந்திரங்கள் மூலம் நடத்துவதற்கு இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் அனுமதி இல்லை என்பதே முதன்மை வாதம்.

மேலும் கிட்டத்தட்ட 373 தொகுதிகளில் பதிவான வாக்குகள் இருக்கும் தேர்தல் முடிவு என்று வெளியிடப்பட்ட வாக்கு எண்ணிக்கைக்கும் பெரும் வித்தியாசங்கள் இருப்பதை சுட்டி காட்டி இந்த இயந்திரங்களில் முறைகேடு நடப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக கோரிக்கையை முன்வைத்தார். அத்தோடு நில்லாமல் தேர்தல் ஆணையம் இதுவரை நான்கு முறை அவர்களுடைய வலைதளத்தில் தகவல்களை மாற்றியிருக்கிறார்கள் தேர்தல் முடிந்து இவ்வளவு நாட்கள் ஆன பின்பும் இன்னும் இறுதி எண்ணிக்கையை தேர்தல் ஆணையம் வெளியிடவில்லை என்றும் கொடுக்கப்படும் காலதாமதமானது அவர்கள் தவறுகளை சரி செய்வதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்றும் அதனால் இந்த தேர்தலை நிராகரித்து வாக்குச்சீட்டு முறையில்

உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

இப்போது புரிந்திருக்கும் ஏன் உச்சநீதிமன்றம் இதனை நிராகரித்தது என்று.

www.livemint.com/politics/news/supreme-court-refuses-urgent-hearing-in-fresh-plea-against-evm-use/amp-1560496223883.html

*ஜூன் 8:* உத்தரப் பிரதேசத்தை ஆண்ட இரு பெரும் கட்சிகள் பகுஜன் சமாஜ் மற்றும் சமாஜ்வாதி. இவ்விரு கட்சிகளும் சேர்ந்து இந்த மாதம் எட்டாம் தேதி மெழுகுவர்த்தி ஏந்தி போராட்டம் நடத்தினர். போராட்டத்திற்கு காரணமாகவும் வாக்கு இயந்திரத்தில் மோசடி செய்தே பாரதிய ஜனதா வென்றுள்ளது என்று பகிரங்க குற்றம் சாட்டிய இந்த போராட்டத்தை நடத்தினர். இந்தியாவில் உள்ள பெரிய மாநிலம் அதில் உள்ள பெரிய கட்சிகள் நடத்திய போராட்டம் கூட மக்களுக்கு செல்லாமல் பார்த்துக் கொண்டன ஊடகங்கள்.

https://www.nationalheraldindia.com/india/sp-bsp-to-hold-protest-against-evm-misuse-on-june-8

*ஜூன் 13,* மும்பையில் முன்னாள் நீதிபதி கோஸ்லே பாட்டில் தலைமையில் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது இதில் பல சமூக ஆர்வலர்கள் பங்கேற்றனர். இதில் முக்கிய கோரிக்கைகள் என்னவென்றால் வரப்போகின்ற ஹரியானா ஜார்கண்ட் மகாராஷ்டிரா போன்ற மாநில சட்டமன்றத் தேர்தல்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்பதுதான். அதற்கு முக்கிய காரணம் வாக்கு இயந்திரங்கள் ஜனநாயகத்தை கொன்று விட்டன என்பதுதான். வாக்கு இயந்திரத்தில் பல முறைகேடுகள் நடந்துள்ளன என்றும் ஜனநாயக சக்திகள் ஒன்று பட்டு இப்போது இதில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் இவர்கள் பல ஆர்வலர்களையும் சங்கங்களை ஒருங்கிணைத்து இது இந்தியா முழுக்க எடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளனர். மேலும் உச்ச நீதிமன்றத்தில் தனியாக ஒரு அமர்வு ஏற்பாடு செய்து அது நடந்து முடிந்த தேர்தலை பற்றி விசாரிக்க வேண்டும் என்பது மற்றொரு கோரிக்கையாகும்.

நாம் மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் சில தான் ஆனால் நாட்டில் உள்ள அனைத்து மக்களும் இப்போது மனதில் உள்ள ஒரே கேள்வி எவ்வாறு அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்று தான். தேர்தலுக்கு முன்பே மோடி அனைத்து ஊடகவியலாளர்களுடன் மற்றும் பத்திரிக்கை தொலைக்காட்சி நிறுவனங்கள் உடன் ஒரு சந்திப்பு நடந்தது உங்களுக்கு நினைவில் இருக்கலாம் அது ஏன் எதற்கு என்று எந்த விளக்கமும் இதுநாள்வரை சொல்லப் படவில்லை இப்போதுதான் தெரிகிறது இவர்கள் தேர்தலுக்கு பிறகு எந்த கேள்வியும் எழுப்ப கூடாது என்பதுதான் அவர்கள் வைத்த ஆணையாக இருக்கும் என்று. ஆனால் மக்கள் இப்போது ஊடகங்களாக ஆகிவிட்டனர் சமூக வலைத்தளங்களின் மூலம் உண்மை வெளிவர பல நாட்களாக அது விரைவில் இந்த தேர்தல் மோசடிகள் அனைத்தும் மக்கள் முன் எடுத்து வைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்

www.thehindu.com/news/cities/mumbai/anti-evm-forum-calls-for-election-boycott/article27892343.ece/amp/

**அபுதாஹிர்**

# வாசகர் கருத்துக்கள்

அமெரிக்காதான் அல்காயிதா அமைப்பை உருவாக்கியது. எனக்கு இதுபற்றி ஏற்கனவே தெரியும். தமிழ் பொக்கிஷம் எனும் யூடியூப் சேனல் இந்த தகவலை சொல்லியுள்ளது. **- Manisha Dhevi**

அல்காயிதாவை உருவாக்கியது யார்? கட்டுரை. உண்மையை உரைத்தீர்கள். இதனால் தான் நான் எப்போதும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருக்கின்றேன். **- இம்சை அரசன்**

அல்காயிதாவை உருவாக்கியது யார்? கட்டுரை அருமையான தகவல். **- Noor**

அல்லாஹ் அக்பர்...மாஷா அல்லாஹ் போன மாத வைகறை "நான் ஏன் இஸ்லாத்தை ஏற்றேன்" அல்லாஹ் அக்பர்...அருமை உடம்பு சிலிர்த்துச்சு. (இன்ஷா அல்லாஹ்) அவர்களை போன்ற ஈமானை அல்லாஹ் எமக்கும் தந்தருள்வானாக, **- Mubeen**

**தங்களது கருத்துகளை**
**+91 9092723753**
**என்ற கைபேசிக்கு**
**வாட்ஸ்ஆப்-இல் பகிரவும்**




தொடர் 17

# இஸ்லாம்

## அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி

இராணுவத்தின் மதிப்பை கீழிறக்கிடும் பிரச்சாரங்களும், நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் முயற்சிகளும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பது எங்களுக்குத் தெரியும். இராணுவத்தின் விதிப்படி, யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம் என்று எச்சரித்தார் சிசி.

தங்களுடைய உறுப்பினர்களை இராணுவத்தில் இணைத்திட வேண்டும் என்று இராணுவத்திற்கு அழுத்தத்தை கொடுத்தது முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் (MBH). அப்படி சேர்த்திடுவதற்கு இராணுவத்தில் அனுமதி கிடையாது. இஸ்லாத்தின் கொள்கைகளை நடைமுறைபடுத்துவதற்கு இராணுவம் முட்டுகட்டையாக இருக்கின்றது என எண்ணியது MBH. ஆயுத படைகளின் சுப்ரீம் கவுன்சிலில் உயர் பதவியில் இருந்த தன்தாவியையும், சமியையும் பதவியில் இருந்து நீக்கிட 12 ஆகஸ்ட்டில் வந்த உத்தரவு இராணுவ அதிகாரிகளிடம் எதிர்ப்பை உண்டாக்கியது.

முர்சி ஆட்சி செய்த ஒரு வருடத்தில் நாடு மேலும் இக்கட்டான நிலைக்கு சென்றது. வெளிநாட்டு நாணய இருப்பு குறைந்தது. பொது செலவுகளுக்கு பணத்தட்டுபாடு ஏற்பட்டது. பொருளாதார நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர மானியம் வழங்குவதை நிறுத்துங்கள் என்றது International Monetary Fund. நாட்டில் ஸ்திரத்தன்மை இல்லாததால் சுற்றுலா வருபவர்களின் எண்ணிக்கை குறைந்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை சிரமத்திற்குள்ளானது. அன்னிய நேரடி முதலீடு நிறுத்தி வைக்கப்பட்டது. ஐரோப்பிய யூனியனுடனான வர்த்தகம் சரிவை சந்தித்தது. நாட்டின் வருமானத்தை விட செலவு அதிகமானது நாடு பொருளாதார அழிவை நோக்கி சென்று கொண்டிருப்பதை உணர்த்தியது.

MBH அதிகாரத்திற்கு வந்திருந்தாலும் முந்தைய முபாரக் அரசின் கொள்கைகளையே பின்பற்றியது. அதே கொள்கையை கையகப்படுத்தினார்களே தவிர அதில் சீர்திருத்தத்தை கொண்டு

வரவில்லை. பத்திரிகையாளரிடம் ஒரு கடைகாரர் கூறினார், " ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சியை கவிழ்த்த புரட்சியை நான் ஆதரித்தேன்... ஆனால் அதன் பின்பு ஏற்பட்ட அரசியல் மாற்றம் எனது தட்டிற்கு ஒரு உணவு துண்டை கூட அதிகப்படுத்திடவில்லை".

முர்சியின் ஆட்சியை குறைகூற ஆரம்பித்தனர் சிலர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முர்சி அரசு ஏதாவது ஒரு நெருக்கடியை தொடர்ந்து சந்தித்து கொண்டே இருந்தது. நாடாளுமன்ற தேர்தல் முடிவடைந்த உடன் அதிகாரத்தை கைப்பற்றுவதில் முனைப்பு காட்டியது Freedom and Justice Partry (MBH -இன் அரசியல் கட்சி). 23 ஜனவரி 2012 இல் நடந்த முதல் நாடாளுமன்ற கூட்டம் நடைபெற்றது. அதில், இடைக்கால அதிபரை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தது FJP. ஆனால், அதிபர் தேர்தலுக்கு பின் அதிபராக தேர்ந்தெடுக்கப்படுபவரிடம் ஜூன் 30 - இல் அதிகாரத்தை ஒப்படைப்போம் என்றார் இராணுவ தளபதி தன்தாவி. புரட்சிக்கு பின் ஏற்படும் அதிகார மாற்றத்தில் எவ்வளவு சிக்கல்கள் உள்ளன என்பதற்கு எகிப்து ஒரு உதாரணம்.

நாடாளுமன்ற தேர்தலுக்கு பின், 100 பேர் கொண்ட அரசமைப்பு சட்ட பேரவை அமைக்கப்பட்டது. வெற்றிகள் அதிகமாக பெற்றதால் இக்குழுவில் அதிகமானோர் இஸ்லாமியவாதிகள். மற்ற சமுதாய மக்களின் பிரதிநிதிகளை இக்குழுவில் இணைக்க வேண்டும். எனவே இக்குழுவுக்கு மறு தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. காப்டிக் (கோப்து) சமுதாயத்தவர்களையும், மற்றவர்களையும் இக்குழுவில் பிரதிநிதிகளாக சேர்க்கவில்லை என்ற குற்றசாட்டும் எழுந்தது. இது இன்னொரு பிரச்னையை கிளப்பியது.

மறு தேர்தலுக்கு அவசியமில்லை, ஏனெனில் இது வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்ட குழு தான் என FJP உறுதியாக நிற்க, அதே சமயத்தில் பெரும்பான்மை-சிறுபான்மை அடிப்படையில் அரசமைப்பு ஏற்படுத்தப்படக் கூடாது எனக் கூறின எதிர்கட்சிகள். மறு தேர்தல் கோரிக்கையை முர்சி ஏற்கவேயில்லை. அரசவையை கலைக்கும் உரிமையை பெற்றிருந்த எகிப்து. உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை நீக்கிவிடும் ஒரு விதியை கொண்டு வரவும் விரும்பியது FJP. இது மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.

அஹ்ராம் பத்திரிகை நடத்திய ஆய்வின்படி, 82.3 சதவிகித மக்கள் வேறொரு அரசமைப்பு பேரவையை விரும்பினர். விதி 60-இன் படி புதிய அரசியல் ஆணையை வெளியிட்டு அவையை எல்லோரும் உள்ளடக்கிய வண்ணம் ஷிசிகிதி (ஆயுத படைகளின் சுப்ரீம் கவுன்சில்) விரிவுபடுத்த வேண்டும் என்று சிலர் கோரிக்கை வைத்தனர். எல்லோரையும் உள்ளடக்கிய அரசமைப்பு அவையை இப்போதும் எப்போதும் ஏற்படுத்த விரும்புவதாக அறிவித்தது SCAF.

அரசமைப்பு பேரவை ஏற்படுத்தப்பட்ட முறை சரிதானா என்ற விவாதம் கிளம்பியது. அரசியலமைப்பு விதி 60-இன் படி, அவை தேர்தல் செல்லாது என கூறியது நிர்வாக நீதித்துறை மன்றம். எல்லோரையும் உள்ளடக்கிய அவையை ஏற்படுத்த ஜூன் 7, 2012-இல் முடிவு எட்டப்பட்டது. அதன்படி, நாடுளுமன்ற உறுப்பினர்களுக்கு 39 இருக்கைகள், நீதிபதிகளுக்கு ஆறு, சட்ட வல்லுனர்களுக்கு ஒன்பது, கூட்டமைப்புகளுக்கு 13, மக்கள் பிரபலங்களுக்கு 21, அல் அஸ்கர் பல்கலைகழகத்துக்கு ஐந்து, காப்டிக் ஆர்த்தோடக்ஸ் ஆலயத்திற்கு நான்கு, இராணுவம், காவல்துறை மற்றும் நீதித்துறை அமைச்சகத்திற்கு தலா ஒன்று.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்லாமிய அரசுக்கு இருந்த இன்னொரு சவால் அவர்கள் நாட்டை எந்த அடையாளத்துடன் வெளிபடுத்த போகிறார்கள் என்பது. அரசியலமைப்பு இஸ்லாமிய அடிப்படையிலே அமைய வேண்டும் , சட்ட இயற்றுதலுக்கு ஷரியாவே ஆதாரமாக அமைய வேண்டும் என்ற கோரிக்கைகள் அழுத்தமாக சலப்புக்கள் போன்ற மற்ற இஸ்லாமிய அமைப்புகளிடம் இருந்து வந்தது.

முர்சி ஆட்சி செய்த ஒரு வருடத்தில் மட்டும், 5000-க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டங்களும், 7700-க்கும் அதிகமான சமூக போராட்டங்களும் எகிப்து முழுவதும் நடைபெற்றன. நிலைமையை முர்சி அரசு புரிந்து கொண்டு செயலாற்றியதா என்பது கேள்விக்குறி. நிர்வாகம், நீதித்துறை என எல்லா இடத்திலும் தங்கள் ஆட்களை சேர்ப்பதில் கவனமாக இருந்தது MBH. இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபூஹாசின்**







# முஸ்லிம்களுக்கெதிராக அநீதிகளின்

**ஜூன் 1:**

முஸ்லிம் இளைஞர்கள் நான்கு பேரை மாட்டுக்கறி உண்டதாக கூறி பயங்கரவாத கும்பல் ஒன்று தாக்கிய காணொளி வலைத்தளங்களில் வெளியானது. அதில் முஸ்லிம் இளைஞர்கள் இந்துத்துவ பயங்கரவாத கும்பலால் தாக்கப்பட்டனர்.

**ஜூன் 2:**

காஷ்மீரில் உள்ள ஜாமியா மசூதியில் ரமலானின் 27ம் இரவு தராவிஹ் தொழுகையில் இந்திய ராணுவப்படை புகை குண்டுகளை வீசி தொழுது கொண்டிருந்தவர்களை அப்புறப்படுத்தியது.

**ஜூன்3 :**

ஒரு முஸ்லிம் இளைஞனை கொடூரமாக தாக்கும் வீடியோ வெளியானது. டெல்லியில் ஒரு முஸ்லிம் இளைஞனை கொடூரமாக தாக்கி பன்றிக்கறியை கட்டாயப்படுத்தி சாப்பிட வைத்து அவரின் மீது சிறுநீர் அடித்து கொடுமைப்படுத்தினர் இந்துத்துவ பயங்கரவாதிகள்.

**ஜூன் 7:**

பீகாரில் ரம்ஜான் தினத்தின் போது பெருநாள் தொழுகையின் போது முஸ்லிம்கள் சிலரை வில் அம்பில் குத்தி இந்து மத அடையாளங்களை அவர்களின் மீது திணித்து கொடுமைப்படுத்தினர்.

**ஜூன் 10:**

ஒரு முஸ்லிம் குடும்பம், பூஜா சௌஹான் என்ற பெண்ணும் வேனில் பயணித்து கொண்டிருக்கும் போது இந்துத்துவ பயங்கரவாதிகள் கையில் ராடுடன் தாக்க முற்பட்டனர். அப்போது பூஜா சௌகான் என்ற பெண் முன்னின்று அவர்களை விரட்டி முஸ்லிம் குடும்பத்தை பாதுகாத்தார்.

மெகாலயாவில் ஒரு முஸ்லிம் இளைஞனை

# இந்தியாவில் நிகழ்த்தப்பட்ட

# தொகுப்பு

நிர்வாணப்படுத்தி ஒரு பயங்கரவாத கும்பல் தாக்கிய காணொளி வெளியானது . அதில் அந்த இளைஞன் அல்லாஹ்வின் உதவியை நாடுகிறான். ஆனால் அந்த கும்பல் அவன் சொல்ல சொல்ல மர்ம உறுப்பிலேயே அடிக்கிறார்கள்.

இந்தியா: ராணுவ படைவீரர்கள் காஷ்மீரில் ஓர் இளைஞனை நடுரோட்டில் வைத்து அடித்து இழுத்து செல்லும் காணொளி வெளியானது.

**ஜூன் 15**

காஷ்மீரில் ராணுவ வீரர்களின் அத்துமீறல்களை படம் பிடித்த பத்திரிக்கையாளர்கள் தாக்கப்பட்டனர். அவர்கள் கேமிரா உடைக்கப்பட்டது.

**ஜூன் 17:**

மேற்கு வங்கத்தில் கன்கினாரா பகுதியில் உள்ள பள்ளிவாசலில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டு அதில் சிலர் காயமடைந்தனர். அப்போது முஸ்லிம்களுக்கு எதிரான கோஷங்களையும் குண்டு வீசிய கும்பல் எழுப்பியது.

**ஜூன் 19:**

மத்தியபிரதேசில் மௌலான சைஃபுதீன் என்ற இஸ்லாமியரை காவல்துறையினர் கொடூரமாக காஷ்மீரில் பள்ளி வாகனத்தை ஓட்டி சென்ற டிரைவரை காவல்துறையினர் கொடூரமாக தாக்கியதால் அந்த வாகனத்தில் இருக்கும் பள்ளி குழந்தைகள் முழுதும் அழும் காணொளிவெளியானது.

**ஜூன் 21:**

அசாமில் முஸ்லிம் இளைஞர் ஒருவரை பேருந்தை நிறுத்தி ஜெய் ஸ்ரீராம் கூறச்சொல்லி இந்துத்துவ பயங்கரவாத கும்பல் கொடூரமாக தாக்கினர்.

**ஜூன் 22:**

உத்திரபிரதேசத்தில் உள்ள காசியாபாத் பள்ளிவாசலிற்கு வெளியே இந்துத்துவ பயங்கரவாத கும்பல் திரண்டு உள்ளிருந்தவர்களை மிரட்டினர். ஜெய் ஸ்ரீராம் கோஷம் போட்டுக்கொண்டே மிரட்டல் விடுத்தனர். இறுதியில் காவல்துறையினர் திமிஸில் முஸ்லிம்களை குற்றவாளிகளாக காட்டியிருக்கிறார்கள்.

டெல்லியில் முஹம்மது மூமின் என்ற முஸ்லிம் இளைஞனை ஜெய் ஸ்ரீராம் சொல்லச் சொல்லி காரில் தாக்கினார்கள். பலத்த காயத்துக்கு ஆளானார் மூமின்.

**ஜூன் 23:**

ஜார்கெண்ட் மாநிலத்தில் தப்ரிஜ் அன்சாரி ஜெய்ஸ்ரீராம் கூறச்சொல்லி பயங்கரவாத கும்பலால்ரோட்டோரமாக உள்ள கம்பத்தில் கட்டி வைத்து கொடூரமாக தாக்கப்பட்டார்.

**ஜூன் 24:**

மேற்கு வங்கத்தில் கொல்கத்தா மாவட்டத்தில் மதரஸா ஆசிரியர் ஒருவர் ஜெய் ஸ்ரீராம் கூறச்சொல்லி கொடூரமாகஇந்துத்துவ பயங்கரவாத கும்பலால் தாக்கப்பட்டு முகத்தில் பெரும் காயங்களுடன் உயிர் தப்பியிருக்கிறார்.

**ஜூன் 25:**


மேற்கு வங்கத்தில் ஜெய் ஸ்ரீராம் என சொல்லாததால் ஒரு மதரஸா ஆசிரியரை ரயிலில் இருந்து அடித்து வெளியே தள்ளி விட்டது இந்துத்துவ பயங்கரவாத கும்பல்.

அபூசித்திக்







## உலகம் முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட

# அநீதிகளின் தொகுப்பு

*ஜூன் 1*

*சீனா:* ஜிங்ஜாங் உய்கூர் பகுதியில் முஸ்லிம்களின் மீது நடத்தப்படும் உளவியல் தாக்குதல் வெளிவந்து கொண்டிருந்தாலும் பிரபல YouTube traveller ஜோ ஹத்தாப், அங்கிருக்கும் நிலையை அங்கிருந்தே வெளிக்காட்டுகிறார்.

உதாரணத்திற்கு முஸ்லிம்களின் கடைக்கு சென்று சலாம் சொல்கிறார். பதில் சலாம் இல்லை. நோன்பா என்று கேட்டதற்கு ஒரு வித பயத்துடன் அருகில் இருக்கும் உணவுபொருளை சாப்பிட்டு தான் நோன்பில்லை என நிரூபிக்கிறார் அந்த முஸ்லிம்.

பள்ளிவாசல்கள் மூடப்பட்டுள்ளது. தொழுகை நேரம் ஆகியும் தொழுவதற்கு ஆட்கள் வருவதே இல்லை. பள்ளிவாசல்கள் மூடப்பட்டு சுற்றுலா தளங்களாக மாற்றப் பட்டுள்ளது. பன்றிக்கறி உண்பது கட்டாயப்படுத்தப் படுகிறது. மதுபானம் குடிக்க வற்புறுத்தப்படுகிறார்கள் என பலவற்றை பற்றியும் சொல்கிறார்.

*ஜூன் 2:*

*பாலஸ்தீன்: 400* இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் மஸ்ஜித் அல் அக்ஸாவில் எல்லை மீறி நுழைந்து புகை குண்டுகளை போட்டு அங்கிருந்தவர்களை அப்புறப்படுத்தினர்

சீனா: வயதான மனிதரிடம் நோன்பு வைத்திருக்கிறாரா?. என அதிகாரிகள் கேள்வி கேட்கும் வீடியோ வெளியானது. சீனாவில் நோன்பு வைத்தால் சித்ரவதை முகாமில் அடைக்கப்படுவார்கள். இதுவரை முப்பது லட்சம் முஸ்லிம்கள் சிறையில் அடைக்கப் பட்டிருக்கின்றனர்.

ஜூன்3 :

சிரியா: சிரியாவின் மத்திய கடைவீதியில் ரம்ஜான் விழா தயாரிப்பில் இருந்த மக்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. இதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

ஜூன் 4:

சிரியா: இத்லிப் நகரில் குண்டுகள் வீசப்பட்டது.

சூடான்: அரசை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட 35 நபர்களை அந்த நாட்டு ராணுவம் சுட்டுக் கொன்றது.

லண்டன்: முஸ்லிம்கள் தொழுது கொண்டிருந்த ஒரு பள்ளியில் சுத்தியல் கொண்டு அவர்களை தாக்க முற்பட்ட ஒரு நபரை பிடித்து வைத்தனர் அங்குள்ள முஸ்லிம்கள்.

ஜூன் 6:

சிரியா: இத்லிப் நகரில் ஒரு பெண் இரண்டு குழந்தைகள் உட்பட 9 பேர் குண்டு வெடிப்பில் பலியாகினார்கள்.

ஐரோப்பியா: மியான்மர் அதிபரின் சுற்று பயணத்தில், அதிபர் ஹக்கேரி நாட்டின் அதிபரிடம் முஸ்லிம்களின் வளர்ச்சி விகிதம் ஆபத்தை தரக்கூடியது. அதை தடுப்பதை குறித்து ஆலோசித்தார்.

சீனா: மசூதியில் சீனாவின் முந்தைய, தற்போதை தலைவர்களின் படத்தை தொங்க விட்டு அவர்களை வழிபடுமாறு நிர்பந்திக்க படுகிறது.

ஜூன் 9:

பிரான்ஸ்; ட்ரெயினில் செல்லும் ஒரு முஸ்லிம் பெண்மணி ஹிஜாப் அணிந்ததற்காக அவமானப்படுத்தப்பட்டார்.

ஜெர்மனி: பிரமென் நகரகரத்தி பள்ளிவாசலில் புகுந்து அங்கிருந்த பொருட்களை நாசம் செய்து 50 குர் ஆன் பிரதிகளை நாசப் படுத்தினர்.

ஜூன் 10:

ஜெர்மனி : முஸ்லிம்களின் பலர் வீட்டுக்கு மிரட்டல் கடிதம் ஒன்று வந்தது. அதில், உங்கள் நுழைவு ஜெர்மனிக்கு ஆபத்தானது. இந்த நாட்டை விட்டு வெளியேறி விடுங்கள். இல்லையென்றால் உங்கள் மீதான தாக்குதல் தொடங்கும் என்று மிரட்டப்பட்டிருந்தது.

ஜூன் 12: சீனா: பாகிஸ்தானிலிருந்து முஸ்லிம் பெண்களை சீனாவில் மூஸ்லிமாக மாறியிருக்கும் மனிதருக்கு திருமணம் முடித்து அதற்கு திருமணத்தொகையாக ஒரு பெரிய தொகையை தருவதாக கூறி பெண்களை அழைத்து சென்று பாலியல் தொழிலுக்கு உட்புகுத்தும் கொடுமை நடைபெறுகிறது.

சூடான்: சூடானில் நடைபெற்ற போராட்டத்தின் போது இராணுவ அதிகாரிகள் பலரை சுட்டுக் கொன்றனர். இந்த வன்முறை நடைபெறும் போது ராணுவ அதிகாரிகளால் 70க்கும் மேற்பட்ட பெண்கள் கற்பழிக்கப் பட்டிருக்கின்றனர். ராணுவத்தின் மீதான பயத்தால் அடிபட்டவர்கள் கூட சிகிச்சைக் காக மருத்துவமனைக்கு வருவதில்லை.

சிரியா: பிறந்த குழந்தை மர்யம் மற்றும் குழந்தையின் தாயார் வெடிகுண்டு தாக்குதலில் உயிரிழந்தனர்.

ஜெர்மனி: ஹிஜாப் அணிந்திருந்த ஒரு முஸ்லிம் பெண்மணியை நாட்டை விட்டு வெளியேறு மிரட்டப்பட்டார்.

ஜூன் 14:

மியான்மர்: ரோஹிங்யாவில் 11 வயது பெண் குழந்தை சமீரா, கும்பலால் கற்பழிக்கப்பட்டு சடலமாக தூக்கி வீசப்பட்டிருக்கிறாள்.

நியூசிலாந்து: நியூசிலாந்தில் மசூதியில் ஒரு மனிதன் துப்பாக்கியோடு நிகழ்த்திய தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரின் மீதான் விசாரணை நீதிமன்றத்தில் துவங்கியது. இந்த சம்பவத்தில் தனக்கு எவ்வித குற்றவுணர்ச்சியும் இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தான் கொலை செய்த இளைஞர்.

ஜூன் 15

சிரியா: இத்லிப் நகரில் போர்விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு குடிமக்கள் உயிரிழந்தனர்.

ஜூன் 17:

பாகிஸ்தான்: பத்திரிக்கையாளர் முஹம்மது பிலால் கான் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எகிப்து : மக்களால் அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டு அரசியல் சூழ்ச்சியின் மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டு சிறையில் இருந்த முஹம்மது முர்சி அவர்களின் உயிர் நீதிமன்ற வளாகத்திலேயே பிரிந்தது.

ஜூன் 18:

எகிப்து: முஹம்மது முர்சியின் உடலை உறவினர்களிடம் கொடுக்க மறுத்து விட்டது எகிப்து அரசு. அவரது இரு மகன்களும், வழக்கறிஞர் மட்டும் தான் இறுதி ஜனாசா தொழுகை தொழ அனுமதிக்கட்டார்கள். முர்சியின் மனைவிக்கும் அனுமதி மறுக்கப் பட்டது.

முர்சி அவர்களின் இறப்புக்கு காரணம் எகிப்து அரசே என்று குற்றச்சாட்டு எழுந்தது. 63 வயதான உலகளவில் பெரிய இயக்கமான இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தின் தலைவர் இறக்கும் தருவாயில் எந்த வித முதல் உதவியும் செய்யப்படவில்லை. 20 நிமிடங்களுக்கு மேலாக அவரது உடல் தரையிலேயே சரிந்து கிடந்தது.

சீனா: சீனாவில் ஹிஜாப் அணிந்தது, தொடர்ச்சியாக தொழுகையில் ஈடுபட்டது, உறவினர்களிடம் பேசியது போன்றவற்றிற்காக பல மாதங்கள்சிறையில் இஸ்லாமியர்கள் கொடுமைப்படுத்தப் படுவதை பிபிசி ஆய்வறிக்கை வெளிக்கொண்டு வந்தது.

ஜூன் 20:

சிரியா: இத்லிப் நகரில் ரஷ்ய போர்விமானம் நடத்திய தாக்குதலில் 3 குடிமக்கள் இறந்தனர். 15 க்கும் மேற்பட்டோர் காயமாகினர்.

சீனா: பிபிசி ஒரு புதிய ஆய்வறிக்கை ஒன்றை சமர்பித்தது. அதில் சீனாவில் முஸ்லிம்களுக் கெதிராக கடந்த 4 ஆண்டில் நிகழ்த்தப்பட்டு வரும் கொடுமைகள் ஆதாரப்பூர்வமாக தொகுத்திருக்கின்றனர். நான்கு ஆண்டுகளில் பல நூறு பள்ளிவாசல்கள் காணாமல் ஆக்கப் பட்டிருக்கிறது. அதனை செயற்கைக்கொள் படங்கள் உறுதி செய்கின்றன. நான்கு ஆண்டு களுக்கு முன்பு எடுக்கப்பட்ட வீடியோக்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக பள்ளிவாசலுக்கு வருகிறார்கள், தலையில் தொப்பியுடனும் தாடியுடனும் சுற்றுகிறார்கள். ஆனால், அதே இடத்தில் தற்போது எடுத்த வீடியோவில் மக்களின் முகங்கள் முழுக்க சிரைக்கப் பட்டுள்ளது. யாரின் தலையிலும் தொப்பி இல்லை. பள்ளிவாசலில் தொழுகை நேரத்தில் வருவதற்கு ஒருவர் கூட இல்லை. மீதமிருக்க கூடிய பள்ளியின் இமாம்களையும் அரசே நியமிக்கிறது.

சவுதி: ஏமனில் நடக்கும் கொடூரமான யுத்தத்தில் இஸ்லாமியர்களை அழிக்க சவூதி ஹிரி அரசிடம் ஆயுதம் வாங்கியது தெரிய வந்தது.

சிரியா: இத்லிப் நகரில்ரஷ்யவிமானம் நடத்திய தாக்குதலில் 12 குடிமக்கள் உயிரிழந்தனர்.

ஜூன் 21:

பாலஸ்தீன்: பாலஸ்தீனில் அப்பாவி ஒருவரை இஸ்ரேலிய ராணுவம் இழுத்து சென்று கைது செய்தது.

சிரியா: இத்லிப் நகரில் இடிபாடுகளுக்கு சிக்கி மீட்கப்பட்ட சிறுவன் அந்த நிலையிலும் குர் ஆன் ஓதும் காணொளி வெளியானது.

ஜூன் 23:

ஸ்ரீலங்கா: புத்தமத தலைவர்களில் பிரபலமான ஒருவர் ஸ்ரீலங்க மக்கள் முஸ்லிம்களின் வணிக தளங்களில் எதுவும் வாங்க கூடாது, முஸ்லிம்கள் கொடுக்கும் உணவுகளையும் வாங்காதீர்கள் என்று அறிவிப்பு வெளியிட்டார்.

எகிப்து: முர்சியின் மரணத்தை விசாரணை செய்ய வேண்டும் என கூறிய செய்க் அபூ சலாம் அதிகாரிகளால் கொடூரமாக தாக்கப்பட்டு கோமா நிலைக்கு தள்ளப்பட்டார்.

ஜூன் 24:

மொராக்கோ: பள்ளிவாசலில் தொழுது கொண்டிருக்கும் போது ஒரு மர்ம மனிதன் துப்பாக்கியில் சுட ஆரம்பித்தார். யாருக்கும் காயமில்லை.

ஜூன் 25:

எகிப்து: 22 வயது கெய்ரோ பல்கலைக்கழக கல்லூரி மாணவி தக்வா அப்தில் நஸீர் எகிப்து ராணுவ படைப்பிரிவுகளால் கடத்தப்பட்டார். அவரை பற்றி எந்த தகவலும் இல்லை. எகிப்தில் சிஸி தலைமையிலான அரசில் இதுபோல் ராணுவத்தால் காணாமல் ஆக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே

இருக்கிறது.

சீனா: முஸ்லிம்கள் சீனாவின் சாலைகளில் "நாங்கள் சீன கம்யூனிஸ இயக்கத்தின் உறுப்ப்பினர்கள்" என கோஷம் போட சொல்லி கட்டாயபடுத்தப்படுகின்றனர்.

துருக்கி: இஸ்தான்புல் நகரில் தற்போதைய அதிபர் எர்துகானிற்கு எதிராக உள்ளாட்சி தேர்தலில் எதிர்கட்சி வெற்றி பெற்றதால் #உஹ்க்ஷீவீணீஸீஉயீஞுநீளீஷீயீயீ என்ற கேவலமான வாசகம் டிவிட்டரில் டிரெண்ட் ஆகி வருகிறது. எர்துகானின் இந்த தோல்வியை மஸ்ஜித் வாசல் முன்னின்று மதுவை ஊற்றி கொண்டாடினர் எதிர்கட்சி அமைப்பினர்கள்.

ஜூன் 27:

சீனா: உய்கூரில் முஸ்லிம்களை அதிகமாக சித்வரதை முகாமில் அடைத்து வருகிறது சீன அரசு. அதில் ஒருவரை பல வருடங்களுக்கு பிறகு விடுதலை செய்தது அந்த காணொளி வெளியானது. அதில், அந்த தாயாருக்கே அவரது மகனின் அடையாளம் தெரியவில்லை. "இது நீயா, உண்மையை சொல்?" என கேட்கிறார் தாயார். அழுது கொண்டே "உண்மையில் நான் தான்" என்கிறார் அவர்.

இஸ்ரேல்: பஹ்ரைனின் வெளியுறவுத்துறை அமைச்சர் அல் கலிஃபா இஸ்ரேலிய வானொலியில் பேசும் போது இஸ்ரேல் எப்போதும் மத்திய கிழக்கு நாடுகளின் பாரம்பரியம். யூதர்களுக்கு இங்கு எப்போதும் இடமுண்டு என்று பேசினார்.

சீனா: தலாய்லாமா, புத்த மத தலைவர் குடியேறிகள் தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பவில்லையெனில் ஐரோப்பா முழுதும் முஸ்லிம் அல்லது ஆப்பிரிக்கர்களின் நாடாக மாறிவிடும் என்று அறிவித்திருக்கிறார்.

ஜூன் 28:

எகிப்து: எகிப்து ராணுவ வீரர்கள் டாக்டர்.ஒசாமாவை செய்ய வந்த போது அவர் இல்லாததால் அவரது 18 வயது மகளை கடத்தி சென்றனர். ஒசாமா வந்ததும் அவரையும் கைது செய்துள்ளனர். அவர்கள் இருவரும் எங்குள்ளார்கள் என்ற தகவலை எகிப்து அரசு இன்னும் வெளியிடவில்லை.

சவுதி: சவுதி பத்திரிக்கையாளர் ஃபஹீத் அல் ஷம்மாரி என்பவர், பாலஸ்தீனியர்கள் பிச்சைக்காரார்கள், மஸ்ஜித் அல் அக்ஸா யூதக்கோவில் என்று காணொளி வெளியிட்டிருக்கிறார். இஸ்ரேலின் கையாட்களாக இதுபோல் நிறைய பேர் மத்திய கிழக்கு அரபு நாடுகளில் தொடர்ச்சியாக பேசி வருகின்றனர்.

அபூசித்திக்.





# போர்க்களத்தில் உம்மு ஸல்மா(ரலி)

இஸ்லாம் என்ற கொள்கை நிலை நாட்டப்பட இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் எடுத்த முயற்சிகள், எதிர்கொண்ட போர் களங்கள் ஏராளம்! ஏராளம்!!

பெருமானார்(ஸல்) அவர்களின் காலங்களிலும் அவர்களுக்குப் பின்னரும் நமது வீர சகோதரிகல் படைத்த சாதனைகளை இங்கே பட்டியல் போட்டு வருகின்றோம். நமது சகோதரிகளின் வரலாற்றை எழுதினாலே வீரமும், போர்களங்களும் அவற்றில் தவறாமல் இடம் பிடித்து விடும். அந்த அன்பு சகோதரிகளின் வாழ்க்கையை நாம் இங்கே பட்டியல் போடுவதற்கு காரணம் இங்கே ஒரு பேச்சு எப்போதும் அடிபட்டுக் கொண்டிருக்கின்றது.

அது, பெண்களுக்கு உரிமைகளே இல்லை; பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். குறிப்பாக முஸ்லிம் பெண்கள் பர்தாவில் மூடப்பட்டு மூலையிலே முடக்கிப் போடப்படுகிறார்கள் என்றொரு ஒப்பாரி ஓலம், நாள் தவறாமல் கேட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் முஸ்லிம் பெண்கள் அவர்களுக்கான உரிமைகளைப் பெற்று 1424 வருடங்கள் ஆகிவிட்டன.

அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்த காலங்களில் அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகக் கொடி பிடித்துக் கோஷம் போட்டுக் கொண்டிருக்கவில்லை. அல்லது உண்ணா விரதங்கள் இருந்து சாலைகளை மறித்து உரிமைகளை யாசகமாகக் கேட்டுக் கொண்டிருக்க வில்லை.

அவர்கள் எல்லா உரிமைகளையும் இறைவனின் அருட்கொடையாகவே பெற்றார்கள். அவர்களின்

இருப்பிடம் தேடிச் சென்றன அவர்களுக்கு வேண்டிய உரிமைகள். இஸ்லாம் என்ற ஒளி அவர்களுக்கு கிடைப்பதற்கு முன் அவர்கள் இன்றைய நவீன பெண்களைப் போல் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழ்ந்தார்கள்.

இன்றைய நவீன சினிமாக்களில் வரும் பெண்களைப் போல் காட்சிப் பொருளாகவும், போகப் பொருளாகவும் அவர்கள் அந்த மக்களால் பயன்படுத்தப்பட்டார்கள். ஆனால் இஸ்லாம் அவர்களின் பார்வையை விசாலமாக்கி அவர்களின் ஆற்றல்களை அவர்களுக்கு உணர்த்திக் காட்டி அவர்களை சாதனை யாளர்களாய் வாழச் செய்தது. அவர்கள் வரலாறாய் வாழ்கிறார்கள். அதனால் தான் அவர்களின் வரலாற்றை எள் முனை அளவு கூட புரட்டினால் விரசங்களோ, ஆபாசங்களோ தலைக்காட்டவில்லை. மாறாக அவர்களின் புனித வீர சாகசங்களேர் விரவிக் கிடந்தன.

அவர்கள் கார் உள்ளவரையும், கதிர் உள்ளவரையும், வான் உள்ளவரையும், இந்த வையம் உள்ளவரையும், வாழப்போகும் வனப்பான கொள்கையாம் இஸ்லாத்தை இந்த உலகில் நிலைபெற தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்தவர்கள். அவர்கள் பொன்னை மிஞ்சும் வாழ்க்கையால் பல்லாயிரம் ஆண்டுகள் வாழப்போகும் மகளிர் தலைமுறைக்கு ஊக்கமும், உற்சாகமும் தந்து கொண்டிருப்பவர்கள்.

ஆக அவர்கள் உரிமைகளுக்காக ஊர்வலம் போனார்கள் என்பதை விட ஓர் உன்னத கொள்கையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் தங்களை தந்தார்கள் என்பதே உண்மை. இந்தப் பின்னணியில் தான் முஸ்லிம் பெண்களை நாம் பார்த்திட வேண்டும்.

இந்த வகையில் அஸ்மா பிந்த் யசீத் பின் அஷ்குன்(ரலி) அவர்களின் வாழ்க்கை நமக்கோர் அழகிய எடுத்துக் காட்டு. இஸ்லாம் நிலை நாட்டப்பட தன் வாழ்க்கையைத் தந்த சகோதரி தான் அஸ்மா பிந்த் யசீத் பின் அஷ்குத்(ரலி). அவர்களின் இன்னொரு பெயர் உம்மு ஸல்மா(ரலி). இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து இடம் பெயர்ந்து மதினாவுக்கு வந்த பின் இவர்கள் இன்னும் பல பெண்களோடு வந்து பெருமானார்(ஸல்) அவர்களின் பைஅத் செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இவர்கள் பைஅத் செய்திட இறைவனின் தூதர்(ஸல்) அவர்களிடம் வந்த போது இறைவனின் தூதர்(ஸல்) அவர்கள் தங்கள் தோழர்கல் சிலருடம் அமர்ந்திருந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அதன் வழிகாட்டுதல்கள் வழி வாழ்ந்திட தயாராக இருப்பதாக உறுதி கூறிய இந்தச் சகோதரி பெருமானார்(ஸல்) அவர்களிடம்;

"நான் முஸ்லிம் பெண்களிடமிருந்து உங்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன். அல்லாஹ் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒன்று போலவே வழிகாட்ட உங்களை தூதராக அனுப்பியுள்ளான். நாங்கள் உங்கள் வழிகாட்டுதல்களின் வழி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் எங்களது உடல் பலம் ஆண்களின் உடல் பலத்திலிருந்து வேறுபட்டது. இதனால் அவர்கள் பல்வேறு சிறப்பான பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். நாங்கள் வீடுகளிலிருந்து குழந்தைகளை பராமரித்து வருகின்றோம். அவர்களின் வீடுகளையும் உடமைகளையும் பாதுகாத்து வருகிறோம். எங்களுக்கு அவர்களைப் போல் (ஆண்களைப் போல்) நற்கூலிகள் கிடைக்குமா?" எனக் கேட்டார்.

இதற்கு பெருமானார்(ஸல்) அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்;

"தன் கணவனின் அன்பும், திருபதியும் ஒரு பெண்ணுக்கு மிகவும் முக்கியம். அவள் ஒரு மனைவி என்ற அடிப்படையில் தனது கடமைகளை அக்கறையுடன் நிறைவேற்றினால், அவளுக்காக நிச்சயமாக ஆண்களுக்கு கிடைப்பதைப் போன்ற நற்கூலிகள் கிடைக்கும்.

இன்னொரு முறை அதே உம்மு சல்மா(ரலி) அவர்களிடம் இறைவனின் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பல உறுதி மொழிகளை வாங்கினார்கள். அப்போத் இந்த அன்பு சகோதரி இப்படிக் கூறினார்கள்;

"நாங்கள் உங்கள் கைகளில் பைஅத் எடுக்க விரும்புகின்றோம். உங்கள் கையை நீட்டுங்கள்."

இதற்கு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள்;

"நான் பெண்களின் கைகளைத் தொட்டு பைஅத் எடுப்பதில்லை." என்று கூறினார்கள்.

பெருமானார்(ஸல்) அவர்கள் பெண்களிடம் பைஅத் எடுப்பதை பொருத்தவரை அவர்கள் வாயால் கூறுவார்கள், பெருமானார்(ஸல்) அவர்களும் வாய் மொழியில் பொருந்திக் கொள்வார்கள்."

ஆண்களுக்கு நிகராக அல்லாஹ்விடம் கூலியை பெற்றிடுவதில் இந்த அன்புச் சகோதரி காட்டிய ஆர்வத்திற்கு அளவே இல்லை. ஹந்தக் என்ற அகழ் போரில் முஸ்லிம்களுக்குப் பணிவிடை செய்வதில் இந்தச் சகோதரி முன்னணியில் நின்றார். இந்தப் போர் இஸ்லாமிய வரலாற்று ஓட்டத்தை மாற்றியது என்பதை அனைவரும் அறிவர்.

ஹூதைபியா உடன் படிக்கையின் போது பைஅத்துல் ரிழ்வான் இந்தச் சகோதரியும் இடம் பெற்றார்கள். இந்த உடன்படிக்கையை அல்லாஹ்வே மகத்தான் வெற்றி எனக் கூறினான். கைபர் போரிலும் இந்தச் சகோதரி கலந்து கொண்டாள். இப்படி இஸ்லாமிய வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளிளெல்லாம் இந்தச் சகோதரி உண்டு.

பெருமானார்(ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னும் இஸ்லாத்திற்காக தொடர்ந்து உழைக்கும் பெண்மணியாய் திகழ்ந்தார்கள் இந்தச் சகோதரி. இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது யர்முக் என்ற போர். இதில் தான் சிரியா என்ற சிறப்பும் வளமும் நிறைந்த பகுதி இஸ்லாத்தின் ஆட்சியின் கீழ் வந்தது.

பைசாந்திய மன்னர் ஹிராக்கிளியஸ் மிகவும் அதிகமாக நேசித்த பூமி சிரியா. ஆகவே என்ன விலை தந்தும் இந்தப் பூமியை காப்பது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு நின்றான் அவன். இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் (2,40,000) போர் வீரர்களை அவன் ஒன்று திரட்டினான். நீண்டதொரு பயிற்சிக்குப் பின் முஸ்லிம்களை எதிர் கொள்ள நின்றான்.

முஸ்லிம்கள் தரப்பில் வெறும் 4000 (நாற்பதாயிரம்) பேர்கள் மட்டுமே இந்தப் போரில் கலந்துக் கொண்டார்கள். போர் பல நாட்கள் நீடித்தது. வெற்றியும் தோல்வியும் மாறி, மாறி வந்து கொண்டிருந்தது. முஸ்லிம் படைவீரர்களுக்குத் தண்ணீர் தருவது, காயம்பட்ட வீரர்களுக்கு மருத்துவம் செய்வது போன்ற பணிகளை மட்டுமே பெண்கள் முதலில் செய்து வந்தார்கள்.

இந்தப் பணிகளில் முன்னணியில் நின்றது உம்மு ஸல்மா(ரலி) அவர்கள் தான். போர்க்களத்தில் முஸ்லிம்களில் சிலர் பின் வாங்கிய போது இந்தச் சகோதரி இப்படிக் குரல் கொடுத்தார்கள்.

"எங்களை (முஸ்லிம் பெண்களை) அல்லாஹ்வை நிராகரிக்கும் இவர்களிடமா விட்டுச் செல்கிறீர்கள்."

இந்தக் குரல் கேட்டதும் புத்துணர்வு பெற்றவர்களாய் முஸ்லிம்கள் மீண்டும் களத்தில் குவிந்தார்கள். இத்தோடு நிற்கவில்லை. தங்களுடைய கைகளிலிருந்த ஈட்டியால் குத்தி எதிரிகளில் பலரை வீழ்த்தவும் செய்தார்கள் இந்தச் சகோதரி. சில நேரங்களில் கூடாரங்களில் அமைக்கப் பயன்படுத்தப்படும் தூண்களைப் பிடுங்கி எதிரிகளைத் தாக்கினார்கள். இந்த உம்மு ஸல்மா(ரலி) அவர்களின் கீழ் ஒரு பெண்களின் படையே நின்று போரிட்டது என்கின்றார்கள் யர்முக் போரை வரையும் வரலாற்று வல்லுநர்கள். போரின் பின்னணி படை இவர்களுடையது என்று பெருமையோடு கூறுகின்றார்கள் வரலாற்றாசிரியர்கள்.

அஸ்மா பிந்த் யசீத்(ரலி) அவர்கள் கூடாரத்தின் தூண் ஒன்றை தன் கைகளில் ஏந்திக் கொண்டு நடத்திய தாக்குதலில் ஒன்பது ரோமர்கள் மாண்டார்கள் என்பது பிரிதொரு வரலாற்றுக் குறிப்பு.

இந்த போருக்குப் பின் செல்வம் கொட்டிக் கொண்டே இருந்தது. சிரியாவை விட்டுப் பிரியும் போது 'ஏத்தனை எழிலும் வளமும் கொஞ்சும் சிரியாவை விட்டுப் பிரிய நேரிட்டு விட்டது" என்றானாம் பேரரசன் ஹிராக்கிளியாஸ். அந்தளவுக்கு அன்றைக்கு வளம் கொழிந்த பூமி அது. இந்த வளம், இந்த அன்புச் சகோதரியின் எளிய வாழ்க்கையை எள்ளளவும் பாதிக்கவில்லை. தன் இலட்சிய வாழ்க்கையில் தான் கொண்ட எளிமையை இந்த வீராங்கனை தனது இறுதி மூச்சு வரை காப்பாற்றிக் கொண்டார்களாம்.

இவர்களைப் போல் இந்தப் போரில் கையில் கிடைத்ததை எல்லாம் ஆயுதாம ஆக்கிக் கொண்ட ஏனைய சகோதரிகளும் எளிமையாக வாழ்ந்தார்கள். உண்மையைச் சொல்வதானால் அவர்கள் செல்வத்தின் தாக்குதலிலிருந்து தங்கள் எளிய வாழ்க்கையைத் தற்காத்துக் கொண்டார்கள். இயவர்கள் சிரியாவிலேயே இறந்தார்கள். (இன்றளவும் இவர்களின் அடக்கஸ்தலம் சிரியாவில் உள்ளதாம்) இந்தச் சகோதரிகளைப் பற்றித்தான் அன்றைய கவிஞன் ஒருவன் இப்படிப் பாடினானாம்:

"பைசாந்தியர்களுடைய ஆபாசங்களும், பாரசீகர்களுடைய ஆடம்பரமும், பாலைவனத்தின் எளிமையையும், விடுதலை வேட்கையையும் விழுங்கிட முடியவில்லை." இந்தப் பெருமைமிகு பாரம்பரியத்திற்கு சொந்தக்காரர்களான இன்றைய முஸ்லிம் பெண்கள் இப்படி சூளுரைக்கலாம்;

"இன்றைய சினிமாக்கள் தரும் ஆபாசமும் வேண்டாம். ஜாஹிலிய்யாவின் ஆடம்பரமும் நமக்கு வேண்டாம்."

இஸ்லாம் கூறும் எளிய வாழ்க்கையே நமக்குப் போது. என்றும் நல்ல முஸ்லிம் பெண்களாய் வாழ்ந்திடுவோம்! வரலாறு படைப்போம். இந்த உலகில் இஸ்லாத்தை நிலைநாட்டி, அதன் மூலம் பெண்களுக்கு இறைவன் வழங்கிய உரிமைகள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வோம்.

**எம்.ஜி.எம்.**




# திருச்சியில் நூல் அறிமுக நிகழ்ச்சி



**Braminists Bombed Muslims Hanged** - பிரானிஸ்டுகள் குண்டுகளை வைக்கிறார்கள் - முஸ்லிம்கள் தூக்கிலிடப்படுகிறார்கள் என்ற ஆங்கில நூலின் அறிமுக விழா Citizen Rights Forum மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு திருச்சியில் 23.06.2019 அன்று நடைபெற்றது.



அதில் வழக்கறிஞர்கள் கென்னடி, கம்ருதீன் மற்றும் தமிழகத்தின் மூத்தப் பத்திரிகையாளரும் வைகறை வெளிச்சம் மாத இதழின் ஆசிரியருமான மு.குலாம் முஹம்மத் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.



விழாவில் கலந்து கொண்ட மக்கள் ஆர்வத்தோடு நூலை வாங்கிச் சென்றனர்.

# இலவச மருத்துவ முகாம்





**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் சூரியா மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம். எஸ்.எம். நகர் பகுதியில் அமைந்துள்ள உசுமானியா மண்டபத்தில் நடத்தப்பட்டது (அல்ஹம்துலில்லாஹ்)**





தமிழ் மாநில முஸ்லிம் லீக் சார்பில் ரமலானில் இஃப்தார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.



அதில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். மந்தைவெளி தலைமை இமாம். கே.எம். இல்யாஸ் ரியாஜி அவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002